# உதயன்

சுடர் 30 | கதிர் 317 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 22, வெள்ளிக்கிழமை 09.10.2015


**ராணுவத்தின் பாலியல் வன்புணர்வு [...]ர்வதேச குற்றம் -போர்க் குற்றம்**

விசுவமடு பெண் கூட்டு வன்புணர்வு வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

சில இடங்களில் இன்று இடியுடன் கூடிய மழை

# ஏமாற்றியது ஐ.நா.

## [...]ாகாண சபையைப் புறந்தள்ளிவிட்டது என வடக்கு முதலமைச்சர் விக்கி காட்டம்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 9

ஐ.நா. சபையும், அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் வடக்கு மாகாண சபைக்குப் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கிவிட்டுப் பின்னர் ஏமாற்றியுள்ளனர் என்று குற்றம் சுமத்தியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

அத்துடன், மாகாண சபையைப் புறந்தள்ளி மத்திய அரசுடன் இணைந்தே ஐ.நா.வும், ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் செயற்பட்டதாகவும் முதலமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியிடம் வடக்கு மாகாணம் பற்றி 2003 ஆம் ஆண்டில் தயாரித்ததுபோல் முழுமை பக்.24

# தடுப்பில் இருக்கும் தமிழ் இளைஞரை உடன் விடுவியுங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் கோரிக்கை



கொழும்பு, ஒக். 9

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தொடர்பான விடயத்தைச் சட்ட ரீதியாக மட்டுமே பாராது, நடைமுறைக்குச் சாத்தியமான ரீதியிலும் கவனத்திலெடுத்து அவர்களை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசிடம் நேற்று வலியுறுத்தினார் எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தைக் கொலை செய்த கொலையாளி உள்ளடங்கலாக இலங் பக்.23

# பயங்கரவாதச் சட்டம் நீக்கப்படாதமை ஏன்?

## சபையில் சுமந்திரன் எம்.பி கேள்வி

கொழும்பு, ஒக். 9

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அரசு வழங்கிய வாக்குறுதிக்கமைய பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை என நேற்றுச் சபையில் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஐ.நாவில் அரசு எழுத்து மூலம் வழங்கிய வாக்குறுதிகளை செயல் வடிவாக்கி உண்மையாக மனப்பூர்வமாக நிறைவேற்ற வேண்டும் என்றும் இந்தச் செயற்பாடு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையை, ஏற்படுத்துவதாக அமையவேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற குற்றவியல் கருமங்களில் சீனாவுடன் பரஸ்பர உதவியளித்தல் [...]தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு வலியுறுத்திய அவர், மேலும் தெரிவிக்கையில்,

குற்றவியல் விடயத்தில் சீனாவுடன் இலங்கை ஏன் இந்த உடன்படிக்கையைச் செய்கிறது என எமக்குத் தெரியாது. இந்த ஒப்பந்தம் பற்றி எமக்குச் சரியாகப் புரியவில்லை.

சில நாள்களுக்கு முன்னர் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்டத்தரணிகள், நிபுணர்கள் இலங்கையில் நிறுவப்படவுள்ள நீதிமன்றப் பொறிமுறைக்குள் வர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றம், பொலிஸ் முதலான துறைகள் பற்றி விவாதிக்கப்படுகிறது.

பொதுநலவாய மற்றும் ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் இலங்கைக்குள் வந்து ஒத்துழைப்பு வழங்க இலங்கை அரசு உடன்பட்டுள்ளது.

இலங்கையின் நம்பகத் பக்.21

## வெளிநாட்டவர்கள் காணி வைத்திருக்க புதிய நடைமுறை

கொழும்பு, ஒக். 9

வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணி உரிமையை வைத்திருப்பதற்கு அரசு நெகிழ்வான கொள்கையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வெளிநாட்டவர்களின் முதலீடுகள் வருவதற்கான அரசின் முயற்சியில் இதுவும் அடங்குமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சார்க் நாடுகளின் பிரதிநிதிகளைக் கடந்த வாரம் கொழும்பில் சந்தித்தபோதே பக்.22

# மாவட்ட இணைப்பாளர் பதவி அதிகார பரவலாக்கத்துக்கு எதிர்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 9

அமைச்சரவை அந்தஸ்துக்கு இணையான மாவட்ட இணைப்பாளர்' பதவியை அறிமுகப்படுத்துவதன் ஊடாக, அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே இது தொடர்பில் ஜனாதிபதியின் நேரடிக் கவனத்துக்கு கொண்டு செல்வது என்று வடக்கு மாகாண சபையில் நேற்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்துக்கும், அமைச்சரவை அந்தஸ்துக்கு இணையான மாவட்ட இணைப்பாளர்' பதவி வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு மாவட்ட இணைப்பாளர் பதவியை - நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கி, மத்திய அரசு சகல விடயங்களிலும் தலைபோட எத்தனிக்கின்றது.

மத்திய அரசு, தனது நேரடிக் கட்டுப்பாட்டில் சகல விடயங்களையும் செயற்படுத்துவதற்காக இவ்வாறு செய்ய முனைகின்றது. இது அதிகாரப் பகிர்வுக்கு எதிரான - முரணான நடவடிக்கை. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. ஒரு பக்.24

# சர்வதேசம் ஊடாகச் சரணடைய முயன்றனர் விடுதலைப் புலிகள்

## இது நோர்வேக்கும் தெரியும் என்கிறார் கோத்தா



கொழும்பு, ஒக்.9

சர்வதேச சமூகத்தின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைய எத்தனித்தனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சரணடைதல் விவகாரம் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் எவ்வித நேரடி இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு போர்க்குற்ற விசாரணை தொடர்பில் அளித்த பிரத்தியேக செவ்வியில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இறுதிக் கட்டப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைந்தபோது, கொலை செய்யப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வெள்ளைக் கொடி ஏந்திவந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாகப் பிரதானமாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற காலத் பக்.22

# வடக்குக்கு இனிமேல் வரவேகூடாது சந்திரிகா

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைப்பின் தலைவராகப் பதவி வகிக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எந்த அருகதையும் இல்லை என்றும், அவர் இனிமேல் வடபகுதிக்கு இந்த அமைப்பின் தலைவியாக வருகைதரக் கூடாது என்றும் [...]ழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பிறிமுஸ் சிராய்வா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில், எதிர்க்கட்சித் தலைவர் தவராசாவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை மீது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைப்பின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இருக்கின்றார். ஜெயசிக்குறு என்று சொல்லி ஜனாதிபதியாக இருந்த காலத்தில் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டு, அனுருத்த ரத்வத்தையுடன் இணைந்து எங்களைப் படாத பாடு படுத்தி, செம்மணி தொடக்கம் பல்வேறு விதமான காரியங்களை அரங்கேற்றி முடித்ததன் பின்னர், பனங்காய் களியில் உடுப்புத் தோய்க்கும் அளவுக்கு எங்களுடைய மக்களை வறுமைக்குள் தள்ளி எல்லாம் செய்து முடித்த அவரை தேசிய நல்லிணக்கத்துக்கும் ஒருமைப்பாட்டுக்குமான தலைவியாக நியமித்திருக்கின்றார்கள்.

அரசு, நல்லிணக்கம் - சமாதானம் - ஒருமைப்பாடு என்றெல்லாம் பேசிக் கொண்டு இவ்வாறானவர்களை வைத்துக்கொண்டு. இதற்குப் பின்னால் எவ்வாறான பக்.22

# காலிக் கடலில் ஆயுதக் கப்பல்

## கடற்படை தளபதி தகவல்

கொழும்பு, ஒக்.9

காலிக்கு அப்பாலுள்ள கடற்பகுதியில், இலங்கைக் கொடியுடன் பயணித்துக் கொண்டிருந்த ஆயுதக் கப்பல் ஒன்று கடற்படையினரால் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன தெரிவித்தார்.

காலியில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் வைத்து இந்த ஆயுதக் கப்பல் கைப்பற்றப்பட்டது. இதில், 810 துப்பாக்கிகள் இருந்ததாகவும் அவர் குறிப்பிட் பக்.24

## அபிவிருத்திக் கூட்டங்களுக்கு அழைப்பில்லை

### மாகாண சபையில் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக். 9

நல்லாட்சி அரசு அமைக்கப்பட்ட பின்னரும் வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் மக்கள் அபிவிருத்தி தொடர்பான கூட்டங்களுக்கு, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அழைக்கப்படாமைக்கு மாகாண சபையில் நேற்றுக்கண்டனம் பக்.24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தொண்டர் ஆசிரியர் நியமனம் 6 மாதங்களுக்குள்

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் வடக்கு கல்வி அமைச்சர்



யாழ்ப்பாணம், ஒக்.9

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பான பிரச்சினைகளை ஆறு மாத காலத்துக்குள் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேரடிச் சட்டமூலம் எதுவும் இல்லை. எனவே புதிதாக அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை உருவாக்கி அதனூடாகவே இவர்களுக்கான தீர்வைப் பெறமுடியும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்துதருமாறு ஜனாதிபதியிடம் நேரடியாக வலியுறுத்தவுள்ளேன்.– இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.

இந்த விடயம் தொடர்பில் வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்கினேஸ்வரன் ஜனாதிபதியிடம் இரண்டு முறை தெரிவித்துள்ளார். தற்போது புதிய அரசு அமைந்துள்ளது. அவர்கள் பழைய கோரிக்கைகள் தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்று உறுதியாக கூறமுடியாது. எனவே மீண்டும் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவதற்காக நான் நேரடியாக அவரைச் சந்திக்கவுள்ளேன். – என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்று வடக்கு மாகாண சபையின் 36 ஆவது அமர்வு நடைபெற்றது. இதன்போது தமக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடமாகாண பேரவைச் செயலகம் முன்பாக யாழ்.மாவட்டம் தவிர்ந்த வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டராசிரியர்களால் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அவர்கள் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய ஆவணங்களையும் கையளித்தனர். அவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும்போதே வடக்கு அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வடமாகாண பேரவைச் செயலகம் முன்பாக கூடியிருந்த தொண்டராசிரியர்களை அமர்வுக்காகச் சென்ற எந்த அமைச்சரும் சந்திக்கவில்லை. அமர்வு முடிந்து வந்த வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தொண்டராசிரியர்க



ளைச் சந்தித்து கலந்துரையாடினார். அதன்பின்னர் அவர் வடக்குக் கல்வி அமைச்சரை அழைத்து தொண்ட ராசிரியர்களுடன் கலந்துரையாடி விளக்கமளிக்குமாறு தெரிவித்திருந்திருந்தார். அதன் பின்னரே வடக்குக் கல்வி அமைச்சர் மேற்குறித்த வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த வடக்கு கல்வி அமைச்சர், தற்போது வட மாகாணத்தில் 646 பேர் தொண்டராசிரியர்களாக உள்ளனர். இவர்களுக்கான நியமனத்தை அரசு தான் தீர்மானிக்க வேண்டும். நீங்கள் மட்டுமன்றி ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்களும், பகுதிநேர ஆசிரியர்களும் உள்ளனர். இவர்களுக்கான நியமனத் தீர்வுகளையும் வழங்க வேண்டியுள்ளது. 2013 ஆம் ஆண்டு உள்வாங்கப்பட்ட தொண்டராசிரியர்களில் விடுபட்ட 62 பேர் தற்போது தயார் செய்யப்படவுள்ள பட்டியல் மூலம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். இந்த வருடம் ஆசிரியகலாசாலையிலிருந்து வெளிவர உள்ளவர்களால் இந்தப் பட்டியலில் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்றார்.

அங்கு கூடியிருந்த தொண்டராசிரியர்களிடம் கருத்துக் கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது:–

நான்கு மாவட்டங்களிலிருந்தும் இன்று (நேற்று) ஒன்றுகூடியுள்ளோம். பத்து வருடங்களுக்கு மேலாக எந்தவிதமான ஊதியக் கொடுப்பனவுகளும் இன்றி ஆசிரிய சேவை செய்து வருகின்றோம். இன்றுவரை எமக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படாதமைக்கான காரணம் சரியாகத் தெரியவில்லை. கடந்த மூன்றாம் மாதம் வடக்கு மாகாண முதலமைச்சரின் வாசஸ்தலம் முன்பாகவும் ஆளுநர் அலுவலகம் முன்பாகவும் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தோம். எனினும் இது தொடர்பில் எதுவித பதிலும் தரப்படாத காரணத்தால் இப்போது மீண்டும் கூடியுள்ளோம். எம் சார்பாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் எம்மை தமது பிள்ளைகளாகக் கருதி நிரந்தர நியமனம் ஒன்றினை வழங்கி மிகுந்த துன்பத்துக்கு மத்தியில் வாழும் எமக்கான தீர்வைப் பெற்றுத் தர வேண்டும். – என்றனர்.

யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டராசிரியர்களால், முன்னெடுக்கப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தொண்டராசிரியர்கள் கலந்துகொண்டனர்.

(ற–ரி5,86)

## டிராக்டர் சில்லில் நசிந்து ஒருவர் சாவு

யாழ்ப்பாணம்.ஒக.9

மணல் ஏற்றிவந்த டிராக்டரில் இருந்து தவறி விழுந்தவர் சில்லுக்குள் அகப்பட்டு நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் பளை, தர்மக்கேணிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தர்மக்கேணியில் இருந்து டிராக்டரில் மணல் ஏற்றிக்கொண்டு வந்த கந்தசாமி செல்வகுமார் (வயது 24) என்பவரே தவறி விழுந்து சில்லில் நசிந்து உயிரிழந்தவராவர்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த–9–101)

## நீதிமன்ற நடவடிக்கையை நேற்று சட்டத்தரணிகள் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ்.குடாநாட்டிலுள்ள சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர். அதனால் குடாநாட்டிலுள்ள நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் இடம்பெறவில்லை. அத்தகைய வழக்குகள் வேறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டன.

பருத்தித்துறை சட்டத்தரணியின் வீட்டினுள் அத்துமீறிச் சென்ற கும்பல் அவரது வீட்டையும் பொருள்களையும் அடித்து நொருக்கி சேதப்படுத்தியிருந்தது. இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே நீதிமன்ற நடவடிக்கைகளை சட்டத்தரணிகள் புறக்கணித்தனர்.

யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் விடுத்த வேண்டுகோளையடுத்து நேற்று சட்டத்தரணிகள் நீதிமன்றுக்குச் செல்லவில்லை. அதனால் நேற்றைய தினத்தில் திகதி குறிப்பிட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டு மறு திகதியிடப்பட்டன.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களில் சட்டத்தரணிகள் நேற்று முன்னிலையாகியிருக்க வில்லை.

(ற–4,9,108)

தேச எல்லைகளைக் கடந்து போராடிய இளம் தலைவர் சேகுவேராவின் நினைவுதினம் நேற்று மக்கள் விடுதலை முன்னணியின் சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நேற்று மாலை 3மணியளவில் குறித்த நினைவு தின நிகழ்வுகள் இடம்பெற்றன. அதில் கியூபா நாட்டின் தூதுவர் லோரென்டினோ பெடிஸ்ரா, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் ரட்நாயக்க, பல்கலைக் கழக பேராசிரியர்கள், மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர்கள், கலைஞர்கள், சேகுவேரா ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். நேற்றயதினம் நடைபெற்ற நிகழ்வில் சேகுவேரா பற்றிய மேடைப்பேச்சுகள், கலை நிகழ்வுகள் என பல இடம்பெற்றன.

(ற–21)



## போதையில் சாரத்தியம்: ரூ. 112,500 அபராதம்

சாவகச்சேரி, ஒக்.9

மது போதையில் வாகனம் செலுத்திய 9 பேருக்கு ஒரு லட்சத்துக்கு 12 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்துள்ளது சாவகச்சேரி நீதிமன்றம்.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில், வாகனப் பதிவுப் புத்தகம், வாகன வரி, சாரதிய அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் தலைக்கவசம் என்பன இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 24 ஆயிரம் ரூபாவும், வாகனப் பதிவுப் புத்தகம், சாரதிய அனுமதிப் பத்திரம் காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப் புத்தகம் என்பன இன்றி வாகனம் செலுத்திய சாரதிக்கு 21ஆயிரம் ரூபாவும், மது போதையில், சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய ஐந்து சாரதிகளுக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதுடன், மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு சாரதிகளின் சாரதிய அனுமதிப் பத்திரங்களை மூன்று மாதங்கள் நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

வழித் தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வாகன சாரதிக்கு 20 ஆயிரம் ரூபாவும், கறுப்புக் கண்ணாடி பொருத்திய தலைக்கவசம் அணிந்த நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.(ற–9)

## அதிபர் போட்டிப்பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி

யாழ்ப்பாணம், ஒக். 9

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த அதிபர் தரம் – III போட்டிப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மதிப்பீட்டுக் கடமையில் உள்ள ஆசிரியர்கள், கல்வி மாணிப் பட்ட இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற–4,108)

## விபத்தில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் இறுதி நிகழ்வு நேற்று



கோப்பாயில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிவகுரு மணிமாறனின் பூதவுடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. கொழும்பில் இருந்து வந்திருந்த பொலிஸ் அணிவகுப்புக் குழு மரியாதையுடன் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

காலை 9.30 மணியளவில் அவரது வீட்டில் இருந்து ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்ட பூதவுடல் தாங்கிய பேழையை பருத்தித்துறை நகரப் பகுதியில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான – கொழும்பில் இருந்து வந்திருந்த பொலிஸ்மா அதிபரின் விசேட அணிவகுப்புக்குழுவினர் பொறுப்பேற்றனர். அங்கிருந்து இந்து மயானம் வரை அணிவகுப்பு மரியாதையுடன் கொண்டு செல்லப்பட்ட பூதவுடல் தாங்கிய பேழை சுப்பர்மடம் இந்து மயானத் தில் பூரண பொலிஸ் மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தரின் தொப்பி, இடுப்புப்பட்டி என்பன அவரது தந்தையிடம் கையளிக்கப்பட்டது.

(ற–4,109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# உ. கிழங்கு செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

## அதிக சிரத்தை எடுக்க வேண்டும் என்கிறார் விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக்.9

யாழ். குடாநாட்டில் இந்த முறை கூடுதலான விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையில் ஆர்வம் காட்டுகின்றனர். அத்துடன் புதிய புதிய இடங்களிலும் இந்தச் செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்குச் செய்கை மானிப்பாய், சாவகச்சேரி, மருதங்கேணி, கைதடி, கரவெட்டி, சங்கானை போன்ற இடங்களில் கடந்த போகத்தின் போது பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டதுடன் அது வெற்றியளித்திருந்திருந்தது.



அதையடுத்து அந்த விவசாயிகள் இம்முறை உருளைக்கிழங்குச் செய்கையை முன்னெடுப்பதற்குத் தயாராகி வருகின்றனர். இந்த உருளைக்கிழங்குச் செய்கைக்கான விதை உருளைக் கிழங்கைத் தருவித்து விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு மாவட்ட உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இதுவரைக்கும் ஆயிரத்து 250 அந்தர் விதை கிழங்குக்கு விவசாயிகள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். தொடர்ந்து விதை உருளைக்கிழங்குக்கு விவசாயிகள் பதிவை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுதொடர்பில் விவசாயத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கிருஸ்ணன் சிறீபாலசுந்தரம் தெரிவிக்கையில்:-

உருளைக்கிழங்கு என்பது கவனமாக உற்பத்தி செய்யவேண்டிய ஒரு பயிர். அது பராமரிப்பதற்கென்று முறைகள் உள்ளன. பராமரிப்பதற்கான செலவும் அதிகம். முறைப்படி பராமரித்தால்தான் சரியான முறையில் தரமான விளைச்சலைப் பெறமுடியும். ஆனால் உருளைக்கிழங்கு செய்கைக்காக பலர் விண்ணப்பிக்கின்றனர். எனினும் அப்படியான விண்ணப்பங்களை எடுத்துப் பார்க்கும்போது அவர்களின் வருமானம் உருளைக் கிழங்குச் செய்கைக்கு போதுமானதாக இல்லை. - என்றார்.

(ற-10,17)

# நாவற்குழியில் குடியமர்ந்த மக்கள் மலசலகூட வசதிகளின்றிச் சிரமம்

## அத்துமீறிக் குடியமர்ந்தால் ஒன்றும் செய்ய முடியா நிலை என்கின்றது தென்மராட்சி பிரதேச செயலகம்

சாவகச்சேரி, ஒக்.9

நாவற்குழி ஐயனார் கோவிலடி பகுதியில் தங்கியுள்ள மக்கள் போதிய மலகூட வசதிகள் இல்லாததால் பெரும் சுகாதார நெருக்கடிகளைத் தாம் எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவித்தனர்.

எனினும் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த தென்மராட்சி பிரதேச செயலகம் குறித்த மக்கள் அங்கு அத்துமீறிக் குடியமர்ந்துள்ளமையாலேயே அவர்களுக்கு மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியது.

இந்தப் பகுதியில் முன்னர் 120 குடும்பங்கள் வசித்து வந்தன எனவும் தற்போது யாழ்ப்பாணம் அரச காணியிலிருந்த மேலும் 25 குடும்பங்கள் அந்தப் பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் 500க்கும் மேற்பட்டோர் அங்கு வசிக்கும் நிலையில் போதிய மலசல கூட வசதிகள் இன்மையால் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். இயற்கைக் கடன்களைக் கழிக்கப் பற்றைகளை நாடவேண்டிய சூழ்நிலையே காணப்படுகின்றது என்று கூறிய அவர்கள் தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர். அதையடுத்து அந்தப் பகுதியைப் பார்வையிட்ட பொது சுகாதார பரிசோதகர் வழங்கிய அறிக்கை தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. - என்று பதிலளிக்கப்பட்டது. தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இது தொடர்பில் கேட்டபோது:-

குறித்த குடும்பங்கள் அத்துமீறி அங்கு குடியேறியுள்ளன. அதனால் அவர்களுக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. மேலதிக நடவடிக்கைக்காக உரிய தரப்புகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குடும்பங்களின் குடிதண்ணீர் தொடர்பிலும் கோரிக்கை விடுத்திருந்தனர். அவர்களுக்கு தற்போது பிரதேச சபையின் உதவியுடன் நாளாந்தம் 2 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த காணி வீடமைப்புத் திணைக்களத்துக்கு உரியது. இந்தக் காணியில் தென்னிலங்கைப் பகுதி மக்களுடன் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பலரும் அத்துமீறி குடியமர்ந்துள்ளனர். இவர்களின் நிலை தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள அரச காணியில் குடியமர்ந்திருந்த 25 குடும்பங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு நாவற்குழியில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# தகவல் அறியும் உரிமை குறித்த கலந்துரையாடல் நாளை பரந்தனில்

யாழ்ப்பாணம், ஒக். 9

ஊடக ஊழியர்களின் தொழிற் சங்க சம்மேளனத்தின் ஆதரவில் - 'தகவல் அறியும் உரிமை யாருக்காக? எதற்காக?' என்ற பொருளில் நாளை சனிக்கிழமை பத்தாம் திகதி பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் மக்கள் கலந்துரையாடல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

வட மாகாண தொழில்சார் ஊடகவியலாளர் சங்கமும், ஊடக ஊழியர் தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து மக்கள் கலந்துரையாடலை நடத்துகின்றன.

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் மக்கள் தொடர்பாடல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ரகுராம்-

யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி எம். கோஷலி-

யாழ்.பல்கலைக் கழக மொழியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சாமிநாதன் விமல்-

ஆகியோர் கருத்துரை வழங்குவர். (அ)

# நெருப்புக்காய்ச்சல் தடுப்பு மருந்து ஏற்றுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.9

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதனால் 5 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட அனைவரையும் தடுப்பு மருந்து ஏற்றிக்கொள்ளுமாறு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் ஆலோசனைக் கமைய தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடுகள் ஒவ்வொரு சனிக்கிழமையும் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரி[illegible] பட்ட இட[illegible] நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

BSC Colombo
A Division of the London School of Commerce Group of Colleges
2014 THE AWARDS AWARD WINNER
Anglia Ruskin University

Study on a Programme Leading to a British Degree



MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
Duration: 18 months (Part-Time)

Why Choose BSC?
- Study for a globally recognized British qualification. LSC courses are moderated by the University, leading to a degree awarded by Anglia Ruskin University.
- Renowned international academics.
- Affordable fees with instalment payment options.
- Access to over 70,000 online study materials.
- State-of-the-art WiFi enabled campus.
- Join the London School of Commerce (LSC) Group of Colleges and be part of a global community of more than 10,000 students and alumni from over 130 countries.

Course Fee
LKR 490,000 approx.*
*UK fee of £ 1,350 plus local fee of Rs.210,000

Contact
Nithershan : 0777 310 672

Course Commences : November 2015

LSC London
British School of Commerce
19, Mcleod Road, Colombo 4, Sri Lanka.
Tel: +94 11 2595995/6 Fax: +94 11 2595919
www.bsccolombo.edu.lk www.lsclondon.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. ஆசிரியர்களின் இடமாற்றங்கள் நிறுத்தம்

## கல்விப் பணிப்பாளரின் தீர்மானத்தால் ஆசிரியர்கள் விசனம்

மாங்குளம், ஒக்.9

முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. முல் லைதீவு வலயக் கல்விப் பணிப்பாளர் கடிதம் மூலம் இது குறித்து அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கல்விவலயத்துக்கு குறித்த ஆசிரியர்களின் தேவை மிகவும் அவசியமாகவுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமது அனுமதியின்றி – விருப்புக்களைக் கேட்காது இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டமை குறித்து ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட காலப் பகுதியை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு மாவட்ட இடமாற்றம் பெறுவதற்கான தகுதிகள் இருக்கின்றன என்று ஆசிரியர் இடமாற்றசபையால் அறிவித்துள்ளபோதும் தமது இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இடமாற்றம் வழங்கப்பட்ட சமயம் இடமாற்றத்துக்கு சிலநாள்களே இருந்தன. ஆயினும் அதற்காக அதிகமாக ஒருவருடம்வரை கடமையாற்றியுள்ளோம். அதனால் பல ஆசிரியர்கள் உள ரீதியாகப் பாதிப்படைந்துள்ளனர். கல்விப் பணிப்பாளர் தனது தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இது தொடர்பில் கல்விப் பணிப்பாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:–

கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பாதிப்புக்குள்ளான எமது வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குத் தங்களாலான சேவையை வழங்கியமையை எமது சமூகம் நினைவு கூருகின்றது. எமது வலயப் பாடசாலைகளுக்கு தங்களின் சேவை மேலும் ஒரு வருடத்துக்குத் தேவை என்பதைக் கருதி இடமாற்ற விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாணவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு தங்களின் சேவையை எதிர்வரும் 31.12.2016 வரை வழங்குமாறு வேண்டுகின்றோம். அதற்காக முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2017ஆம் ஆண்டுக்கான இடமாற்றத்தில் தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.– என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள ஆசிரியர்கள்:–

நாம் எமது வீடு, குடும்பம் எல்லாவற்றையும் விட்டே இவ்வளவு காலம் சேவையாற்றியுள்ளோம். தமது பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவது ஒவ்வொரு பெற்றோரதும் கடமயாகும். ஒவ்வொரு கிழமையும் வீடு சென்று வருவதால் நாம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றோம். இவற்றை விட குடும்பங்களிலும் தேவையற்ற பிணக்குகள் ஏற்படுகின்றன. எனவே இந்தக் கல்வி வலயத்தில் சேவையாற்ற விரும்பும் ஆசிரியர்களின் விவரத்தைத் திரட்டி இந்தத் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்– என்றனர்.

(ந–422)

## ஓட்டோ – பஸ் விபத்தில் இருவர் படுகாயம்

வவுனியா,ஒக்.9

வவுனியா – கண்டி வீதியில் சாந்தசோலை சந்தியில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஓட்டோ மற்றும் தனியார் பஸ் விபத்தில் ஓட்டோவில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காகப் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த நபர் ஒருவரும், பயிற்சி வழங்கிக்கொண்டிருந்த பயிற்றுவிப்பாளரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் நிலையத்தின் பயிற்றுவிப்பாளர் கண்டி வீதியில் தாண்டிக்குளம் சாந்தசோலையில் பயிற்சிகளை வழங்கிக் கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்திலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற தனியார் பஸ் பாதசாரதிகள் கடவையில் முந்திச் செல்ல முற்பட்டபோது ஓட்டோவுடன் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.

அதில் பயிற்றுவிப்பாளரும், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அனுமதிபெற்று 'எல்' போட் எடுத்துக் கொண்டவரும் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க் கப்பட்டுள்ளார்.

(ஐ)

## கவனிப்பாரற்றிருக்கும் நீர்வேலி - கரந்தன் வீதி

### போக்குவரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமத்தில்



யாழ்ப்பாணம், ஒக்.9

நீர்வேலி – கரந்தன் வீதி சுமார் 20 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப் படாது உள்ளது என்று கவலை தெரிவித்த அந்தப் பகுதி மக்கள், இது தொடர்பில் உரிய தரப்பினருக்குப் பலமுறை தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

நீர்வேலி கரந்தன் வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதி சுமார் 20 வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படவில்லை. பாடசாலை மாணவர்கள், வியாபாரிகள் வேறு தொழிலுக்குச்செல்வோர் எனப் பலர் இந்த வீதியூடாகத் தினமும் பயணிக்கின்றனர். ஆயினும் இது குறித்து எவரும் கவனம் செலுத்துகிறார்கள் இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

பஸ் தேவைக்காக பலாலி வீதிக்கு செல்லவேண்டும் என்றால்கூட இந்த வீதியைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டிய அந்தப் பகுதி மக்கள் பகல் வேளைகளில் கூட இந்த வீதியால் பயணம் செய்வது கடினம். இரவில் பிரயாணம் செய்வது நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்றும் தெரிவித்தனர்.

மழைகாலம் நெருங்குகின்றது. வீதி முழுவதிலும் குண்டும் குழியுமாக காணப்படுகின்றன. மழை வெள்ளம் தேங்கி நிற்கும். எத்தனையோ அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்தோம். ஒருவித நடவடிக்கையும் இல்லை. போக்குவரத்துச் செய்யும் மக்களின் நிலையை கருத்திற் கொண்டு இந்த வீதியை புனரமைத்துத் தாருங்கள் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ந–10)

## இனந்தெரியாத நபரின் தாக்குதலில் யுவதி காயம்

கிளிநெச்சி, ஒக்.9

பூநகரி முக்கொம்பன் பிரதேசத்தில் யுவதி ஒருவர் இனந்தெரியாத நபர் தாக்கிக் காயமடைந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் பூநகரி முக்கொம்பன் 10 ஆம் கட்டைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

யுவதி தனது வீட்டில் இருந்து வேலைக்காக பரந்தன் நோக்கி சென்று கொண்டிருந்த சமயத்தில் முக்கொம்பன் இந்துமயானத்துக்கு அருகாமையில் வைத்து முகத்தைக் கறுப்புத்துணியால் மறைத்துக் கட்டிய நபர் ஒருவர் கொட்டன் ஒன்றால் தன்னைத் தாக்கினார் என்று யுவதி உறவினர்களிடம் தெரிவித்துள்ளார்.

குறித்த யுவதி தலையிலும் கையிலும் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந–ரி3)

## மோ.சைக்கிளுக்காக காத்திருக்கும் உள்ளூராட்சி பெண் உறுப்பினர்கள்

சாவகச்சேரி, ஒக்.9

உள்ளூராட்சிச் சபைகள் கலைக்கப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் சபை உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் அதற்காகப் பணம் செலுத்திய பெண் உறுப்பினர்களுக்கு இது வரை மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் அரசால் அரச பணியாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டிருந்தன. உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பின்னர் இந்த உறுப்பினர்களையும் பணம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டதையடுத்து ஆண், பெண் உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளுக்குரிய பணம் செலுத்தினர்.

அதையடுத்து விண்ணப்பித்த ஆண் உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. யாழ். மாவட்ட உள்ளூராட்சிச் சபைகளின் 7 பெண் உறுப்பினர்களுக்குப் பின்னர் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவர்கள் பணம் செலுத்தி மூன்று மாதங்களின் பின்னர் சபைகள் கலைக்கப்பட்டன.

அதன்பின்னர் இன்றுவரை அந்த மோட்டார் சைக்கிள்கள் பெண் உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ந–9)

## சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக்.9

மாவை ப்ருந்தகானலய அறநெறி மற்றும் இசை மன்றமும் இணைந்து நடத்தும் சிறுவர் தினவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு அகில இலங்கை சமாதான நீதிவான் திருமதி கோ.விஜயராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிவடக்குப் பிரதேச செயலகத்தின் கலாசார உத்தியோகத்தர் திருமதி தா. செல்வகுமாரும் சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி க.சகிபரனும், கௌரவ விருந்தினராக திருமதி பா.ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ந–ரி6)

## ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களே பெறுமதி வாய்ந்தவர்கள்

### ஜோன்.பொஸ்கோ வைரவிழா நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.9

சிறுபிள்ளைகளுக்குக் கற்பித்தல் என்பது ஒரு இலகுவானதும் சாதாரணதுமான விடயம் எனப் பலர் கருதுவதுண்டு. ஆரம்பக் கல்லூரி ஆசிரியர்களை ஏனைய ஆசிரியர்களுடன் ஒப்பீடு செய்யும் போது ஆரம்பக் கல்லூரி ஆசிரியர்களைச் சற்றுத் தரக் குறைவானவர்களாக எடுத்துக் கூறுவதை நான் பல இடங்களில் அவதானித்திருக்கின்றேன்.

'ஓ!ப்ரைமரி ரீச்சரா?' எனச் சற்று இளக்காரமாக குறிப்பிடுவதையும் நான் கேட்டிருக்கின்றேன். இது முற்றிலும் தவறானதொரு கூற்றாகும். ஆசிரியர்களில் மிகப் பெறுமதி வாய்ந்தவர்களும் போற்றப்பட வேண்டியவர்களும் இந்தஆரம்பப் பாடசாலைகளின் ஆசிரியர்களே என்றால் மிகையாகாது.– இவ்வாறு வட மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் 60ஆவது ஆண்டு வைர விழா நிறைவு விழா புதன் கிழமை நடைபெற்றது. அங்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:

ஆசிரியர்களில் மிகப் பெறுமதி வாய்ந்தவர்களும் போற்றப்பட வேண்டியவர்களும் ஆரம்பப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் தான். இந்த ஆசிரியர்களால் இடப்படுகின்ற விசாலமானதும் உறுதி மிக்கதுமான அத்திபாரமே இடைநிலை மற்றும் உயர்நிலையில் பிள்ளைகளை மிகச்சிறந்த தேர்வு மட்டங்களை அடையவைக்கின்றது. இந்தப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைப் பயின்று இப்போது மருத்துவம் மற்றும் பொறியியல் பீடங்களுக்குத் தெரிவாகியுள்ள மாணவ, மாணவியர்கள் வைர விழா நிகழ்வுகளில் முனைப்புடன் தற்போது செயற்பட்டு வருவது எனக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் மருத்துவபீடங்களுக்கும் பொறியியற் பீடங்களுக்குந் தெரிவாகிவிட்டார்கள் என்ற மமதையில் தமது ஆரம்பப் பாடசாலையை மறந்து விடவில்லை.

ஆரம்பப் பாடசாலைஆசிரியர்கள் தம்மிடம் கல்விகற்கின்ற மாணவ மாண்வியரை ஒரு கோழி தன் குஞ்சுகளை எவ்வாறு தனது இறக்கைகளுக்குள் பேணிப் பாதுகாக்கின்றதோ அதேபோல அவர்களைப் பேணி பாதுகாப்பது மட்டுமன்றி அவர்களுக்கான கல்வி அறிவூட்டல்களையும் தமது கனிவான மொழிநடை மூலமாக அவர்கள் மனதில் பதிக்கின்ற ஒரு சிறப்பான தன்மையையும் நாம் காணலாம்.

அறிவு என்பது வேற்றுமைகளை வெளிப்படுத்தும். அன்பு என்பது வேற்றுமைகளை ஊடறுத்து சகலதையுந்தன்பால் ஈர்க்குந் தன்மையது. இந்தப் பாடசாலையின் சிறப்புக்கள் பற்றிபலர் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றேன். யாழ் புனித ஜோன் பொஸ்கோவித்தியாலயம் கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் முன்னணிவகிப்பதாலேயே ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கை கொண்ட மாணவர் கள் ஐந்தாம் ஆண்டுபுலமைப் பரீட்சையில் சித்தியடைவது மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட மாணவன் 199 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் சாதனைபடைப்பதற்கு பாடசாலைவித்திட்டுள்ளது. இந்த முறையும் 228 பிள்ளைகளில் 133 பேர் பரீட்சையில் சித்திபெற்றுள்ளதாகவும் அறிகின்றேன். யாவருக்கும் எனது பாராட்டுக்கள்.– என்றார்.

(ந–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வை எட்ட கிட்டியுள்ளது சந்தர்ப்பம்

## மாதுலுவாவே சோபித தேரர் சுட்டிக்காட்டுகின்றார்

கொழும்பு, ஒக்.9

தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வை எட்டுவதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.அதைப் பயன்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். – இவ்வாறு கோட்டே நாகவிஹாரையின் விகாராதிபதியும், சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவருமான மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித் துள்ளார்.

தமிழ் மக்களை சம பிரஜைகளாக மதித்தாலே பாதிப் பிரச்சினைக்கு தீர்வைக் கண்டுவிடலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டும் இன்று வரையில் அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவித ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலைமை தொடர்பில் கருத் துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள் ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-


நாட்டில் நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதும், நீண்ட காலமாக நாட்டில் நிலவும் இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண வேண்டும் என்பதும் எம் அனைவரினதும் பிரதான எதிர்பார்ப்பாகும். அதற்கான முயற்சிகளை ஒருசிலர் மேற் கொண்டிருந்தபோதிலும் கடந்த காலத்தில் பலர் நாட்டில் சமாதானம் ஏற்படுவதைக் குழப்பும் வகையிலேயே செயற்பட்டனர்.

எனினும் கடந்த காலத்தில் இனவாத அரசு மற்றும் இனவாத அமைப்புகளை வைத்துக்கொண்டு நாட்டில் குழப்பங்கள் நிகழ்த்தப்பட்ட நிலையில் எம் அனைவரினதும் போராட்டதால் நாட்டை மீட்டெடுத்தோம்.

நாட்டில் ஜனநாயகத்தையும் அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் அனைவரையும் எம்முடன் இணைத்துக்கொண்டு நல்லாட்சி ஒன்றுக்கான அடித்தளத்தை உருவாக்கினோம். அந்த மாற்றமானது இன்று பல நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவராக தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் சர்வதேச நிலைப்பாடு முழுமையாக மாறியுள்ளது. இலங்கை மீது கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த அழுத்தங்களை இந்த ஆட்சியில் குறைத்துக்கொள்ள முடிந்துள்ளது. அதேபோல் நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் அற்றுப் போயிருந்த மக்களின் ஜனநாயக உரிமைகளும், சுயாதீன செயற்பாடுகளும் இப்போது மக்களுக்கு மீண்டும் கிடைத்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஒன்றிணைந்த ஆட்சியால் இன்று ஜனநாயகம் வென்றெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே நாம் வென்றெடுத்த ஜனநாய கத்தை தக்க வைக்க வேண்டுமாயின் நாட்டுக்குப் பொருந்தக்கூடிய நல்லதொரு அர சியல் தீர்வு அவசியமாகும். இப்போதிருக்கும் சூழ்நிலையில் நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.



> **நாட்டில் ஜனநாயகத்தையும் அமைதி யையும் சமாதானத்தையும் விரும்பும் அனைவரையும் எம்முடன் இணைத்துக்கொண்டு நல்லாட்சி ஒன்றுக்கான அடித்தளத்தை உருவாக்கினோம். அந்த மாற்றமானது இன்று பல நல்ல விளைவுகளை ஏற் படுத்தி வருகின்றது.**

அனைத்துக் கட்சிகளும் இணக்கப்பாட்டு ரீதியில் செயற்படத் தயாராக உள்ளன. ஆகவே அதைப் பயன்படுத்தி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். அதேபோல் இந்த நாட்டில் தமிழ் மக்களும் சம பிரஜைகள். அவர்களுக்கும் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளும் உள்ளன என்பதை அனைவரும் தெளிவாக விளங்கிக் கொண்டால் நாட்டில் பாதிப் பிரச்சினைக்குத் தீர்வைத் கண்டுவிடலாம் – என்று தெரிவித்துள்ளார். (ற)

# அடிப்படைவாதத்துக்கு இடமளிக்க முடியாது

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.9

நாட்டில் இனிமேல் எந்தவித அடிப்படைவாதத்துக்கும் இடம்கொடுக்க முடியாது என தேசிய கலந்துரை யாடல்கள் அமைச்சரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மத்திய கொழும்பு மகாவித்தியாலய வீதியின் 36ஆம் தோட்டத்தில் அமைந்துள்ள இந்துக் கோவிலின் பூஜைகள் மற்றும் தேர்த் திருவிழா தொடர்பில் சில சக்திகளினால் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்த நிலையில் இது குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போதே இதனை அவர் தெரிவித்திருந்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குறித்த ஆலயத்துக்கு பூரண பொலிஸ் பாதுகாப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளேன். கடந்த காலத்தில் பொதுபல சேனா போன்ற அடிப்படை வாதிகள் இந்த நாட்டின் பள்ளி வாசல்களுக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி, இஸ்லாமிய மக்களின் மத சுதந்திரத்துக்கு ஊறு விளைவித்திருந்தனர். இந்த நாட்டு இந்து, இஸ்லாமிய, பௌத்த, கத்தோலிக்க மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தஎவரையும் அனுமதிக்க முடியாது – என்றார். (ற)

# சாவுத் தண்டனை நடைமுறை; அரசுக்குள் கருத்து முரண்பாடு

## சபையில் ஆதரவாகவும் எதிராகவும் கருத்து

கொழும்பு, ஒக். 9

சிறுவர்கள்,பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம், கொலை முதலான குற்றச்செயல்களுடன் தொடர் புடையவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் எனவலியுறுத்தி ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவால் கொண்டுவரப்பட்ட யோசனைக்கு ஆதரவாகவும் எதிராகவும் நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கருத்து வெளியிடப் பட்டுள்ளது.

இதில் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சாவுத் தண்டனைக்கு எதிராக கருத்து வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், மேற்படி யோசனைக்கு எதிராக கருத்து வெளியிட்டால் சிக்கல் ஏற்பட்டுவிடும் என்பதால் மேலும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடுநிலைப்போக்கில் கருத்து வெளியிட்டதையும் சபையில் கேட்கக்கூடியதாக இருந்தது.

நாடாளுமன்றம் பிற்பகல் ஒரு மணிக்குப் பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, விசேட கூற்று ஆகியன முடிவடைந்த பின்னர் சபை ஒத்திவைக்கப்பட்டது.

இதையடுத்து,சிறுவர்கள்,பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், கொலை முதலான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்தக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச் சந்திரவால் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை கொண்டுவரப்பட்டது.

பிரேரணைமீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய அவர் சாவுத் தண்டனை நடை முறைப் படுத்தப்படவேண்டும் என வலியுறுத்தி, அதற்கான காரணங்களை பட்டியலிட்டிக்காட்டிப் பேசினார்.

அதனைத்தொடர்ந்து பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மேற்படி பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றினார். அவரும் பிரேரணைக்குச்சார்பாகவே கருத்து வெளியிட்டார்.

**உடன் வேண்டாமே**

இந்தவிவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திர சிறி கஜதீர இலங்கையில் ஆயிரத்து 113 சாவுத் தண்டனைக் கைதிகள் உள்ளனர். இவர்களில் 621பேர் மேன்முறையீடு செய்துள்ளனர். 492 பேர் மேன்முறையீடு செய்யாதுள்ளனர். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச் சாட்டில் 190 கைதிகளும், பெண்கள் மீதான துஷ்பிரயோகம் குறித்தான குற்றச் சாட்டில் 812 கைதிகளும் உள்ளனர். அனைத்து குற்றங்களின் பின்னணியிலும் 82 சதவீதத்துக்கும் அதிகம் மதுபோதையே காரணமாக உள்ளது. எனவே, இவ்வாறான நிலையில் எமது சிறுவர் சமூகத்தை பாதுகாக்கக் கல்வி அடிப்படையில் வியூகம்மிக்க மாற்றம் தேவை. இன்று மனிதாபிமானம் இல்லாமல் போயுள்ளது. மனிதன் மிருகமாகும் நிலை உருவாகிவருகிறது. இந்த நிலையிலிருந்து சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டும். இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும். பின்னர் சாவுத் தண்டனை குறித்து பேசலாம்–என்றார்.

**சபையின் கவனத்துக்கு**

சாவுத் தண்டனை தொடர்பான விடயத்தை நான் இந்தச் சபையின் கவனத்துக்கே கொண்டுவருகின்றேன். பொலிஸ் தடுப்பிலுள்ள சந்தேக நபர்கள் சித்திரவதைக்குட் படுதல், இறத்தல், தப்பித்துச் செல் லும்போது துப்பாகியால் சுடப்பட்டுக் கொலை செய்யப்படுதல் முதலான விடயங்கள் குறித்து நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று இவ்விவாத்தில் உரையாற் றிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவுப் ஹக்கீம் தெரிவித்தார்.

**சாவுத் தண்டனை கட்டாயம் வேண்டும்**

யாழ்.குடாநாட்டில் மாணவி வித்தியா தென்பகுதியில் 5 வயது சிறுமி சேயா, இன் னுமொரு இரண்டரை வயது சிறுமி என சிறுமிகள் பாலியல் வன் கொடுமைக்குட்படுத்தப்பட்டு படு கொலை செய்யப்பட்டுள்ளனர். சிங்கபூர், ஜப்பான், மத்தியகிழக்கு நாடுகளில் சாவுத் தண்டனை நடைமுறையில் உள்ளது. அமெரிக்காவின் 31 மாநிலங்களில் சாவுத் தண்டனை நடைமுறைப்படுத்தப் படுகிறது. எனவே, இலங்கையிலும் குற்றச்செயல்களைத் தடுக்க இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு ஆதரவளியுங்கள்' என்று கோரிக்கை விடுத்தார் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க.

**இறுதி நடவடிக்கை பற்றி முதலில் சிந்திக்கக்கூடாது**

சாவுத் தண்டனை தொடர்பாக பேசப் படுகிறது. ஆனால், அதற்கு முன்னதாக குற்றச் செயல்கள் தொடர்பில் இடம் பெறும் பொலிஸ் விசாரணைகள், நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து ஆராய வேண்டும். அவற்றை விடுத்து இறுதி விடயமான தண்டனை பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், அதற்கு முன் னர் இடம்பெறும் விடயங்கள் குறித்து பேசுவதில்லை. முதலில் செய்ய வேண்டியதை விடுத்து , இறுதி விடயத் தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது பொருத்தமானதல்ல.

அமெரிக்காவில் 31 மாநிலங்களில் சாவுத் தண்டனை நடைமுறைப் படுத்தப்படுகிறது. 19 மாநிலங்களில் சாவுத் தண்டனை நடைமுறைப் படுத்தப் படுவதில்லை. அமெரிக்காவில் 1991 முதல் 2013 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், சாவுத் தண்டனை நடைமுறைப் படுத்தப்படாத மாநிலங்களைவிட, சாவுத் தண்டனை நடைமுறைப் படுத் தப்படும் மாநிலங்களில்தான் மரணங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. 1991 ஆம் ஆண்டு 7 வீதமாக இருந்த இந்தத் தொகை, 2013 ஆம் ஆண்டில் 22 வீதமாக அதிகரித்துள்ளது. எனவே, நாம் இவை குறித்து அவதானம் செலுத்த வேண்டும். தண்டனை குறித்து பேசுவதைவிட, அதற்கு முன்னர் இடம்பெறும் செயற்பாடு கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ண .

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்தன தேரர், உலகிலேயே தென்னாபிரிக்காவில் தான் அதிகளவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. அதற்கு அடுத்தப்படியாக இந்தியாவில் நிலைமை மோசமாகவுள்ளது. தாய்லாந்து, வியட்நாம், பிரேசில் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது நாட்டு நிலைமை மோசமாகவில்லை. ஆனால், மோசமான திசையை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றவேண்டும். இதற்கான ஒரே வழி சாவுத் தண்ட னையா?

உணவுப் பழக்கவழக்கம், சமூக மாற்றம் உள்ளிட்ட விடயங்கள் பற்றி யும் நாம் கவனம் செலுத்தவேண் டும். உணர்ச்சியைத் தூண்டும் வகையிலான உணவுப் பழக்கம் அதிகரித்துள்ளது. இன்று 8 வயதிலேயே சில சிறுமிகள் பருவமடையும்நிலை இருக்கிறது. இதற்கு உணவுப் பழக்க வழங்கமே காரணமாகும்.

சாவுத் தண்டனை விதிக்கப்பட் டுள்ள கைதிகளுள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்புடைய கைதிகள் சொற்ப அளவிலேயே இருக்கின் றனர். ஏனைய விவகாரங்களாலேயே குற்றச் செயல்கள் அதிகரித் துள்ளன– என்றார்.

அத்துடன், பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா சாவுத் தண்டனை நடைமுறைக்கு எதிராக கருத்து வெளியிட்டார். அதற்குரிய காரணங்களையும் அவர் பட்டியலிட்டுக் காட்டிப் பேசினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கருணாசேன பரணவித் தாரன ஹிருணிகாவின் யோசனையை நிராகரிப்பதாக குறிப்பிட்டார். அவரும் தான் ஏன் இதை அதனை நிராகரிக்கிறார் என்பதற்கான காரணங்களைச் சபையில் விவரித்தார்.

அதேவேளை, அமைச்சர் சஜித் பிரேமதாஸ, நளின் பண்டார, சுமேதா ஜயதிஸ்ஸ, பிரதியமைச்சர் சுதர்சினி பெர்ணான்டோ புள்ளே ஆகியோர் சாவுத்தண்டனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** கதையில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஆடம்பர எண்ணம் மனதில் மேலோங்கும். புத்திரர்களின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

**இடபம்:** திறமையுடன் செயற்பட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர் வரவால் கலகலப்பு உண்டாகும்.

**மிதுனம்:** சொந்தப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். அத்தியாவசிய செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். பெற்றோரின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நவீன உத்தியால் வருமானம் உயரும். சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு வரும். அரசியல்வாதிகள் பதவிபெற புதிய வாய்ப்புக் கிடைக்கும்.

**சிங்கம்:** அவசரப்பணி காரணமாக, வெளியூர் செல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி அளிக்கும். குடும்பத் தேவைக்கான நடைமுறைச் செலவு கூடும். பணியாளர்கள் பணி விடயமாக பயணம் செல்வர்.

**கன்னி:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு பாராட்டு வெகுமதி வந்து சேரும். பெண்கள் மனம்போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** சிந்தனை, செயலில் புதிய மாற்றம் உண்டாகும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். மனைவியின் அன்பைப் பெற்று, மனம் மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** இலட்சிய நோக்கில் செயற்படத் தொடங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

**தனுசு:** பெருந்தன்மையுடன் அனைவரிடமும் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்பச் செலவில் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

**மகரம்:** புதியவர்களின் நட்புக் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் இலாபமும் அதிகரிக்கும். பெண்கள் கலையம்சம் மிக்க பொருள்களை வாங்குவர். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** வாழ்வில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை அளிக்கும்.

**மீனம்:** குடும்பத்தினரின் கருத்தை ஏற்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். பெண்கள் எவருக்காகவும் பணப் பொறுப்பை ஏற்க வேண்டாம். வாகனப் பயணத்தில் கவனமாக இருப்பது அவசியம்.

# பொலிஸாக வரும் சிம்ரன்



நடிகை சிம்ரன் கொஞ்சநாள்களுக்கு முன்பு, தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் தொடங் கினார்.
தொலைக்காட்சி தொடர்களுடன் திரைப்படங்களையும் தனது நிறுவனம் தயாரிக்கும் என அப்போது அறிவித்திருந்தார். அந்த அறிவிப்பை வரும் மாதத்தில் நடைமுறைப்படுத்தவிருக்கிறார் அவர்.
சிம்ரனின் கணவர் தீபக் தயாரிக்கும் இந்தப்படத்தை கௌரி சங்கர் என்ற அறிமுக இயக்குநர் இயக்குகிறார். சிம்ரன்தான் படத்தின் நாயகன், நாயகி எல்லாம். ராணி முகர்ஜியின் கணவர் ஆதித்ய சோப்ரா அவருக்காக மர்தானி என்ற பொலிஸ் படத்தை தயாரித்தார் அல்லவா?
அதேபோல் தீபக் தயாரிக்கும் இந்தப் படத்தில் சிம்ரன் மர்தானி ராணி முகர்ஜிபோல் அதிரடி பொலிஸாக நடிக்க உள்ளார்.
இந்தத் தகவலை பகிர்ந்து கொண்ட கௌரி சங்கர், நவம்பர் முதல் படப்பிடிப்பை தொடங்க இருப்பதாகவும் கூறினார்.

## பேஸ் புக்கில் பிடித்தவை...



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவக வலயத்தில் 38 மாணவர் சித்தி

யாழ்ப்பாணம்,ஒக்.9

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இந்த வருடம்தீவக வலயத்தில் 38 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். நெடுந்தீவு மங்கயற்கரசி வித்தியாலயத்தில் 3 மாணவர்களும் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் ஒரு மாணவனும்,நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலத்தில் 2 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். அதே போன்று காரைநகர் யாழ்ரன் கல்லூரி [illegible] 6 மாணவர்களும், தோப்புக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரு மாணவர்களும், ஊரி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இரு மாணவர்களும், மெய்கண்டான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒரு மாணவனும் சித்தியடைந்துள்ளனர். ஊர்காவற்றுறைப் பகுதியின் கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயத்தில் 4 மாணவர்களும், அனலைதீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை யில் இரு மாணவர்களும், ஊர் காவற்றுறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையில் ஒரு மாணவனும் சித்தியடைந்துள்ளனர். மண்டைதீவுப் பகுதியில் மண்டைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் 3 மாணவர்களும், மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் இரு மாணவர்களும், மண்கும்பான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஒரு மாணவனும், வேலணை சரஸ்வதி வித்தியாசாலையிலும், வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், தலா ஒரு மாணவனும் சித்தியடைந்துள்ளனர். அதே வேளை வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் ஒரு மாணவனும், வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தில் ஐந்து மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். கடந்த வருடம் தீவக வலயத்தில் 29 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். இந்த முறை வெளிவந்த புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின்படி 38 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அத்துடன் 80 வீதமான மாணவர்கள் 100 இற்கும் அதிகமாக புள்ளி களைப் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஐ-7)

# பரிசளிப்பு விழா இன்று

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டமானாறு வெளிக்கள நிலையம் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கு நடத்திய கணித திறனாய்வுப் பரீட்சையில் பரிசில்களை வென்றோருக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமாகாணக் கோட்டக்கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. பேராசிரியர் திருமதி எஸ்.குகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு வடமாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# வன்னி மாவட்டத்தின் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.9

தரம் 5 புலமை பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளிவந்த நிலையில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மேலும் பல மாணவர்கள் உயர் பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்துக்கு 152 புள்ளிகள் வெட்டு புள்ளியாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி தர்மபுரம் இல.1 அ.த.க பாடசாலை மாணவி சிவரஞ்சன் லக்சிகா 186 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை வகிக்கின்றனர். கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய மாணவன் சந்திரகுமார் டனுசன், கிளிநொச்சி ஸ்கந்தபுரம் இல.1அ.த.க பாடசாலை மாண வன் சபா நாயகம் தாரணன் ஆகியோர் 184 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவிகளான தவராசா பைரவி 181 புள்ளிகளைப் பெற்று 4 ஆம் நிலையிலும், தர்மகுலசூரியன் சிவானுஜா 180 புள்ளிகளை பெற்று 5 ஆம் நிலையிலும் உள்ளனர். வவுனியா மாவட்டத்தில் வவுனியா றம்பைக்குளம் பாடசாலையைச் சேர்ந்த மாணவி ஹரிணி பரந்தாமன் 188 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். அதே பாடசாலையைச் சேர்ந்த அமல்ராஜ் மதுரன் 187 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், கர்ணி சுரேஸ் 186 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும், லிங்கநாதன் அகர்ஷன் 185 புள்ளியை பெற்று நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு விசுவமடு விஸ்வநாதர் ஆரம்ப பாடசாலை மாணவி தர்மலிங்கம் தக்சாளினி 186 புள்ளிகளை பெற்று முதல் நிலையைப் பெற்றுள்ளார். முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலய மாணவி இந்திரன் ரதுசா மற்றும் குமிழமுனை மகா வித்தியா லய மாணவி சிவனேசன் பவித்திரா ஆகியோர் தலா 185 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்திலும், முல்லைத்தீவு இந்து வித்தியாலய மாணவன் இளங்கீரன் தனுசன் மற்றும்விஸ்வநாதன்ஆரம்பபாடசாலைமாணவன் சிவகுமார்லதுசன்ஆகியோர் 184 புள்ளிகளைப் பெற்று நான்காம் ஐந்தாம் நிலையையும் பெற்றுகொண்டனர். மன்னார் மாவட்டத்தில், மன்னார் புனித சவேரியர் ஆண்கள் கல்லூரியின் மாணவர்களான இருவர் முதல் நிலையை பெற்றுள்ளனர். 183 புள்ளிகளை பெற்று ஜ. எரிக்கிறேஸ்மன், ஜீ. றைற்றஸ் அனொன் முதல் நிலையையும், என். அபிசேக் 182 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் நிலையையும் பெற்றுகொண்டனர். (ஐ-21)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது கல்லூரியின் அதிபர்
வே.க.இரத்தினகுமார் SLPS - 1
அவர்கள் 06.10.2015 அன்று
கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில் இலங்கை
ஜனாபதி அதிமேதகு [illegible] திரிபால
சிறிசேன அவர்களினால்
''பிரதீபா பிரபா'' விருதினைப்
பெற்றதை நாம் வாழ்த்துவதுடன்
மேலும் பல விருதுகளைப் பெற
இறை ஆசிவேண்டி
வாழ்த்துகிறோம்.
பழைய மாணவர் சங்கம்,
யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.

## வைர விழா
## கருணா நிலையம்
கிளிநொச்சி

**60 ஆவது ஆண்டு நிறைவு நன்றித்திருப்பலி**

காலம் : நாளை (10.10.2015) சனிக்கிழமை
நேரம் : காலை 8.30
இடம் : கருணா நிலையம்

**பேராயர் டிலோராஜ் கனகசபை**
இலங்கைத் திருச்சபை,
கொழும்பு மறைமாவட்டம்
அவர்களினால் ஒப்புக்கொடுக்கப்படும்
நன்றித்திருப்பலியிலும், தொடர்ந்து நடைபெறும்
நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு
பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அன்பர்கள்
அனைவரையும் அன்புடன் வரவேற்று நிற்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
021 3211096
077 2881878
(63534)(10.15)
இயக்குநர், பணியாளர்கள்,
மாணவர்கள்,
கருணா நிலையம் - கிளிநொச்சி.

## ஒளிஅரசி

ஒக்டோபர் மாத
ஆசிரியர் தின சிறப்பிதழ்
இதோ வெளிவந்துவிட்டது

மக்காவின் மரணங்கள் வரமா?
அல்லாஹ்வுடன் சேர்ந்த
ஆத்மாக்களுக்காக பிரார்த்திப்போம்

- கட்டுரைப் போட்டி
- கவிதைப்போட்டி
- ஓவியப் போட்டி
- சிறுகதைப் போட்டி
- விவாதப் போட்டி
- குறுக்கெழுத்துப் போட்டி
- கேள்வி பதில் போட்டி




இன்னும் பல அறிவியல் விடயங்களுடன் தற்போது அமோக விற்பனையில்.
உங்கள் பிரதிகளை அருகில் [illegible] பத்திரிகை முகவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
தொ. பே. : 011 4320541, 071 6850005 , வடமாகாண விநியோக தொடர்புகளுக்கு 0776569617


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**

கிளிநொச்சி நகரில் உள்ள தனியார் நிறுவனத்திற்கு பட்டா வாகனம் வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 772 4978

**செய்து கொடுக்கப்படும்**

கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம் குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும்
தொடர்பு: 077 772 4978

**வாடகைக்கு உண்டு**

சாவகச்சேரி நகர் மத்தியில் (BOC இயங்கிக் கொண்டிருக்கும் கட்டடம்) 2016 தை மாதம் தொடக்கம் வாடகைக்கு விடப்படும். (அரச/ தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு:
077 784 9369, 021 222 8063

**காணி வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளிக்கு அருகில் நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம் 6 அறைகள், நவீன வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 0229 762

**விதை நெல் விற்பனைக்கு**

விவசாயப் பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு சிபார்சு செய்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்ட B.G. 406 ரக விதை நெல் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 077 659 2044
(60620)(10.15.17)

**மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி**

மு/தொட்டியடிவிசுவமடு சித்தி விநாயகர்ஆலயத்தின் அனுசரணையுடன் மாபெரும்மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகள் 11.10.2015 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் தொட்டியடி சவாரித்திடலில் நடைபெறும். தகவல்:
**ஆலயபரிபாலனசபை**

**பெயர்மாற்றம்**

புங்குடுதீவு தென்கிழக்கு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகம் அருணகிரி ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சண்முகம் அருணகிரிநாதன் என்று மாற்றம் செய்கின்றேன்.
இனிவரும் காலங்களில் மேற்குறிப்பிட்ட பெயரில் சகல ஆவணங்களிலும் ஒப்பமிடுவேன் என்று இத்தால் உறுதி அளிக்கின்றேன்.

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்துக்கு முகாமையாளராகக் கடமையாற்றுவதற் வதற்கு
* ஓய்வுபெற்ற SLAS தர தகுதி உடையோர் அல்லது
* ஓய்வுபெற்ற வங்கி அதிகாரி உடன் தேவை.

தொடர்பு:
**பிள்ளையார் ஸ்ரோர்ஸ் அன்ட் பிள்ளையார் இன்**
**31, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்.**
077 7222 715
(65426)(12.15)

**இந்திய சாஸ்திரியார் வருகை**

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.
ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்
**S.N.குமாரசாமி**
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.
காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
(சிவன்கோவிலடி பிரகாஷ் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691
(65428) (13.15)

# வன்னி மாவட்ட பாடசாலைகளின் புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள்

**கிளிநொச்சி மாவட்டம்**

**கிளி. உருத்திரபுரம் ம.வி.**
ப.ஆதித்தன் –164, க.யுதர்சினி–159, சி.பிரணவி– 158, அ.அமிர்தா–158, இ.சதுசாளினி –156, ப.மிதுனானன் –152.

**கிளி. புதுமுறிப்பு விக்கி னேஸ்வரா வித்தியாலயம்.**
தீ.சயந்தன் –170.

**கிளி.கண்டாவளை ம.வி.**
ஜெ.ராகீசன்– 178, சி.விதுசன் –155.

**கிளி.ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலை**
எஸ்.தாரகன் –184, ரி.கவிவானன் –169, ரி.மகிந்ததீபன் –155, பி. வினுஜன் –154, எஸ். டனுசாந் –152, எஸ்.திபாஜினி –152.

**கிளி. பூநகரி செம்பன்குன்று அ.த.க.பாடசாலை**
கி.கதிர் –152.

**கிளி. தர்மபுரம் அ.த.க. பாடசாலை**
எஸ்.லக்சிகா–186, ரி.கீர்திகா –171, ஜெ.பவிசினி –168, எம்.டின்சிகா –165, ரி.பிரதீசனா –161, ரி.அபின யன் –159, வி. நர்மதன் –158, ஜெ.கேனுசா –156, எஸ்.சஞ்சயன் –155, பி.விதுசா –155.

**வவுனியா மாவட்டம்**

**வவுனியா பூந்தோட்ட ம.வி.**
ந.மேனன்–178, ச.அஜன்–162, கி.தனுஜன்–156, செ.மோனுயா–155, எஸ்.ரஜீபன்–153.

**வவுனியா இந்துக் கல்லூரி**
ச.பிரியதர்சன்–164, சு.கிரிசாந்–162, ம.கிரிசாந்தன்–160, டி. பவித்திரன்–143, ப.கிசானா–153.

**வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலயம்**
ந.ஹரணி–171, த.பிரவின்–168, கு.கமழினி–162, யோ.லிபின்– 161.

**வவுனியா வீரபுரம் மகாவித்தியாலயம்.**
வேனுஜா–159, ச.சங்குவன் –156.

**வவுனியா முதலியார்குளம் அ.த.க. பாடசாலை**
த.யதுசா–162, ச.லெனின்–161.

**வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம்**
தெ.தர்சிகா–155, கு.சாருபன்–159, சி.சிந்துஜன்–169.

**வவுனியா அல்காமியா மகாவித்தியாலயம்**
எம்.அனா–175, எம். தனுஸ்–170, எம்சதா–166, கேதவுதாசிறின்–163.

**வவுனியாபாவற்குளம்கணேஸ்வரா வித்தியாலயம்**
ந.பரணிகா–174.

**வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயம்**
ஆர்.நாத 178, எம்.எம்.பர்ஹத் 177, எஸ்.சுகைப் 160, எம்.ஜி. மிஹினா 159, ஆர்.றக்ஹானா பேகம் 156, ஆர்.எம்.கைஸ் 155.

**வவுனியா இந்துக் கல்லூரி**
க.பிரியதர்சன் 164, து.கிருசாந் 162, ம.கிருசாந்தன் 160 வி. பவித்திரன் 153, த.கிசானா 153,

**வவுனியா பூந்தோட்டம் ம.வி** ந.மேனன் 178, கி.அஜன் 162, ம.தனுஜன் 156, தே.மேனுஜா 155, ச.சஜீவன் 153.

**வவுனியா பெரிய கோமரசங்குளம் மகாவித்தியாலயம்**
உ.விதுரா 166, உ.சுதர்சானா 162, ந.தர்மிகா 156, பெ.செல்வின் கஸ்ரோ 153.

**இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை**
த.கவிநிலா 156.

**முல்லைத்தீவு மாவட்டம்**

**விசுவநாதன் ஆரம்பப் பாடசாலை**
த. தர்சாளினி –186, கி. லதுர்சன் –184, ற. அட்சயன் –182, தி.திவாகரன் –180, த. ரிசானி –176, கு. கபி சன் –175, ஏ. ஜெனோசன் –174, ச. ஆதித்தியன் –173, ற. றெனோல்ட் –173, யோ. சர்மிகா –172, நி. நிதுா –170, செ. நித்திகா –166, க. கோபிகா –166, சி. நிதுர்சிகா –168, ஆ. ஆர்த்திகா –152, இ. நிதர்சன் –167, த. விேனாதன் –173, ச. திருமாறன் –165, க. நிலவன் –167, ச. குறிஞ்சி நிலவன் –166, வி. சாரங்கன் –162, யே[illegible]யதுஷி –154, தோ. துான் –161, றோ. அர்ச்சனன் –158.

**குமுழமுனை மகாவித்தியாலயம்**
சி. பவித்திரா –185, உ. யதுசியா –171, ப. லாசன்யா –168, சு. யதுர்சன் –161, மு. கவிவர்ணன் –162, செ. திலக்சன் –158, த. சாத்வீகன் –152.

**முல்லைத்தீவு இந்து வித்தியாலயம்**
இ. தனுசன் –184, உ. கிசாலா –169, இ. நிலவன் –166, ந. டிலக்சிகா –160, இ. நிவேதிகன் –151.

**சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்**
இ. வினுயன் –159, பா. பிரசாந் –157, வை. கஜிபன் –144.

**கலைமகள் வித்தியாலயம்**
றொ. கனிசன்– 180, செ. சிந்துயன் –179, யெ. கஜிபனா – 179, அ. தவலோசனன் 176, வி. நர்த்திகா 175, யே. ஜஸ்மினா 171, வி. மதுசாயினி –168, த. சங்கவி –163, கி. அர்ச்சயா –162, பு. சத்தியப் பிருந்தாபன் –161, த. சக்சன்– 155, ற. தரணிகா –163, கோ. சங்கிசை –163, செ. கோபிகா –160, வ. விபுயன் –155, ம. துசாளன் –152, பி. அனிஸ் –152.

**முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்**
யோ. மதுர்சன் –166, யெ. அறிவெழினி –166, யெ. பிரியங்கன்–167, நே. மதுசாயினி –158, பா. பிரியங்கா– 155, ஜி. சதீசன்– 152.

**வற்றாப்பளை மகாவித்தியாலயம்**
ச. மிதுசனா– 180, சி. கஜிந்தன் –167, உ. சஞ்சை – 160, சி. மதுவிழி –161, வி.லேஸ்மிதா–157, சி.சோபிதன்–155.

**உடையார் கட்டு ஆரம்பப் பாடசாலை**
க. யாழினியன் –172, நி. அபிதா –171, பு. கஸ்மிதா –168, நா. தனுசன் –163, சி. திபானுயன் –160, ச. டயானா –159, எ. டாராம் –158, ஜெ. சிவகி –158, சி. பிரியங்கன் –156, ம. அஜந்தன் –156, பு. கீர்திகன் –156, சி. திவானுயா– 154, றோ. அ[illegible]வினா– 154, கு. கவி பிரியா –154, ச. யதுசன் –153, நெ. தர்மிகன் –152.

**பாரதி வித்தியாலயம்**
தி. கலைநிலா –159, சி. சானுஜா –154, சு. அபிதா –153, மொ. டிலக்ஷனா – 162, இ. சுஜிதா– 154, பி. பிரசாளன் –153, த. நிதுர்சனன்– 161, ஆ. கரிகாலன் –152, லெ. நிதுர்சனன் –153, கா. கலைப் பிரியன் –153.

**அமதிபுரம் தமிழ் வித்தியாலயம்**
அ. கிருஜன் –153.

**மன்னார் மாவட்டம்**

**புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி.**
என்.அபிசேக்–182, சி.சிகான் – 179, க. அபிசேகன் – 178, ஜோ. பிரசித் –176, ஜோ. கஜந்தன் – 175, எச்.எம்.அகில் –170, சி..றினிற்ற[illegible] 168, எஸ்.டொன்மீகா 167, ஏ.டிவேய்ன் – 164, எஸ்.டபிள்யூ.தானிஸ் – 164, ஜே.சறோன் – 164, கே.கெவின் எரிக்சன் – 163, டி.அக்சயன் – 161, ஏ.கிறிஸ்றதீசன் – 160, து.டிலைக்ஸ் 157 எஸ்.செல் வலக்சன் – 156, ஜீ.ஹான்ஸ் – 155, வை.நிருஜன் – 154, ஜீ.சாம் அபிகே –154, எம்,அஸ்லி 152

**ஆண்டான்குளம் ம.வி**
எஸ்.தனுசிகா –162, பி.கேனுஜா –154.

(ஐ–21.402,422,101,ரி3)

**ஆசிரியை தேவை**

திருநெல்வேலியிலுள்ள வீட்டிற்கு வந்து கற்பிக்க முன்பள்ளி ஆசிரியை தேவை.
சம்பளம் ரூ 10.000/=
T.P: 021 222 0976

**வீடு வாடகைக்கு**

கிளிநொச்சி டிப்போ சந்தியில் இருந்து 3/4 km தொலைவில், இரத்தினபுரத்தில் கிருஷ்ணர் ஆலயவீதியில் - கீழ்த் தளத்தில்3 படுக்கை அறைகளும்,ஒரு ஸ்ரோர் அறையும்,சமையலறையும்,2 ஹோல்களும்,இணைந்த குளியல் அறையும் இணைந்த 2 கழிவறைகளும்வோஷிங் மெஷின் பாவிக்கும் இடமும்,மேல்தளத்தில் 3 அறைகளும் ஹோலும் இணைந்த குளியல் அறையும் இணைந்த கழிவறையும் கொண்ட மாடிவீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 1177 683

**Vacancy**

எமது மருந்தகத்து வெற்றிடங்களுக்கு தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.
1) மருந்தாளர் - பெண் - முன் அனுபவம் அவசியம்
2) காசாளர் - பெண் - கணினி அறிவு முக்கியம்
3) எழுதுவினைஞர் - பெண் - கணினி அறிவு முக்கியம்

இடம் : புதிய யாழ்.வைத்தியசாலை 315, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.
காலம் : 10.10.2015
நேரம் : முற்பகல் 10.00 மணி
சம்பளம் : பேசித்தீர்மானிக்கப்படும்
T.P No : 021 222 1011
* சுயவிவரப்பட்டியலுடன் சமுகமளிக்கவும்.

NSB
'உங்களினதும் நாட்டினதும் முன்னேற்றத்தின் முன்னோடி'

**பகிரங்க ஏல விற்பனை**

தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு 31.05.2014 வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் நாளை (10.10.2015) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அந்தந்தக் கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

01. யாழ்ப்பாணம் 2ஆம் கிளை நாவலர் வீதி.
02. அச்சுவேலி
03. சுன்னாகம்

ஏலத்தை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.
வடபிராந்திய முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி
(65429)(10.15)

**காணவில்லை**



அரியாலையைச் சேர்ந்த
**செல்வி மகேந்திரன் கோபினா**
என்பவர் 07.10.2015 அன்று மு.ப 11.00 மணியளவில் அருகில் உள்ள கடைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இவர் பிறவுண்கலரில் பஞ்சாபி அணிந்துள்ளார். உயரம் 5' பொது நிறமுடையவர். இவரைக்கண்டவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 521 3022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுச் சிறப்பிதழ்- 2015


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/வல்வெட்டித்துறை அ.மி.த.க பாடசாலையில்
2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
153 வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற
ஆறு மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு
மேல் பெற்ற மாணவர்களையும்
பெற்றோர்கள் பாராட்டி வாழ்த்துகின்றனர்.


ஹரிதாஸ் கிருசாயினி
170 புள்ளிகள்


குகதாசன் வித்தகன்
169 புள்ளிகள்


முகுந்தன் வதுர்சன்
167 புள்ளிகள்


சந்திரகுமார் துளசிகா
158 புள்ளிகள்


தயாகரன் காவேரி
156 புள்ளிகள்


தவனேஸ்வரன் மதுஷிகன்
153 புள்ளிகள்

அதிபர், வகுப்பாசிரியர் க.தர்மலிங்கம் மற்றும்
சிறப்பு வகுப்பு நடத்திய ஆசிரியர்கள் மற்றும்
ஊக்குவிப்பாளர்கள்
அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்: பெற்றோர்கள்.
யா/வல்வெட்டித்துறை அ.மி.த.க. பாடசாலை.

(62157)(10.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் ஐந்து புலமைப்பரிசில்
பரீட்சையில் 155 புள்ளிகளைப்
பெற்று சித்தியடைந்த எமது
பாடசாலை மாணவி

**செல்வி. ச.மெறின்**

அவர்களை வாழ்த்துகின்றோம். அவரை
வழிப்படுத்திய அதிபர், வகுப்பாசிரியர்

**திருமதி.த.கற்பகராணி**

அவர்களையும்,
100 புள்ளிகளுக்கு மேல்
பெற்ற மாணவர்களையும்
பாராட்டுகின்றோம்.




| | |
|---|---|
| ச.ஜஸ்வினா | - 128 |
| சு.லக்ஷன் | - 126 |
| ஞா.சுலக்சிகா | - 123 |
| ஆ.லக்சனா | - 114 |
| யே.பிரியசாளினி | - 104 |
| கு.சர்மிலா | - 100 |

பாடசாலைச் சமூகம்
யா/அளவெட்டி தெற்கு றோ.க.த.க.
பாடசாலை

(65354.11.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் கல்வி பயிலும்



**செல்வன் கு.ஸ்ரீகீரன்**

அவர்கள் 2015 புலமைப்பரிசில் பரீட்சையில் 156 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தமைக்காக வாழ்த்துவதோடு மென்மேலும் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்றும் மேலும் இவருக்கு பக்கபலமாகவும் ஊக்குவிப்பாளராகவும் இருந்த அவரது அன்னை அனுசா அம்மாவையும் அவரது குடும்பத்தினரையும் கல்வி கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
ரங்காக்கா, குமாரதபன் அண்ணா, பேரியன்ரி,
ஆசையம்மா, ஆசையப்பா.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருகோணமலை உவர்மலை
விவேகானந்தா கல்லூரி மாணவன்
செல்வன் **அருட்செல்வம்**
**அபினயன்**
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற
புலமைப் பரிசில் பரீட்சையில்
**178 புள்ளிகளைப்**
பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாம்
இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 15 ஆம்
இடத்தையும் பெற்று பாடசாலைக்கும்,
பெற்றோருக்கும் பெருமை தேடி தந்துள்ளார்
இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி
சாதனை படைக்க இறைவனை வேண்டி
இவரை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்: **வினோஜன் (அத்தான்)**
**கம்பர்மலை, யாழ்ப்பாணம்.**

(65351)(11.15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 புலமைப் பரிசில் பரீட்சையில்
வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்தோர்


சு.தனுரா - 172


தி.விதுஜா - 169


ந.அலன் - 164


ப.அகராயுதன் - 164


இ.பிரசாந்தினி - 162


ஜெ.சுவேதினி - 156




ஜெ.தர்மிகன் - 155

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| 01. பே.பிரவீணன் | - 152 | 13. க.கஜித் | - 120 |
| 02. கு.கிதுர்சன் | - 151 | 14. இ.ரஸ்மிதன் | - 118 |
| 03. ச.தேனுஜன் | - 149 | 15. ந.சாங்கவி | - 118 |
| 04. சு.கேதுஷன் | - 148 | 16. க.டானியல் | - 116 |
| 05. கி.கீர்த்திகா | - 137 | 17. ஸ். ஸ்னா | - 106 |
| 06. சி.கபிஷ்னன் | - 137 | 18. பி.டிலக்ஸி | - 105 |
| 07. உ.பபிலந்தன் | - 130 | 19. சி.திவியன் | - 105 |
| 08. வி.அபிஷா | - 126 | 20. கு.லேனுயன் | - 105 |
| 09. க.யசிந்தா | - 125 | 21. தி. சாருக்கான் | - 103 |
| 10. தி.மதுசன் | - 123 | 22. சு.வசீகரன் | - 103 |
| 11. சி.பூஜா | - 123 | 23. லோ. நிருசாந்தினி | - 102 |
| 12. பா.ரேனுகேஸ் | - 120 | | |

மேற்படி உயர் பெறுபேறுகள் பெற்ற மாணவர்களையும் உயர்பெறு பேறுபெற
உழைத்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை சமூகம்**
**கந்தரோடை, சுன்னாகம்.**

(65353)(3.15)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26 ★ 07 ★ 1977

உதிர்வு 21 ★ 09 ★ 2014

**அமரர் தம்புத்துரை விஜயேந்திரன்** (BA (Hons). MA)

(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம்,கரவெட்டி)

திதி : 09.10.2015

அவசரமாய் எம்மை விட்டுப் பிரிந்த அப்பாவே!
ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த வாழ்வு ஏனோ முடிந்து போனது
உதவியென்றால் உங்கள் கரம் அரவணைக்கும் என்ற உண்மை
உறங்கிப் போனதோ மற்றவன் எப்படியும் வாழட்டும் என்று
எப்போதும் இருந்ததில்லை நீங்கள். இப்படி வாழுங்கள் என்று
இதமாய் அறிவுரை சொல்வீர்கள்.
ஓராண்டு உங்களைப் பிரிந்து வாழும்
எமக்கு எங்கேயப்பா - ஆறுதல்
ஆண்டவன் பொன்னடியில் ஆராத இன்பமுடன் நீங்கள்
இருக்க என்றும் வேண்டுகின்றோம்.

இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(C/18726/10.15)

கொடுக்குளாய்,
உடுத்துறை.

மனைவி, மகன்மார்
மற்றும் குடும்பத்தினர்.

# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நாடகத்துக்கு மூன்று விருது

யாழ்ப்பாணம்,ஒக்.09
2015 அரச சிறுவர் நாடக விழாவில் வவுனியா இறம்பைக்குளம் பாடசாலைக்கு மூன்று விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
வருடா வருடம் அரச சிறுவர் நாடகப்போட்டி நடைபெறுவது வழமை. இந்த வருடமும் இந்தப்போட்டி கொழும்பில் நடைபெற்றது.
இதன்போது வவுனியா இறம்பைக்குளம் பாடசாலை ஆரம்ப பிரிவு மாணவர்கள் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற சிறுவர் நாடக ஆற்றுகையை வழங்கினர். சிறந்த மேடையமைப்பு, சிறந்த தயாரிப்பு, சிறந்த எழுத்துரு ஆகியவற்றுக் கான மூன்று விருதுகள் இந்த நாடகத்துக் காகக் கிடைக்கப்பெற்றன. இந்த நாடகத்தை திருமதி. தர்மினி சுரேஸ்குமார் தயாரித் திருந்தார். எழுத்துருவாக்கத்தை சி.பாஸ்கரன் மேற்கொண்டிருந்தார்.
அரங்க முகாமைத்துவத்தை க.முல்லைக் குமார் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.
(ஐ-402)

## கண்ணீர் அஞ்சலி



வண்.ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி
கோயிலில் முகாமையாளராக
கடமையாற்றும்
**பொ.நாகேந்திரம்** அவர்களின்
அன்புத் தந்தை
**நாகலிங்கம்
பொன்னுத்துரை**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் இரங்கலையும் தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்மா சாந்தியடைய விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

வண்.ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி
கோயில், யாழ்ப்பாணம். (68432/11.15)

தர்மகர்த்தா
சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்
**திருஞானம் லீன்ரஸ்** அவர்களின்
அன்பிற்குரிய சிறிய தாயாரான
**திருமதி ஸ்ரெல்லா றெபேக்கா
விஜயரெட்ணம்** அவர்கள்
காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் உறவுகளுக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சென் மேரிஸ் தேசிய பாடசாலை ஆசிரிய
நண்பர்கள் ,திருகோணமலை.

## இரு இந்தியர்கள் கைது

மட்டக்களப்பு, ஒக்.09
சுற்றுலா நுழைவு இசைவுப் பத்திரத்தில் நாட்டுக்கு வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட இந்தியப் பிரஜைகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் வாகரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலையடுத்தே குறித்த இந்தியப் பிரஜைகள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப் பட்டவர்களை வாழைச் சேனை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.09
அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் பரி சளிப்பு விழா இன்று வெள் ளிக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம்வலயக்கல்விப் பணிப்பாளர்செ.சந்திரராஜா,சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சூ.நோபேட் உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ)

## ஈர விழிகளுடன் ஆண்டுகள் மூன்று

**அமரர் தம்பிஐயா யோகராசா**

திதி : அபரபக்க துவாதசி



ஆண்டுகள் மூன்று சென்றதுவோ
எமைப்பிரிந்து எமதருமை
அப்பாவே! சடுதியிலே
எமைப்பிரிந்து பாதியிலே
போனதுவால் வழியேதும்
தெரியாமல் தவிக்கின்றோம் அப்பா
ஆண்டுகள் மூன்றென்ன எமது
மூச்சுள்ளவரை உங்களை
நினைத்து வாழ்வோம்.
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.
அரியாலை

மண்ணில் 22.12.1946
விண்ணில் 12.10.2012

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் பொன்னுத்துரை



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், ஆனைப்பந்தி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பொன்னுத்துரை நேற்று (08.10.2015) வியாழக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ் சென்ற சுந்தசாமியின் சகோதரரும், சரஸ்வதி, தெய்வேந்திரம், சுப்பிரமணியம், நாகேந்திரம், மகேந்திரம், சுரேந்திரன், ஜெகசோதி, உதயகுமார், விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், குணராஜா, ராணிதேவி, தயாளினி, இரத்தினேஸ்வரி, மனோரஞ்சினி, நாகேந்திரமூர்த்தி, சிவகெங்கா, செல்வரதி ஆகியோரின் மாமனும், முகுந்தன், கோகிலன், பிறேமலோஜினி, பிரபாஜினி, லோகதாரணி, சர்மிளா, துஷிதா,வேணுகா, மதனிகா, மோகனதீசன், தனேந்திரன், கிருபாகரன், நிரோஜன், திவ்யா, செந்தூரான், பவித்ரா, மதுரா,ஹரிஷ், பவிசரன், சரண்யா, அனுசுதன், சாம்பவி, வேணுஷன், சுவஸ்திகா, கிருஷ்ணவி, கிருஷன், சுபிநயா, காவினி, பிரதீபா, கோபிகா, தேவிஸ்காந், நிஷாந்தன், ஜங்கான், லோகதர்சினி, எழில்செல்வி, அஜந்தன் ஆகியோரின் பேரனும், தருணயா, விபீஷணா, சஜீஸ், றமிலன், வினுஷ், ஹரிஷ், ஹன்சிகா, சஸ்மிதா, துவீஷன்,லதீசனா, மிசாத், நவீன், அன்சி, லக்ஷன்,லதுர்ஷன், கபிஷன், ஜஸ்மினா, லக்ஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் 61/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்திலுள்ளஅவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/2, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (68424) (13.13.10.37)


தகவல்:
குடும்பத்தினர்.

## மீட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.09
நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் 2 கான பரீட்சைகள் இந்த மாதம் 31ஆம் திகதியும் எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் மற்றும் 7 ஆம் திகதிகளிலும் இடம்பெறவுள்ளன. அதற்கான மீட்டல் வகுப்புக்கள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தால் நாளை சனிக்கிழமையும் எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ளன.
மேலும் இந்தப் பரீட்சையில் தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறும் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி கல்பனா சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.
(ஐ-ரி2)

## 28 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் வல்லிபுரம் கோவிந்தர்**



உதிப்பு
04.10.1936

உதிர்வு
12.09.2015

கடந்த 12.09.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வல்லிபுரம் கோவிந்தரின் 28 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (08.10.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (09.10.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.


அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடையார்லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்
நிரோயினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்ரோயிட் கைப்பட்டி



ஸ்மார்ட் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கைப் பட்டி ஒன்றை வோவ் பான்ட் நிறுவனம் அறிமுகம் செய்கின்றது.
அன்ரோயிட் இயங்கு தளத்தைக் கொண்ட இந்தக் கைப்பட்டியானது பிக்செல் றெசலூசன் (1024 x 200 Pixel Resolution) உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளது. மேலும் இதில் 1 ஜிஎச் இசற் வேகத்தில் செயலாற்றக்கூடிய ஏஆர்எம் கோர்ரெக்ட் ஏ7 பிரதான நினைவகமாக 512 எம் பி ராம் என்பனவற்றுடன் 4 ஜிபி (4GB) சேமிப்பு நினைவகமும் தரப்பட்டுள்ளது.
இந்தச் சாதனத்தில் காணப்படும் விசேட தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படாத போதிலும் பெஸ்ட் லுக் (First Look) வீடியோ ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

# புதிய சிப் உருவாக்கி சாதனை

செயற்கை நுண்ணறிவு (Artificial Intelegence) எனப்படும் ஐந்தாம் தலைமுறைக் கணினிகள்தற்போது படிப்படியாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கணினிகளில் தரவுகள் சேமிக்கப்படும் முறை, போட்டோன்களை அடிப்படையாகக் கொண்டதாக காணப்படுகின்றது. இவ்வாறான கணினித் தொழில்நுட்பமானது குவாண்ரம் கொம்பியூற்றிங் (Quantum Computing) என அழைக்கப்படுகின்றது. தற்போது இந்தக் கணினிக்குத் தேவையான குவாண்டம் தர்க்க வாயிலை, (Quantum Logic Gate) சிலிக்கனைப் பயன்படுத்தி அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழக பொறியியலாளர்கள் உருவாக்கியுள்ளனர். சம காலத்தில் பாவனையில் உள்ள கணினிகளில் 0,1 என்ற பிட்களின் அடிப்படையில் தரவுப் பரிமாற்றம் இடம்பெறும். அதேபோன்று குவாண்டம் தர்க்க வாயிலில் குறித்த எண்கள் கியூபிட்ஸ் (Qubits) என அழைக்கப்படுகின்றன. இதேவேளை குறித்த பொறியியலாளர் குழுவானது, ட்ரான்ஸ்சிஸ்டர்கள் (Transistors) எனப்படும் குறைகடைத்திகளை உள்ளடக்கிய சிப்களை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. ஒவ்வொரு சிப்பும் ஏறத்தாழ 1 பில்லியன் ட்ரான்ஸ்சிஸ்டர்களை உள்ளடக்கியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உணவு அச்சீட்டு 3டி இயந்திரம்!



கடந்தசிலஆண்டுகளுக்குமுன்னர்முப்பரிமாணஅச்சுஇயந்திரங்கள் (3D Printers) பிரபலமாகத்தொடங்கின. இன்னமும் அது முழுமையான பொதுப்பாவனைக்கு வரமுன்னரே இப்போது அதன் அடுத்த கட்டமாக புதிய ஒரு தொழில் நுட்பம் முன்னோட்ட முறையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. முப்பரிமாண உணவு அச்சீட்டு இயந்திரமாக அறிமுகமாகியிருக்கும் இந்த இயந்திரம் உணவுகளைத் தயாரிப்பதற்கு உதவவுள்ளது. அதாவது, பிரபல ஆங்கில திரைப் படங்கள் சிலவற்றில் எதிர்வு கூறப்பட்ட எதிர்கால உணவு தயாரிப்பு முறைகளுக்கு ஒரு முன்னோடி இயந்திரமாக இது உருவாகியுள்ளது. சாதாரண உணவுகள் அனைத்தையும் இதில் தயாரிக்க முடியா விட்டாலும், ஆரம்பக் கட்டத்தில் சில வகைப் பழங்களின் சுவையை உடைய உணவுகளை இந்தஇயந்திரம் அச்சிடவல்லது!
அதாவது, சொக்லேட், வனிலா, மின்ற், (புதினா) போன்ற வகை சுவைகளையுடைய பதார்த்தங்களை இது அச்சிடக்கூடியது.
இதன் தயாரிப்பாளர்கள், எதிர்காலத்தில் இந்த வகை இயந்திரங்களால் ஒரு ஹம்பேர்கர் (Hamburger) ஐக் கூட உருவாக்க முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பூடினி (Foodini) என அழைக்கப்படும் இந்த இயந்திரம் பற்றிய மேலதிக விவரங்களை கூகுளில் தேடலாம்.

# நெடுந்தீவில் முதல் முறையாக நடைபெற்ற சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி



நெடுந்தீவு,ஒக்.09
நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நெடுந்தீவுப் பிரதேசத்தில் உள்ள சிறுதொழில் முயற்சியாளர் களுக்கு வியாபாரத்துக்கான வழிகாட்டல் பயிற்சி நெறிகள் முதல் தடவையாக நடைபெற்றது. கடந்த வியாழக்கிழமை தொடக்கம் சனிக்கிழமை வரை மூன்று தினங்கள் இடம்பெற்ற இந்தப் பயிற்சிக்கான ஏற்பாடுகளை நெடுந்தீவு பிரதேச செய்லர் செ.ஜெயகாந்த், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.சர்வேந்திரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் யாழ். மாவட்ட சிறுதொழில் முயற்சி அபி விருத்திப் பிரிவின் முயற்சி யாண்மை அபிவிருத்திப் பயிற்சி உத்தியோகத்தர்கள் ச.சதீபன், த.கிரிதரன், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த அபிவிருத்திப் பயிற்சியாளர் த.தனஞ்செயன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். பயிற்சி நெறியில் பல தரப்பட்ட சிறுதொழில்கள் குறித்த பயிற்சிகள் வழங்கப்பட்டன. 30 இற்கும் அதிகமான வலம்புரி கடற்றொழில் சங்க மகளிர் பிரிவினர் இதில் கலந்து கொண்டனர். பயிற்சியின் இறுதியில் பிரதேச செயலர் மற்றும் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர் ஆகியோர் பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினர். திறன் அபிவிருத்தி அமைச்சு, வாழ்வின் எழுச்சித் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்தப் பயிற்சிகள் மிகவும் பயனுள்ளதாக இருந்ததென பயிற்சியாளர்கள் தெரிவித்தனர். (ஐ-7)

# தொழில் சேவை நிலையத்தால் வேலை வாய்ப்புக்கான நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், ஒக்.9
தனியார் நிறுவனம் ஒன்றில் 500 வரையான வெற்றிடங்களுக்கு ஆள்களைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகத்தேர்வு தொழில் சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.
யாழ். மாவட்ட செயலகத்தின் பொது மக்கள் தொழில்சேவை நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளினூடாக நாடு முழுவதும் கிளைகளைக் கொண்ட முன்னணி தனியார் நிறுவனத்தின் 500 வரையான தொழில் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2மணி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. நேர்முகத்தேர்வில் க.பொ.த. உயர்தரம் மற்றும் க.பொ.த. சாதாரண தரம் வரையில் கல்விகற்ற 27 வயதுக்கு மேற்படாத ஆண்களும், 24 வயதுக்கு மேற்படாத பெண்களும் பங்குபற்ற முடியும். நேர்முகத்தேர்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் முக்கியமாக தங்கள் கல்விச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், கிராம அலுவலரின் சான்றிதழ் மற்றும் ஏனைய முக்கியமான சான்றிதழ்களுடன் பங்குபற்ற வேண்டும் எனவும், மேலதிக தகவல்களுக்கு மாவட்ட பொது வேலைவாய்ப்பு சேவை நிலையம் அல்லது பொது மக்கள் தொழில் சேவை நிலையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளுமாறும் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். (ஐ-ரி5)

# தாபரிப்பு வழக்கில் கணவனுக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம்,ஒக்.09
கணவரால் கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்த மனைவுக்குரிய தாபரிப்புப் பணத்தை தொடர்ச்சியாக செலுத்தாமல் வந்த கணவனுக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தினால் ஒருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில், யாழப்பாணத்தை சேர்ந்த பெண் ஒருவரினால் அவருடைய கணவருக்கு எதிராக தாபரிப்பு வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. கணவர் தன்னை ஒழுங்காகப் பராமரிப்பதில்லை என்றும் தன்னோடு சேர்ந்து வாழ மறுப்பதாகவும் தெரிவித்தே தாபரிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கில் நீதிமன்றினால் தாபரிப்புத் தொகையாக மாதாந்தம் பத்தாயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிடப் பட்டிருந்தது.
எனினும் கணவன் தொடர்சியாக பணத்தை ஒழுங்கான முறையில் செலுத்தாமல் இருந்ததுடன் அடிக்கடி நீதிமன்றத்துக்கு சமுகம் கொடுக்காமலும் இருந்து வந்துள்ளார். அவரால் மனைவிக்கு தாபரிப்புத் தொகையாக பெருந்தொகை பணம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. கடந்த 5 ஆம் திகதி இந்த வழக்குக்கு கணவன் அழைக்கப்பட்டபோதும் கணவனால் பணம் செலுத்தப்படவில்லை. இதனையடுத்து நீதிமன்றத் தினால் அவருக்கு ஒருவருட சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குவிங் பேரரச வம்ச அரசியின் ஓவியம் 137 மில். டொலருக்கு விற்பனை

சீனாவில் நடைபெற்ற ஏல விற்பனை ஒன்றில் குவிங் பேரரச வம்சத்தின் அரசியின் ஓவியம் 137.4 மில்லியன் ஹொங்கொங் டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சீனாவின் ஹொங்கொங் நகரில் பிரபல ஏல விற்பனை நிறுவனமான சொதிபேயின் அரிய கலைப்பொருள்கள், ஆபரணங்கள், ஓவியங்களின் ஏல விற்பனை நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்குச் சொந்தமான, அரிய வகை, சாம்பல் நிற முத்து ஆபரணம், ஏல விற்பனையில் 5. 27 மில்லியன் அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த முத்துமாலை விஸ்கண்டேஸ் கேட்ரி என்பவரின் சேகரிப்பில் ஒன்றாக இருந்தது.

காஷ்மீரின் ஆபரணம் என்று அழைக்கப்படும், 27.68 கரட் இந்திர நீலக்கல் மோதிரத்தை 52.28 மில்லியன் ஹொங்கொங் டொலருக்கு, பெயர் குறிப்பிடப் படாத ஆபரண சேகரிப்பாளர் ஒருவர் கொள்வனவு செய்துள்ளார். குவிங் பேரரச வம்சத்தின் அரசியின் ஓவியம் 137.4 மில்லியன் ஹொங் கொங் டொலருக்கு விற்பனை செய்யப்பட்டது. குறிப்பிட்ட இந்த ஓவியம், கச்டிஜீன் என்பவரால் வரையப்பட்ட 18 ஆம் நூற்றாண்டுக்குரிய ஓவியமாகும். இந்த ஏல விற்பனையில், பொருள்களைக் கொள்வனவு செய்த செல்வந்தர்களின் பெயர்கள் வெளியிடப் படவில்லை. (ற–ரி4)

## யேமன் பள்ளிவாசல் மீது மனிதக் குண்டு தாக்குதல்

### ஏழு பேர் சாவு

சனா, ஒக்.9

யேமன் தலைநகர் சனாவில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட மனிதக் குண்டுத் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

வடமேற்கு சனாவில் அமைந்துள்ள அல்–நூர் மசூதியை இலக்கு வைத்தே இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முன்னெடுக்கப்பட்டது என்று ஹௌதி அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.


மிகவும் சக்திவாய்ந்த குறித்த குண்டு வெடிப்பானது, அப்பகுதி முழுவதையும் அதிர்வடையச் செய்தது என்று சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலானது அன்றைய தினம் ஐ.எஸ். அமைப்பால் யேமனில் முன்னெடுக்கப்பட்ட நான்கு தாக்குதல்களில் ஒன்றாகும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. அன்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் சுமார் 22 பேர் கொல்லப்பட்டனர். (ற)



இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயைக் கட்டுப்படுத்த சிங்கப்பூர், ரஷ்யா, மலேசியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிடம் உதவி கோரப்பட்டுள்ளது என்று அ
சுமத்திரா தீவில் உள்ள காடுகளில் பற்றியுள்ள தீயால் வெளியேறும் புகை அந்த நாட்டை ஒட்டியுள்ள மலேஷியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில
போதிலும் ரஷ்யா, மலேஷியா மற்றும் ஜப்பான் நாடுகளின் உதவியும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது என்று விடோடோ தெரிவித்துள்ளார். சிங்கப்பூரிடமிருந்து குறை
2 முதல் 3 தொன் நீர் கொள்ளளவு கொண்ட விமானங்கள் தம்மிடம் உள்ள நிலையில், 12 தொடக்கம் 15 தொன் நீரைக் கொண்டு செல்லக்கூடிய விமானங்களைத்
காட்டுத்தீயால் எழும்பிய கரும்புகையை அடுத்து அயல் நாடுகளான மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் தெற்கு தாய்லாந்து ஆகியனவும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அங்

## ஜெருசலேம் வன்முறைகளுக்கு அமெரிக்கா கடும் கண்டனம்



இஸ்ரேலியப் பாதுகாப்புத் தரப்பினருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே நடந்த மோதலில் பாலஸ்தீன சிறுவன் ஒருவன் உயிரிழந்தான். அதையடுத்துக் கடந்த சில தினங்களாக மேற்குக் கரை மற்றும் ஜெருசலேமில் வன்முறைகள் இடம் பெற்று வருகின்றன.

வொஷிங்டன், ஒக்.9

மேற்குக் கரை மற்றும் ஜெருசலேமில் தொடரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் அமெரிக்கா கடும்கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

குறித்த மோதல்களை முடிவுக்குக் கொண்டுவந்து அமைதியை நிலைநாட்டுவதற்கு இஸ்ரேலியர்களும், பலஸ்தீனியர்களும் முன்வர வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வெள்ளைமாளிகையின் பேச்சாளர் ஜோஷ் எர்னஸ்ட் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்குக் கரை மற்றும் ஜெருசலேமில் அமைதியை நிலைநாட்டுவதற்குச் சாத்தியமான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கும் இணைந்து செயற்படுமாறு அமெரிக்கா அனைவருக்கும் அழைப்புவிடுத்துள்ளது. (ற)

# ரஷ்யாவுடன் செயற்பட வ

### அமெரிக்கா கூறுகின்றது

வொஷிங்டன், ஒக். 9

ரஷ்யாவின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படாதவரை சிரிய விவகாரம் தொடர்பில் ரஷ்யாவுடன் இணைந்து செயல்பட வாய்ப்பு இல்லை என அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஓஷ்டன் கார்ட்டர் தெரிவித் துள்ளார்.

சிரியாவில் தாக்குதல் நடத்தி வரும் ரஷ்ய போர்விமானங்கள் துருக்கி வான்பரப்பில் பறந்ததற்கு அமெரிக்கா கடும் கண்டம் வெளியிட்டிருந்த நிலையில், இது போன்ற மோதல் ஏற்படாமல் தவிர்ப்பது பற்றி அமெரிக்காவுடன் பேச்சு நடத்தத் தயார் என ரஷ்யா அறிவித்திருந்தது.

ஆயினும் சிரிய தீவிரவாதிகள் மீது வான்வழி தாக்குதல் நடத்திவரும் ரஷ்யாவுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என அமெரிக்கா திட்ட வட்டமாக தெரிவித்துள்ளது. இது குறித்து ஓஷ்டன் கார்ட்டர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

சிரியாவில் ரஷ்யாவுடன் இணை செயல்படுவது என்ற பேச்சுக்கே இ மில்லை. ரஷ்யா மிகவும் தவறா முறையில் செயல்பட்டுக் கொண்டி கிறது. ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக் தல் நடத்தாமல் தவறான இடங்கள் மீ தாக்குதல் நடத்திவருகிறது. ரஷ்யாவி அணுகு முறையில் மாற்றம் ஏற்படா வரையில் அவர்களுடன் இணைந்து செயல் வாய்ப்பு இல்லை. –என்றார்.

சிரிய ஜனாதிபதி பஸர் அல் அசா அரசுக்கு ஆதரவாக, கிளர்ச்சியாளர் க மற்றும் ஐ.எஸ். குழு மீது ரஷ்ய ான்வ தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஆனா அதிபர் அசாத்தை எதிர்த்து போராடு கிளர்ச்சி படையினருக்கு நேட்டே நாடுகள் ஆதர வளித்து வருகின்றன.

## விசம் வைத்து யானைகள் கொலை: சிம்பாப்வேயில் ஐந்து பேர் கைது

சிம்பாப்வேயில் யானைகளை விசம் வைத்துக் கொலை செய்த குற்றச்சாட்டின் கீழ் ஐவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சிம்பாப்வே பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு முகாமைத்துவ அதிகார சபை மற்றும் சிம்பாப்வே பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


ஹவேஞ்ச் தேசிய பூங்காவில் 11 யானைகள் சயனைட் விசம் வைத்து கொல்லப்பட்டுள்ளன என்று சிம்பாப்வே தேசிய பூங்கா அதிகாரிகள் உறுதிப்படுத்தி யுள்ளனர்.

அதேவேளை வடக்கு சிம்பாப்வேயி அமைந்துள்ள மடுசடோனா தேசிய பூ காவில் மூன்று யானைகள் ஆரஞ்சு ப தினுள் விசம் கலந்து கொல்லப்பட்டு ளன. உயிரிழந்த நான்கு யானைகளி தந்தங்கள் அகற்றப்பட்டு காணப் டுள்ளன. ஆபிரிக்க நாடுகளி தற் போ யானைகளை விசம் வைத்து கொன்று தங்களைத் திருடி வருகின்றனர்.



அலைபேசியாகவும், ரோபோவாகவும் இயங்கும் ரோபோ அலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ரோபோன் எனப் பெயரிடப்பட்டுள்ளது. 19.5 சென்ரிமீற்றர் உயரமா
இந்த ரோபோன் உரிமையாளரின் குரலை அவதானிக்கக் கூடியதும், தொலைபேசி உரையாடல்கள், வீடியோ, தொடுதிரை வசதிகளுடனும் நடனமாடக் கூ
யதாகவும், அறிவுறுத்தல்கள் தரக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. கைக்கு அடக்கமான ரோபோன் 2016 ஆம் ஆண்டு விற்பனைக்கு வருகிறது. (ற–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...ன்று அந்நாட்டு ஜனாதிபதி ஜொகோ விடோடோ தெரிவித்துள்ளார். இந்தோனேஷியாவின்.
...களிலும் பரவி வருகிறது. சிங்கப்பூரிடமிருந்து தாம் உதவிகளை பெற்றுக்கொண்டுள்ள
... குறைந்தது மூன்று விமானங்களையேனும் எதிர்ப்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
...ளைத் தாம் எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தோனேஷியாவில் ஏற்பட்டுள்ள
... அங்கு பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. (ற)

# ...ன் இணைந்து
# ...வாய்ப்பில்லை



...ணைந்து ...கே இட ...வறான ...ண்டிருக் ... தாக்கு ...கள் மீது ...யாவின் ...ற்படாத ...சுயல்பட

... அசாத் ...ளர்கள் ...ான்வழ... ஆனால், ...ாராடும் ...நட்டோ ...ன. (ற)

## ...லை: ...கது

...ளனர். ...வேயில் ...சிய பூங் ...ஞ்சு பழத் ...ப்பட்டுள் ...னகளின் ...ணப்பட ...ற் போது ...ன்று தந் (ற)



# இந்தியர் வடிவமைத்த இராட்சத வடிவக்கார்



ஹைதராபாத், ஒக்.9

இந்தியாவின் ஹைதராபாத் நகரில் இராட்சதக் கார் ஒன்று வடிவமைக் கப்பட்டுள்ளது. சுதாகர் யாதவ் என்பவர் வடிமைத்துள்ள இந்தக் கார் 8 மீற்றர் உயரமும், 15 மீற்றர் நீளம், 5.7 மீற்றர் அகலமும் கொண்டது . 1922 ஆம் ஆண்டின் 'போர்ட் டுறேர்' கார் அமைப்பில் இந்தக் கார் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித் துள்ள சுதாகர் யாதவ்:–

இந்தக் கார் உலகின் மிகப்பெரிய கலையம்சமானகார் எனும்கின்னஸ் உலக சாதனையை பெறும் என்ற நம்புகிறேன்.இந்தக்காரை வடிவமைக்க 3 ஆண்டுகள் காலத்தை செலவிட் டேன் –என்று தெரிவித்தார்.

கதவு,ஜன்னல்மற்றும் ஒருமாடிப்படிக் கட்டு அடங்கலாக வடிவமைக்கப்பட் டுள்ள இந்தக் கார் கடந்த செவ்வாய்க் கிழமைமக்கள்பார்வைக்குவிடப்பட்டது. அதேவேளை, சுதாகர் யாதவ் ஏற் கனவே 12.67 மீற்றர் உயர இராட்சத முச்சக்கர வண்டியை வடிவமைத்து கின்னஸ்உலகசாதனைபடைத்திருந் தார். (ற)

# மாயமாகும் விமானங்களை கண்டுபிடிக்க செயற்கைக்கோள்

ஜிங், ஒக்.9

விமானம் மற்றும் கப்பல் என்பவை காணாமற்போனால் அந்த இடத் தைத் துல்லியமாக அறிந்து தேடுதல் பணிகளை சுலபமாக மேற்கொள் ளும் வகையிலான மிகச்சிறிய கண் காணிப்பு செயற்கைக்கோள்களை சீனா விண்ணில் செலுத்தியுள்ளது.

விமானம், கப்பல் ஆகியவற்றின் போக்குவரத்தைக் கண்காணிக்கும் வகையில் மிகச்சிறிய மூன்று செயற் கைக்கோள்களை சீனா முதன்முறை யாக விண்ணில் ஏவியுள்ளது.

'கியூப்' வடிவில் ஒன்றிணைந்து காணப்படும் இவ்வகை செயற்கைக் கோள்கள் 'கியூப் சாட்ஸ்' என அழைப்படுகின்றன. சீனா கடந்த செப்ரெம்பர் 25ஆம் திகதி மூன்று கியூப்சாட் செயற்கைக்கோள்களை விண்ணில்ஏவியது.இவற்றின்மொத்த எடை 6.8 கிலோவாகும்.



இந்தச்செயற்கைக்கோள்களில்துரு வப் பகுதிகளைத் துல்லியமாகப் படம்பிடிக்கும்வகையில்கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அத்துடன் விமானம் மற்றும் கப்பல் ஆகியவற் றின் போக்குவரத்தைக் கண்கா ணித்து அவற்றில் இருந்து கிடைக் கும் சமிக்ஞைகளை பதிவு செய் யும் ஏ.டி.எஸ்–பி சாதனங்களும் பொருத் தப்பட்டுள்ளன.

இவற்றின் மூலம் காணாமற் போகும் விமானம், கப்பல் போன்றவற்றின் விவரங்களைத் துல்லியமாக அறிய முடியும்.

இந்தச் செயற்கைக்கோள்கள் ஒரே நாளில் அவற்றின் எல் லைக்கு உட்பட்ட 12 ஆயிரத்திற் கும் அதிகமான விமானப் போக்கு வரத்தை பதிவு செய்துள்ளன.

விமானம், கப்பல் என்பவை மாய மானால் அந்த இடத்தைத் துல் லியமாக அறிந்து தேடுதல் பணி களை இதன்மூலம் சுலபமாக மேற் கொள்ளலாம் என கியூப்சாட் திட்ட தலைமை வடிவமைப்பாளர் தெரிவித் துள்ளார். (ற)

# திருமண நிகழ்வில் வான் தாக்குதல் யேமனில் 13 பேர் உயிரிழப்பு

சனா, ஒக்.9

யேமனில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள நகர் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட வான் வழித் தாக்குதலில் திருமண நிகழ் வொன்றில் கலந்துகொண்டிருந்த சுமார்13பேர்கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக் கப்படுகிறது.

குறித்த தாக்குதல் சம்பவமானது யேமன்தலைநகர்சனாவில்இருந்து 100 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள சன்பன் எனும் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலின் பின்னணி தொடர்பில் இதுவரை எவ்வித தக வல்களும் வெளியாகவில்லை.

அதேவேளை, ஹௌதி கிளர்ச்சியா ளர்களை தோற்கடிக்கும் முயற்சி யில் சவூதி அரேபியா மற்றும் அதன் வளைகுடா அரேபிய நட்பு நாடுகள் கடந்த மார்ச் மாதம் முதல் யேமனில் வான்தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றன. எனினும் குறித்த இந்தத்



தாக்குதலை சவூதிதலைமையிலான கூட்டணி மறுத்துள்ளது.

அதேவேளை, தென்மேற்கு யேமனில் இடம்பெற்ற திருமண வைபவமொன்றின் போது கடந்த செப்ரெம்பர் மாதம் முன்னெ டுக்கப்பட்ட வான்வழித் தாக்குதலில் சுமார் 135 பேர் கொல்லப்பட்டி ருந்தனர்.

ஹௌதி கிளர்ச்சியாளர்களுக்கும், சவூதி தலைமையிலான கூட்ட ணிக்கும் இடையே கடந்த மார்ச் மாதம் முதல் தொடரும் மோதலில் 2 ஆயிரத்து 355 பொதுமக்கள் உட்பட சுமார் 5 ஆயிரம் பேர் கொல்லப்பட் டுள்ளனர். (ற)




அமெரிக்காவின்,தெற்கு கரோலினாவின் சார்லஸ்டன் நகரப்பகுதியில் வரலாற்றில் எப்போதும் இல்லாத அளவுக்கு கனமழை பெய்து வருகின்றது. கடந்த மூன்று நாள்களில் 35 சென்ரி மீற்றர் மழைவீழ்ச்சி இடம்பெற்றுள்ள... அதைப்படுத்து ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து பாடசாலைகள் நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ள... வெள்ளத்தால் இதுவரை 16 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இராசையா ஸ்ரீதரன்

# அஞ்சேல் என அபயமளிக்கும் ஆஞ்சநேயர்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான ஸ்ரீமகாவிஷ்ணு மூர்த்தியானவர் இராம அவதாரம் எடுத்தபோது அவருக்கு உறுதுணையாக இருந்து அனைத்து உதவிகளையும் செய்து ஆபத்பாந்தவராக விளங்கியவர் ஆஞ்சநேயர். இவர் உற்ற நேரத்தில், உயிராபத்து நேரத்தில் அஞ்சேல் என அபயமளிக்கும் அருட்தெய்வம்.

இராமாயணத்திலே எத்தனையோ விதத்தில் இராமபிரானுக்கு உயிருக்கும் மேலான உதவிகள் செய்த உத்தமசீலரான ஆஞ்சநேயருக்கு இன்று வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் விசேட பொங்கலும் திருவிழாவும் நடைபெற இருக்கின்றன.

நினைத்த காரியம் நிறைவேற வேண்டுமா? உடனே ஆஞ்சநேயரிடம் செல்லவேண்டியது தான். உங்கள் குறைகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் உரையுங்கள். அத்தனையும் நிச்சயம் நிறைவேறும். ஆனால் கெட்ட காரியங்கள் எதையும் செய்யமாட்டார். உலகுக்கு நன்மை பயக்கும் உத்தம நற்செயல்கள் எல்லாவற்றையும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றி வைப்பார்.

ஆஞ்சநேயரின் முகத்தைப் பாருங்கள். நன்றாக உற்றுப்பாருங்கள்.அதிலே ஒரு கனிவும் சாந்தமும் ஒளிவீசிப் பிரகாசிக்கும் நல்ல முகப்பொலிவும் இருக்கும். அவரைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அருள் ஒளிவீசும் காந்தக் கண்கள் எமக்கு ஆறுதலையும் தேறு தலையும் அள்ளிக் கொடுக்கும் தன்மை வாய்ந்தவை. மிகுந்த பராக்கிரமமும் துணிவுமிக்க நல்ல தைரியமும் சகலதையும் செய்கின்ற அதி அற்புத சக்தியும் நல்ல அருள்வழங்கும் தெய்வீகமும் நிறைந்த இவரால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை. மாருதி என்றும் அனுமன் என்றும் அன்போடு அழைக்கப்படும் இவர் அஞ்சனாதேவியின் வயிற்றில் உதித்த வர். உருத்திரனின் அம்சம் கொண்ட இவர் வாயுபுத்திரர் ஆவார்.

இவர் இளவயதில் பாலப்பருவத்தில் பழம் என நினைத்துச் சூரியனையே விழுங்கிவிட்டாராம். அப்போது உலகமே இருண்டு விட்டதாம். பின்பு வாயுபுத்திரனின் செய்கையால் ஏற்பட்ட விபரீதத்தை வாயுபகவானே திருமாலிடம் முறையிட்டுச் சூரியனை அனுமனிடமிருந்து மீட்டதாக வரலாறு பேசுகின்றது.

இவருக்கு அனுமன், வராகர், வாமனர், ஹயக்ரீவன், இராமர் ஆகிய ஐம்முகங்கள் உண்டு. இவரை வணங்கினால் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெறலாம். இந்தியாவிலே இவருக்குப் பல ஆலயங்கள் இருக்கின்றன. மிக உயர்ந்த பெரிய உருவ விக்கிரகங்கள் பல உண்டு. இலங்கையிலே கொழும்பிலும் யாழ். மருதனார்மடத்திலும் கோயில்கள் இருக்கின்றன.

இவரை உண்மையான பக்தியுடன் கைகூப்பி வணங்கிடும் அடியார்களுக்கு அறிவு, பலம், மனத்தைரியம், துணிவு, ஆரோக்கியம், சொல் வன்மை, நல்லபுத்தி,மனஅமைதி, திருப்தி முதலிய எல்லாவற்றையும் அள்ளி வழங்குவார். மார்கழி அமாவாசையோடு வரும் மூல நட்சத்திரத்தில் உதித்த இவர் மும் மூர்த்திகளின் அருள்பெற்ற தனித் தெய்வம்.

இராமபிரானின் தொண்டராக வாழ்ந்த இவர் இலட்சுமணர் மீதும் சீதா பிராட்டியார் மேலும் இடையறாத அன்பு கொண்டவர். இராம தூதராக இலங்கை வந்து பல்வேறு சாதனைகள் படைத்த ஆஞ்சநேயர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாலம் அமைத்து தசரத புத்திரர்கள் இலங்கை வந்து சேர உதவிய பெருமையை உடையவர்.

கண்டேன் சீதையைக் கண்களால் என்று ஒரு வரியிலேயே இராமபிரானுக்கு பதில் கூறி, இராவணேஸ்வரனுடைய ஆணவத்தையும் பேராசையையும் அழித்து, உலக சேமத்துக்காக விஸ்வரூபம் எடுத்து அருள் புரிந்த அன்புத்தெய்வம் அவர்.

# கோலாகலமாக இடம்பெற்றது

## திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழா





● லக்ஸ்மன்

திருமறைக் கலாமன்றத்தின் பொன் விழாவையொட்டி மூவின மக்களும் கலந்து கொண்ட நடை பவனி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இருந்து நகரின் முக்கிய வீதி வழியாக திருமறைக் கலாமன்றத்தின் அரங்கைச் சென்றடைய மன்றத்தின் பொன் விழா கோலாகலமாக ஆரம்பமானது. கடந்த சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையுமாக இரண்டு தினங்கள் இடம்பெற்ற இந்த விழா தமிழ் மக்களின் கலைகளை மட்டுமன்றி நாட்டின் மூவின மக்களின் கலைப் பாரம்பரியங்களையும் வெளிப்படுத்தும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்து சமயத்துக்கான பரதம் போன்ற கலைகளையும் ஏனைய மக்களின் கலைகளையும் உலகெங்கும் எடுத்துச் சென்று பெருமைப்படுத்திய திருமறைக்கலாமன்றம் கடந்த ஐம்பது ஆண்டுகளாக எல்லா மக்களையும் ஒன்றுபடுத்திய பெருமையையும் தனதாக்கிக் கொண்டது. போர் நிகழ்ந்த பிரதேசத்தில் மக்கள் அதன் தாக்கங்களில் இருந்து தம்மை விடுவிக்கக்கூடியதான புதிய கலைகளைக் காட்சிப்படுத்தி அளப்பரிய தொண்டாற்றியுள்ளது. இதற்குக் காரணமாக விளங்கிய திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகளும் அதன் இயக்குநர் மரிய சேவியர் அடிகளாரும் பாராட்டுக்குரியவர்கள் என ஆதீன முதல் வர் தனது ஆசி யுரையில் கூறினார். தனமல் வேல சரவணானந்த தேரர் வாழ்த்துரை வழங்கினார்.

யாழ்.குருமுதல்வர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அங்கு உரையாற்றுகையில் அனைத்து மதங்களையும் மதித்து கலைச் சேவையினூடாக போர்ச் சூழலில் இருண்டு கிடந்த யாழ்ப்பாணத்துக்கு வெளிச்ச மூட்டி நம்பிக்கையை அளித்தவர் திருமறைக்கலாமன்றத்தின் இயக்குநர் மரியசேவியர் அடிகளார். இந்த மன்றத்தை 1965 இல் ஆரம்பித்து கலைப்பணியூடாக இறைபணியை முன்னெடுத்து ஐம்பது ஆண்டுகளில் ஒரு பெரிய விருட்சமாக உலகெங்கும் எமது கலை பண்பாட்டு சிறப்புக்களை எடுத்துச் சென்ற ஒரேயொரு நிறுவனமாக தமிழ் மக்களுக்குப் பெருமைசேர்த்தவர் களார் தென்பகுதிக் கலைகளதும் கலைஞர்களதும் வளர்ச்சிக்கும் தொண்டாற்றியுள்ளார். நேரத்தை அனுசரிக்கும்பண்புள்ள ஒரேயொரு நிறுவனமாக இந்த மண் ணில் இயங் குவது திருமறைக் கலாமன்றம் மட்டுமே என்றார்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் என இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களதும் கலைப் பாரம்பரியங்களை உலகம் தெரிந்து கொள்ளச் செய்தலில் மரிய சேவியர் அடிகளாரும் அவருடன் இணைந்து செயற்படும் கலைஞர்களும் முக்கியமானவர்கள் என்பது மறுக்கமுடியாதது.

தூயசிந்தனையோடு தொண்டு செய்பவர்கள் தோற்றுப்போனதாக இல்லை. திருமறைக் கலாமன்றம் தூய சிந்தனையோடு துணிந்து நின்று கலைப்பணி ஆற்றுகின்றது எனவும் கடந்த முப்பது வருடங்களுக்கு முன்னர் இயக்குநர் மரிய சேவியர் அடிகளாரைக் கண்டேன். அன்றைக்கே அவரைக் கலைத் தேன் என்று அடிகளார் மீதுள்ள மரியாதையை எடுத்தியம்பினார் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.

முதல் நாள் நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் அ.சண்முகதாஸ் இயலைவிட இசை, நாடகம் என்பவற்றை இணைத்து கலைகளின் நுணுக்கங்களை அறியவும் நுகரவும் வழிகாட்டியது திருமறைக் கலாமன்றம். நாடகங்களில் புதிய புதிய உத்திகளைக் கையாள்வதும் அதற்கான அணிசெய் கலைஞர்களின் ஒத்துழைப்பை நல்லமுறையில் பெற்றுக் கொள்வதும் சிறப்பாக உள்ளது. எமது கலைகளை வளர்ப்பதுடன் அவை தொடர்பான நூல்கள் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகின்றது. எமது கலைகள் நாடு கடந்து நகர வைத்திருக்கிறது. ஏனைய மதங்களில் காணப்படும் கலைப்பொக்கிஷங்களையும் உள்வாங்கி இடம்பெறும் கலை வடிவங்கள் குறித்து கிறிஸ்தவர்கள் கொதித்துப்போன வேளைகளில் நடுநிலையில் நின்று எவ்வாறு அவற்றை இணைத்துக்கொள்ளலாம் என்பதை எடுத்துக்காட்டியும் ஆலோசித்தும் ஐம்பது வருடங்களாக இலங்கை மற்றும் பிற நாடுகளுக்கும் தனது பணியைச் செய்யும் மரியசேவியர் அடிகளாருக்கும் திருமறைக்கலாமன்றத்துக்கும் இறைவனின் ஆசி கிட்டும். தமிழ்த் தூதாக எமது மொழியை உலகுக்கு எடுத்துச் சென்றவர் தனிநாயகம் அடிகளார். கலைத்தூதாக எமது கலைகளை எடுத்துச் செல்கிறார் மரிய சேவியர் அடிகளார். இது எமக்குப் பெருமை சேர்க்கிறது என பேராசிரியர் சண்முகதாஸ் ஐம்பதாவது ஆண்டு நிறைவை வாழ்த்திக் கொண்டார்.

இந்த நாட்டில் இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்த, கலைகளைப் பலமாக்கியவர் கலை என்ற வடிவத்தின் ஊடாகத் தமது முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டிருப்பதும் சிறப்பானதென்ற கருத்தை மேல்திக அரச அதிபர் சு.முரளிதரன் (காணி) வழங்கினார்.

திருமறைக் கலாமன்றம் நாட்டின் 18 மாவட்டங்களில் இருபது கிளைகளைக் கொண்டுள்ளது. கலைகளினூடாக நாட்டின் ஒற்றுமைக்கு வித்திடத் துணிந்த மரியசேவியரின் பணியும் திருமறைக் கலாமன்றத்தின் பங்கும் இன்றைய தேவை என்பதை ஒப்புக்கொண்ட திருமதி சஞ்சீவினி முனசிங்க அதன்பணிகளில் தன்னையும் இணைத்துக் கொண்டமை குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார். திருமறைக் கலாமன்ற ஆளுநர் சபையில் அவரும் ஓர் உறுப்பினராவார். திருமதி அஜித்தா உதயங்கனி ரட்ணநாயக்க கண்டி திருமறைக்கலாமன்றத்தின் இணைப்பாளராவார்.

இரண்டு நாள் நிகழ்வுகளிலும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ சிறில், அருட்தந்தை செ.அன்புராசா, திருமதி ஜெனோவா அற்புதம், கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோர் உரையாற்றி னார்கள். திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. யோன்சன் ராஜ்குமார் திருமறைக் கலா மன்றத்தின் உதயம் குறித்தும் பலத்த சிரமங்களின் மத்தியிலும் அதன் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்த மரிய சேவியர் அடிகளார் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காகவும் கலைஞர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவித்தும் விரிவான உரை ஒன்றை நிகழ்த்தினார்.

தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த இளம்கலைஞர்களினதும் குடாநாட்டில் உள்ள கலைஞர்களினதும் கலை நிகழ்வுகள் அனைத்துப் பார்வையாளர்களினது பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டன. ஏற்கனவே மேடையேற்றப்பட்ட நாடகங்களின் காட்சிகளும் திரையிடப்பட்டன. திருமதி சஞ்சீவினி ரணசிங்க கௌரவிக் கப்பட்டார். தன்னுடன் மன்றத்துக்காகக் கைகொடுத்து வந்த கலைஞர்களின் திறமைகளையும் உற்சாகத்தையும் எட்டத்தில் இருந்தபடியே பார்வையாளர்களுடன் ரசித்துக் கொண்டிருந்தார் இயக்குநர் மரிய சேவியர் அடிகளார். மன்றத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா மனம் நிறைந்த விழாவாக அமைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் கிளினிக்கில் இப்படியுமா?

யாழ். போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவுக்கு யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் பிறமாவட்டங்களிலிருந்தும் ஏராளமான நோயாளிகள் கண்சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காகத் தினமும் வந்து செல்வர். அத்தனை நோயாளர்களையும் ஒழுங்குபடுத்திப் பதிவுகளை மேற்கொண்டு மருத்துவர்களிடம் காட்டி உரிய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளச் செய்யும் கண்ணியமான செயலானது கண்கிளினிக்கில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் அதே வேளை ஒரு கண்ணியமற்ற செயலையும் காணக்கூடியதாக இருந்தது.

அதாவது, அன்றாடம் செல்லும் புதிய நோயாளிகளிடம் 60 ரூபா பணம் பெற்றுக் கொண்டு 50 ரூபாவுக்கு ஒரு பெரிய கொப்பியும் 10 ரூபாவுக்கு ஒரு சிறிய கொப்பியும் வழங்கப்பட்டு அவற்றில் பதிவுகள் மேற்கொள்ளப்படுவது வழமை. ஆனால் கடந்த மாதத்தில் ஒரு நாள் நான் புதிதாகக் கண் சிகிச்சைக்காகச் சென்றிருந்தேன். அங்கு நடைபெற்றிருந்த ஒரு செயலைக் கண்டு நான் துவண்டுபோனேன். அதாவது புதியவர்கள் 40 பேருக்கு இலக்கங்கள் வழங்கப்பட்டு 60 ரூபா பணமும் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு ஒரு பெரிய கொப்பியும் ஒரு சிறிய கொப்பியுமாக இரு கொப்பிகள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால் 10 இற்கும் மேற்பட்ட புதிய நோயாளிகளுக்கு, முன்னர் வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களது பெயர்களும், பார்வையின் வீச்சு மற்றும் நோய்கள் தொடர்பான பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த பெரிய கொப்பிகள் முன்னைய பதிவுகள் அழிக்கப்பட்ட நிலையில் வழங்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்த்ததும் என் மனம் சிகிச்சைக்கு ஒப்புதலின்றி பணம் கொடுத்துக் கொப்பிகளைப் பெற மனமின்றிக் கண் கிளினிக்கை விட்டு வெளியேறிவிட்டேன். கண் என்பது ஒவ்வொருவரது உடலிலும் உள்ள ஒரு பிரதானமான உறுப்பு. எனவே கண் தொடர்பான சிகிச்சைகளின்போது கண்ணின் பார்வை வீச்சு மற்றும் குறைபாடுகள் துல்லியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவை.

அவை இன்னொருவருடைய பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட கொப்பிகளில் குறிப்பிடப்படும்போது மருத்துவர் மற்றும் பணியாளர்களுக்குப் பல இடையூறுகளையும் ஏற்படுத்தும். எனவே கண் கிளினிக்கில் இவ்வாறான கண்ணியமற்ற செயல்கள் இடம்பெறாமல் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொண்டு பிரதான உறுப்பான கண் தொடர்பான சிகிச்சைகளை மேன் மேலும் சிறப்பாகச் செய்வார்களென மக்கள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

**சாந்தன்,** வட்டுக்கோட்டை.

## சட்டத்தரணிகள் மதிப்பைக் காப்பாற்ற வேண்டும்

சட்டத்தரணிகள் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கப்படுபவர்கள். இவர்கள் நீதிமன்றங்களில் முன்னிலையாகி பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் அளப்பரிய பணியை ஆற்றுபவர்கள்.

சட்டத்தரணிகளே நீதித்துறையின் மிகவும் உயர்ந்த பதவிகளுக்கும் நியமிக்கப்படுகின்றனர். ஆகவேதான் அவர்களுக்கு சமுதாயத்தில் எப்போதுமே பெரும் மதிப்பு உள்ளது.

ஆனால் சில சட்டத்தரணிகள் தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் மனதுக்கு வேதனையைத் தருகின்றன. தவறான வகையில் காணியொன்றைப் பெயர் மாற்றம் செய்ததில் சட்டத்தரணி ஒருவருக்கும் தொடர்பு உள்ளதாகவும், தாபரிப்பு வழக்கொன்றில் செலுத்தப்பட்ட தாபரிப்புப் பணத்தை உரிய பெண்ணிடம் வழங்காது சட்டத்தரணி ஒருவர் அபகரித்துவிட்டதாகவும் பத்திரிகையில் செய்திகள் வெளிவந்திருந்தன. இவை தொடர்பானஉண்மைகளைநீதிமன்றம்வெளிக்கொணர வேண்டும். அப்போதுதான் நீதித்துறை மீதான நம்பிக்கை மக்களிடையே தொடர்ந்து பேணப்படும்.

மேலும் சட்டத்தரணிகள் தம்மை நாடிவரும் மக்களுக்கு இழுத்தடிப்புச் செய்யாமல் உதவும் மனப்பான்மையுடன் செயற்படுவார்களாயின் நீதி நிலை நாட்டப்பட்டுவிடும். சட்டத்தரணிகள் மீதான மதிப்பும் உயர்ந்து விடும். எத்தனையோ பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நீதி கிடைக்குமென்ற நம்பிக்கையுடனேயே சட்டத்தரணிகளை நாடுகின்றனர். இவர்களுக்கு உதவி செய்வது சட்டத்தரணிகளின் முக்கிய கடமையாகும்.

– **ந.செல்வநாதன்,** கொக்குவில்.





## குடிதண்ணீர் விநியோகம் சீராகுமா?

கடந்த ஒரு வார காலமாக ஏழாலை மேற்குப் பகுதியில் உள்ள குடிதண்ணீர் தாங்கிகளில் நீர் நிரப்பப்படவில்லை. இது போன்று அடிக்கடி நடைபெறுவது வழமைதான். ஆனால் தற்போது மழை பெய்வதால் மக்கள் தூர இடங்களுக்குச் சென்று குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இதேவேளை இது தொடர்பாக பலதடவைகள் அறிவித்திருந்தும் உரிய அதிகாரிகள் கண்டுகொள்வதில்லை என்பதே மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். எனவே மக்கள் நலனில் அக்கறை கொண்டு இதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஏழாலை மேற்கில் வசிக்கும் மக்கள் தயவுடன் கேட்டுக் கொள்கின்றனர்.

- **க.பத்மா,** ஏழாலை மேற்கு.

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# சாவுத் தண்டனை அவசியமானதா?

நாட்டில் சாவுத்தண்டனையை மீண்டும் நடைமுறைப் படுத்துவதா, இல்லையா என்ற விடயம் தொடர்பில் அண்மைக் காலமாக வாதப்பிரதிவாதங்கள் சூடு பிடித்து வருவதை அவதானிக்கமுடிகின்றது.

நாடாளுமன்றத்திலும் சாவுத் தண்டனையை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

பௌத்தமத கலாசாரப்படி சாவுத் தண்டனை நடைமுறை விரோதமானது எனப் பலர் கருத்து வெளியிட்டுள்ளனர். சிறுவர்களைபாலியல்ரீதியாகக் கொடுமைப்படுத்துவோர், கொலை செய்வோருக்கு எதிராக சாவுத் தண்டனை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்துகளையும் ஹிருணிகா பிரேமச்சந்திர போன்றோர் முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபை விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இலங்கை சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக ஒத்திவைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை விடுத்தவேண்டுகோளின் அடிப்படையிலும் உலகின் 102நாடுகள் சாவுத் தண்டனையைக் கைவிட் டுள்ளதைக் கருத்தில்கொண்டுமே தாங்கள் இந்த முடிவை எடுத்துள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள நீதியமைச்சர்,

இலங்கை உடனடியாக சாவுத் தண்டனை சட்டத்தை நிறைவேற்றப் போவதில்லை என ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் மங்களசமரவீர உறுதிமொழியை வழங்கி யுள்ளார். பரிசுத்த பாப்பரசரும் கூட சமீபத்தில் உலக நாடுகள் சாவுத் தண்டனையைக் கைவிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்ததாக நினைவுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நீதி தொடர்பாக சில பிரச் சினைகள் உள்ளன. இது தொடர்பாக நாடாளுமன்றம் விரிவாக விவா திக்க வேண்டும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்செயல்களுக்கு சாவுத்தண்டனை ஒரு தீர்வாக அமையாது. சாவுத்தண்டனையை நடைமுறைப் படுத்துவதால் மாத்திரம் குற்றச்செயல்களைக் குறைத்து விட முடியாது.

ஒரு குற்றவாளிக்கு சாவுத்தண்டனை விதிப்பதன் மூலம் இன்னுமொருவருக்குப் பாடம் புகட்ட நினைப்பது மடமையாகும். மாறாக, அவரைச் சமூகத்தில் நடைப்பிணமாக வாழவிடுவதால் அவருக்கு மட்டுமன்றி மற்றையோருக்கும் ஒரு பாடமாக அமையலாம். சொத்து, சுகம் மற்றும் குடியுரிமை முதல் உறவுகள் வரை சகலவற்றையும் சட்டத்தின் மூலம் பறித்து அநாதரவாக அலையவிட வேண்டும். ஊரை விட்டு விலக்கி வைப்பது போன்ற தண்டனை புராண காலத்தில் இருந்து அண்மைக்காலம் வரை நடைமுறையில் இருந்துள்ளதே!

சாவுத் தண்டனையை நடைமுறைமுறைப்படுத்துவதால் மட்டும் குற்றச் செயல்கள் குறைந்துவிடப்போவதில்லை. அல்லது சாவுத்தண்டனை மட்டும் பாலியல் குற்றங்களைத் தடுக்க தீர்வாகப் போவதில்லை என்ற குரலும் நாட்டில் பலமாக ஒலிக்கிறது.

ஆயினும் நாட்டில் பெண்ணுரிமை அமைப்புக்கள், செயற்பாட்டாளர்கள் மோசமான பாலியல் குற்றவாளிகளுக்கு சாவுத் தண்டனையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்றும் தொடர்ச்சியாக குரல் எழுப்பி வருகின்றனர். பெண்கள் மீதான வன்முறைகள் நாட்டில் நாளுக்குநாள் அதிகரித்து வரும் இந்த வேளையில் அவர்களது கோரிக்கை நியாயமானது என்றாலும் சாவுத் தண்டனையை மீண்டும் கொண்டுவரும் விடயத்தில் ஒன்றுக்குப் பலதடவை சிந்திக்க வேண்டி உள்ளது என மனித உரிமைகள் அமைப்புகள் சுட்டிக்காட்டி உள்ளன.

சாவுத் தண்டனைத் தீர்ப்பு பயன்தருமென்றால், இன்று சவூதி அரேபியாவில் குற்றச் செயல்கள் நிகழக் கூடாதே. சர்வதேச மனித உரிமைகள் சபையின் அறிக்கை ஒன்றின்படி, சவூதி அரேபியாவில் கடந்த வருடத்தில் குறைந்தது 90 பேருக்கு எதிராக சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. நடப்பு வருடத்தின் முதல் 3 மாதங்களில் மட்டும் 54 பேர் இதுபோன்ற தண்டனைகளுக்கு ஆளாகி இருக்கின்றார்கள்.

சொந்த நலன்களுக்காகச் சில அரசியல்வாதிகள் இது போன்ற தண்டனையை ஊக்கு வித்தாலும், ஒருநாள் அது அவர்களுக்கும் பாதகமாக அமையலாமென்பதை ஏனோ மறந்து விடுகின்றார்கள். சர்வதேச நாடுகள் சாவுத் தண்டனைஒழிப்புப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது, 1976 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் பல தசாப்தங்களாக நடைமுறையில் இல்லாத இந்தத் தண்டனையை நடைமுறைப் படுத்த எண்ணுவது நல்லதல்ல.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமத்துவ சகவாழ்வுப் பாதையில் அரசு கால் பதிப்பது எப்போது..?

★ எதிர்காலத்தில், இனவாதம் சார்ந்த கடும்போக்கு நிறைந்த கொள்கைகள் நிராகரிக்கப்பட வேண்டும். அனைத்துத் தரப்பினர்களும், இதில் நெகிழ்வுப் போக்கைப் பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

★ எங்கள் நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் பின்னர், இந்தத் தேசம் குறித்து அனைத்துலக நிலைப்பாட்டில் பெரும் மாற்றம் உண்டாகி உள்ளது.

-- இந்தச் சாதகமான நிலைமையை, அதன் நற்தன்மையை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ எதிர்காலத்தில் இனவாத கடும்போக்குக் கொள்கைகள் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும்.

★ சிங்கள இனவாதிகளின், இனவாதக் கொள்கைகள் தொடர்ந்தால், நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்க மாட்டாது. எமது நாடு மீண்டும் பிரச்சினைகளையும் (அனைத்துலக) அழுத்தங்களையுமே எதிர்கொள்ள நேரிடும்.

★ அதுமட்டுமன்றி கடும்போக்கு வாதக்கொள்கைகள் மேலெழுந்தால் மீண்டும் பிரச்சினைகளையும் அழுத்தங்களையுமே எதிர்கொள்ள நேரிடும். நாட்டுக்கு எந்த நன்மையும் கிடை யாது, கைகூடாது.

மேற்போந்த, ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்தை வெளியிட்டு இருப்பவர் இந்த நாட் டின் அரசியல் பிரகிருதி எவருமல்லர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உளவியல் பீடத்தின் முன்னாள் பொறுப்பாளரான பேராசிரியர் டெஸ்மன் மல்லிகாராய்ச்சியே அவராவார். அவர் தெரிவித்த அர்த்தமுள்ள, பெறுமதியுடைய கருத்துக்களையும் இங்கு தொட்டுக் காட்டுவது பொருத்தம்:

• வடக்கையும் தெற்கையும் சேர்ந்த கடும்போக்காளர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை காத்திரமற்ற ஒன்றாக நோக்குகின்றனர்; பார்க்கின்றனர்.

• கடும்போக்குவாத நிலைப்பாடுகளால் நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. நாடு மீண்டும் பிரச்சினைகளையும் (அனைத்துலக) அழுத்தங்களையுமே எதிர்கொள்ள நேரிடும் என்றும், அவர் மிகத் தெளிவாக, விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

• தமிழ்க் கடும் பேரினவாதத்தில் ஊன்றிப் போயுள்ள விமல் வீரவன்ச, குணதாச அமரசேகர போன்ற சிங்கள இனவாதிகள் இணைந்து கொண்டு, அரசின் மீது குற்றம் காண்பதில் ஈடுபடுகின்றனர்.

• நாட்டில் வாழும் இனங்களில் ஒன்றின் மீது, அதாவது தமிழ் மக்களின் வாழ்வியல் மீது சொல்லொணா நெருக்கடிகளையும், உரிமைப் பறிப்புக்களையும் ஏற்படுத்துவதன் மூலமும்--

சிறுபான்மை இனத்தவர்களை காலால் மிதித்துத் துவம்சம் செய்வதன் மூலமும் உண்டான பாதிப்புக்களையும் மனக் கசப்புக்களையும் போக்குவதற்காக மனுநீதியின் பாற்பட்டு செயற்படாத --

கொழும்பு அரசுகள் தாமாகவே வினையைத் தேடிக்கொள்கின்றன என்பதைவிட, வேறு எதனைக் கூறுவது?

ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும், வாழ்வியல் மீது இனவாத இரும்புக் கரத்தைப் பதித்துக் கிழித்து எறிந்து, அதன் இருப்பைக் கேள்விக் குறியாக்கும் போது --


பாதிப்புறும் தமிழ் இனம் எதற்கும் தயங்காத, பின்னிற்காத போக்கைக் கைக்கொள்ளத் துடிப்பது பரிணாம வளர்ச்சியின் போக்கு என்பதை, தெற்கின் அரசியல் தலைவர்கள் உணர்வதற்கு மறுக்கின்றனர்.

பூனை கண்ணை மூடிக்கொண்டால், பூலோகம் இருண்டுபோய் விடுமா, என்ன ?

கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்தியமைக்கு, அவர்கள் மீது - தமிழ் மக்கள் மீது - திணிக்கப்பட்ட பல்வேறு நெருக்கடிகளே காரணமாகின. அத்தகைய நெருக்கடிகளின் "களத்தை" உருவாக்கியவர்கள் தென்னிலங்கை அரசியல் பிரகிருதிகளே.

இந்த யதார்த்த உண்மையை, புரிந்துகொள் ளும் நிலையும், தகுதியும் முப்பது ஆண்டுகள் கழிந்தும் அவர்களிடம் முகிழ்க்காது இருப்பது இந்த நாட்டின் சாபக்கேடாகிவிட்டது. இப்போதாவது இதனை உணர்ந்து சமத்துவ சக வாழ்வுப் பாதையில் புதிய அரசு கால் பதிப்பது எப்போது......?

# வடக்கு முதலமைச்சரின் கூற்று தமிழர்களுக்கு ஏற்புடையதா?



சேரலாதன்

தமிழ் மக்கள் தனித்து வாழவே விரும்புவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதி கலந்து கொண்ட ஒரு நிகழ்வில் வைத்துக் கூறியுள்ளார். அவரதுஅந்தக் கருத்து தமிழ் மக்களின் ஒட்டுமொத்த உணர்வைப் பிரதிபலிப்பதாகக் கொள்ள முடியும். ஏனென்றால் இந்த நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்ற இன்னல்கள் மிகக் கொடுமையானவை. அன்னியர் இந்த நாட்டில் காலடி எடுத்து வைக்கும் வரை தமிழர்களுக்கென தனி அரசுகள் இருந்தன. தமிழர்கள் தம்மைத்தாமே ஆளுகின்ற வல்லமையையும் கொண்டிருந் தனர். எவருக்கும் கட்டுப்பட்டு அடிமைகளாக இருக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்கவில்லை. தமது மதத்தைப் போற்றி வழிபடுகின்ற சுதந்திரத்தையும் அவர்கள் பெற்றிருந்தனர். ஆனால் அந்நியரின் வருகை தமிழர் களைப் பல்வேறு வகையிலும் பாதித்துவிட்டது. அது இன்றும் தொடர்கின்றது.

அந்நியரிடமிருந்து நாடு சுதந் திரம் அடைந்தது என்னவோ உண்மைதான். ஆனால் அதே சுதந்திர தினத்தன்று தமிழர்களுக்கு அடிமைச் சாசனமும் எழுதப்பட்டுவிட்டது. இலங்கையின் பழைய வரலாறுகள் தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்பதாகக் கூறுகின்றன. ஆனால் இன்று இதனை முற்றுமுழுதாக மூடி மறைத்து தமிழர்கள் வந்தேறு குடிகள் என்பதாகப் புதிதாக எழுதப்பட்ட பௌத்த நூல்களில் தெரிவிக்கப்படுகின்றது. பெரும்பான்மையின மக்களும் இதையே உண்மையென நம்புவதோடு தமிழர்களை ஏளனமாகவும் நோக்குகின்றனர்.

வடக்கு – கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் பூர்வீக பூமி என்பது பழைய வரலாறாக மாறிவிட்டது. திட்டமிட்ட குடியேற்றங்கள் காரணமாக கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் சிறுபான்மையினராக மாற்றப்பட்டுவிட்டனர். அந்த மாகாணத்தில் தமிழர்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நிலையிலும் தமிழர்கள் இல்லை. மாகாண அரசில் ஒட்டிக்கொண்டிருக்கும் நிலை தான் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலும் கிழக்கைப் போன்றதொரு நிலையை ஏற்படுத்துவதே அரசின் நோக்கமென்பதையும் புரிந்துகொள்ள முடிகின்றது. இது நிறைவேறிவிட்டால் தமிழர்கள் தமது தாயக பூமியென எதையும் குறிப்பிட்டுப் பேச முடியாது.

அதிலும் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் கேட்பதற்கு எவருமில்லை என்ற தோரணையில் காரியங்கள் இடம் பெற்று வருகின்றன. தமிழர்களும் பாதுகாப்பில்லாத ஏதிலிகளாக மாறிவிட்டனர். அது மட்டுமல்லாது தமிழர் பகுதிகளில் இடம்பெறு கின்ற வன்முறைச் சம்பவங்கள், போதைப் பொருள் பாவனை, துஷ்பிரயோகங்கள் ஆகியனவும் அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகின்றது. இதன் காரணமாகத் தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவை காணாமற் போய் விடும் நிலையும் உருவாகிவிட்டது.

இறுதிப் போரின்போது தமிழ்மக்கள் எதிர்கொண்ட மனிதப் பேரவலத்தை வார்த்தைகளில் வடிக்க முடியாது. ஆனால் அந்த மக்கள் தமக்கு நேர்ந்த அநீதிகளுக்கு இன்னமும் நியாயம் கிடைக்காத நிலையில் ஏக்கத்துடன் உள்ளனர். சர் வதேச நாடுகள் கூட அவர்களைக் கைவிட்டு விட்டதாகவே கருத வேண்டியுள்ளது. இதேவேளை – முன்னரே எதிர்பார்க்கப்பட்டதைப்போன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டு வாக்கெடுப்பு எதுவுமின்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை அரசுக்கு ஒரு வகையில் சாதகமானதென்றே கூறமுடியும்.

இறுதிப் போரின்போது தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக போர் நிறைவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்த நிலையிலும் நியாயமான விசாரணைகள் எதுவும் இடம்பெறாததோடு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை. அரசு பெயரளவுக்குச் சில ஆணைக் குழுக்களை நிறுவியபோதிலும் அவற்றினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவித பயனும் கிடைக்கவில்லை. மாறாக சர்வதேசத்தை ஏமாற்றும் முயற்சியாகவே இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளை அழித்த மாவீரன் தாமேயென மார்தட்டிக் கொக்கரித்த மகிந்த ராஜபக்ச தாமொரு பெரும்பான்மையின மக்களின் தலைவர் என்பதைப் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளார். சிறுபான்மைத் தமிழ் மக்களை அவர் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. ஆனால் பழிநின்று கொல்லும் என்பதற்கிணங்க ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளால் அவர் தோல்வியைத் தழுவ நேரிட்டது. தமிழர்களின் வாக்குகளே தம்மைத் தோற்கடித்ததாக மகிந்த பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறித் தமது வெஞ்சினத்தை வெளிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் தம்மால் வாழமுடியாது என்று கருதியதன் காரணமாகவே சுமார் 10 லட்சம் தமிழர்கள் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வசித்துவருகின்றனர். இதனால் நாட்டில் தமிழர்களின் குடிப்பரம்பலில் பெரும் வீழ்ச்சி காணப்படுகின்றது. விரைவில் இரண்டாவது பெரிய இனம் என்ற கௌரவத்தையும் தமிழர்கள் இழந்து நிற்கப் போகின்றனர். இந்த நிலையில் தமக்குப் பாதுகாப்பானதொரு சூழலைத்தான் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் இன்று வரை அத்தகையதொரு சூழல் இந்த நாட்டில் உருவாக்கப்படவில்லை என்பதுதான் உண்மை நிலை. இன்றும் கூடத் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதி லேயே கருத்தாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் இதுவரை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படவில்லை. அவர்களது காணிகளைப் படையினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர். படையினரை மீறி அரசினால் எதுவுமே செய்ய முடியாததொரு நிலையும் காணப்படுகின்றது. மேலும், தென்னிலங்கையிலுள்ள இனவாதிகளும் இனவாதக் கருத்துக்களைத் தாராளமாகவே பரப்பி வருகின்றனர். இறுதிப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் இடம் பெறக்கூடாது என்ற நிலைப்பாடே தென்னிலங்கையில் காணப்படுகின்றது. விமல் வீரவன்ச போன்ற இனவாதிகள் இந்தப் பிரச்சினையைப் பூதாகரமாக மாற்றி நாட்டில் மீண்டுமொரு அமைதியின்மையை ஏற்படுத்திவிடுவார்களென்ற அச்சமும் காணப்படுகின்றது. ஏனென்றால் மகிந்த தரப்பினரும் வீரவன்சவின் செயல்களுக்கு ஊக்கமளிக்கும் நிலைப்பாட்டில் இருப்பதும் தெரிகின்றது.

இந்த நிலையில் எதிர்காலத்திலும் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலை இந்த நாட்டில் உருவாகுமென எதிர்பார்க்க முடியாது. எதிர்காலச் சந்ததியினராவது அச்சமில்லாததொரு வாழ்க்கை வாழ வேண்டும். இதை உணர்ந்தவர் போன்று தான் வடமாகாண முதலமைச்சர் தமிழர்கள் தனித்து வாழ விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களுக்கு மேன்மேலும் இந்த நாட்டில் அநீதி இழைக்கப்படுமாயின் முதலமைச்சரின் கூற்று மட்டும்தான் ஒரு தீர்வாக அமைய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராணுவத்தின் பாலியல் வன்புணர்வு சர்வதேச குற்றம் – போர்க் குற்றம்

## விசுவமடு பெண் கூட்டு வன்புணர்வு வழக்கில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தின் விசுவமடு கூட்டுப் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் துஷ்பிரயோக வழக்கில் எதிரிகளான 4 இராணுவத்தினருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு வன்னிப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது, இராணுவத்தினரால், விசுவமடுப் பகுதியில் இரண்டு குழந்தைகளின் தாயார் ஒருவர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதுடன், 5 பிள்ளைகளின் தாயார் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார். நள்ளிரவு வேளையில் பாதுகாப்பற்ற தற்காலிகக் கூடார வீடொன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தினால் விசுவமடு பிரதேசம் மட்டுமல்லாமல் கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்றப் பிரதேசமே பெரும் அச்சத்தில் மூழ்கியிருந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து, முழுமையான இராணுவ மயமாகியிருந்த சூழலில், கொட்டில்களிலும் தறப்பாள் கூடாரங்களிலும் மக்கள் மீள்குடியேறியிருந்த அந்த நேரம் பெண்கள் உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் எந்த வேளையில் என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்ற அச்சத்துடனேயே இரவு நேரங்களைக் கழித்தார்கள்.

**கூட்டு வன்புணர்வு**

இந்தச் சம்பவத்தில் விசுவமடுவைச் சேர்ந்த 27 வயதுடைய 2 பிள்ளைகளின் தாயார் ஒருவரை கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகவும், மற்றுமொரு பெண்ணாகிய 5 பிள்ளைகளின் தாயாரைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகவும் குற்றம் சுமத்தி சட்டமா அதிபர் 4 இராணுவத்தினருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

விசுவமடு பிரதேச இராணுவ முகாமில் கடமையாற்றிவந்த, பண்டிதகெதர சாந்த சுபசிங்க, பத்திரண பண்டாரநாயக்க பிரியந்த குமார, தெல்கொல்லகே தனுஸ்க புஸ்பகுமார, கொப்பேராலகே கெதர தனுஸ்க பிரியலால் ரத்நாயக்க ஆகிய 4 இராணுவச் சிப்பாய்களுக்கு எதிராக இந்த வழக்கில் 5 கூட்டுப் பாலியல் வன்புணர்வு, பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்கு விசாரணையின் போது, நான்காவது எதிரி மன்றில் முன்னிலையாகவில்லை. தலைமறைவாகியிருந்தார். அவர் இல்லாமலேயே இந்த வழக்கு விசாரணை நடைபெற்று புதன்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டது.

**தண்டனை**

வழக்கு விசாரணையின் முடிவில் 81 பக்கங்களைக் கொண்ட தனது தீர்ப்பை நீதிபதி இளஞ்செழியன் ஒரு மணித்தியாலம் பகிரங்கமாக நீதிமன்றத்தில் வாசித்தார். குற்றம் சுமத்தப்பட்டிருந்த 4 இராணுவச் சிப்பாய்களும் விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருப்பதாகத் தெரிவித்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் மொத்தமாக 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்குவதாகத் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

இரண்டு பிள்ளைகளின் தாயாராகிய இளம்பெண்ணைக் கூட்டுப்பா லியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் நால்வருக்கும், இந்தத் தீர்ப்பில் தலா 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக் கப்பட்டுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தாயாராகிய பெண்ணை அதே சம்பவத்தில் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமைக் காக நான்கு எதிரிகளுக்கும் இந்தத் தீர்ப்பில் 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

**நட்டஈடும் தண்டமும்**

வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு நட்டஈடாக 5 லட்ச ரூபாவும், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணுக்கு நட்டஈடாக ஒரு லட்ச ரூபாவும் வழங்க வேண்டும் என்றும், நட்டஈட்டைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் எதிரிகள் ஒவ்வொருவரும் 3 வருட கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு 25 ஆயிரம் தண்டப் பணமும், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்த வேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் எதிரிகள் 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வழக்கின் எதிரிகள் நால்வருக்கும் கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு 20 வருடமும், பாலியல் துஷ்பிரயோகத்துக்கு 5 வருடமும், நட்டஈடு வழங்கா விட்டால் 3 வருடமும், தண்டப்பணம் செலுத்தாவிட்டால் 2 வருடமுமாக மொத்தமாக 30 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் நீண்ட தீர்ப்பில் நீதிபதி இளஞ்செழியன் முக்கியமாகத் தெரிவித்துள்ளதாவது:–

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள எதிரிகளான 4 இராணுவச் சிப்பாய்களும் இரண்டு தாய்மாரைக் கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கும், பாலியல் துஷ்பிரயோகத்துக்கும் உட்படுத்திய குற்றத்தைப் புரிந்துள்ளனர் என்பது விசாரணைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பெண் தன்மீது குற் றம் புரியப்பட்டபோது, இறுதி நேரம் வரையில் அவர்களைத் தடுத்துப் போராடியிருக்கின்றார் என்பதும் விசாரணைகளில் நிரூ பிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று, மற்றப் பெண் மீது பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை ஒப்புறுதி சாட்சியங்களின் மூலம் நிரூபணமாகியிருக்கின்றது.

**பாதிக்கப்பட்டோர் சாட்சியங்கள்**

கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் சாட்சியத்தை மன்று விசேட கவனத்துக்கு எடுத்துள்ளது.

சம்பவம் நடைபெற்ற அன்று இரவு 12 மணிக்கு வீட்டினுள்ளே புகுந்த இராணுவத்தினர் கொட்டானால் முழங்காலில் அடித்தார்கள். அவர்கள் கையில் கிறிஸ் கத்தி வைத்திருந்தார்கள். அப்போது அருகில் படுத்திருந்த பிள்ளைகள் எழுந்து கத்தினார்கள். பயம் காரணமாகக் கத்திய அந்தப் பிள்ளைகளுக்கும் அவர்கள் அடித்தார்கள். அவ்வாறு அவர்கள் கத்திக்கொண்டு எனது பக்கத்தில் வந்தபோது, இராணுவத்தினர் எனது உடலைச் சுரண்டி, என்னைப் பிடித்து இழுத்தார்கள். அப்போது எங்களுடன் இருந்த எனது தம்பி ரஞ்சித், அக்கா பாவம் அவரை ஒன்றும் செய்ய வேண்டாம் எனக் கத்தினான். அப் போது, அந்த இராணுவத்தினர் அவனுடைய கழுத்தைச் சவட்டி, அதனை முறித்தமாதிரியாக,அவனை இழுத்துச் சென்று அவனுடைய கைகளைக் கட்டுவதற்காகக் கொடிக் கயிற்றைப் பிடித்து அறுத்தார்கள். அவ்வாறு அவனுடைய கைக ளைக் கட்டுவதற்கு முற்பட்டபோது, எங்கள் எல்லோரையும் அவர்கள் கொலை செய்யப் போகின்றார்கள் என்று பயந்தேன். அந்தப் பயத்தில் என்னைப் பிடித்துக்கொண்டிருந்த ஆமியைத் தள்ளிவிட்டு வெளியில் ஓடினேன்.

அவ்வாறு ஓடியபோது, எனது பின் மண்டையில் அடி விழுந்தது. அதேநேரம் 3 இராணுவத்தினர் என்னைப் பிடித்து வீட்டின் பின்னால் உள்ள பற்றைக்குள் கொண்டு சென்றார்கள். அவ்வாறு கொண்டு சென்றபோது என்னால் முடிந்த மட்டும் அவர்களிடமிருந்து தப்புவதற்கு முயற்சித்தேன், முடியவில்லை. அங்கு வைத்து அவர்கள் என்னைக் கற்பழித்தார்கள். அவர்களே இந்த நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றார்கள் என அந்தப் பெண் தனது சாட்சியத்தில் தெரிவித்து, எதிரிகளை அடையாளம் காட்டினார்.

அதேபோன்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட பெண் சாட்சியமளிக்கையில், என்னை ஒருபக்கமாகவும், மற்றவரை மறுபக்கத்திலும் இராணுவத்தினர் இழுத்துச் சென்றார்கள். நான் 5 குழந்தைகளின் தாய், என்னை ஒன்றும் செய்யவேண்டாம் என அவர்களிடம் அழுதபடி கெஞ்சினேன். அவர்கள் எனது உடைகளைப் பகுதியாகக் களைந்தார்கள். எனக்கு மாதவிலக்கு, என்னை ஒன்றும் செய்யவேண்டாம் என அப்போது அவர்களிடம் நான் சொன்னேன். அவர்கள் எனது உள்ளாடைகளைக் கழற்றி பார்த்தார்கள். பார்த்த பின்னர், எனது கைகளைக் கட்டி கீழே தள்ளிவிட்டார்கள். அப்போது சுமார் 20 மீற்றர் தூரத்தில் என்னை விடுங்கோ என்னை விடுங்கோ என மற்றப் பெண் கத்திக்கொண்டிருந்தார். அவர் அவ்வாறு கத்தக் கத்த வீட்டின் பின்னால் இருந்த பற்றைக் காணிக்குள் அவரை அவர்கள் இழுத்துச்சென்றார்கள் என தெரிவித்துள்ளார்.

**மக்களின் காவலர்களே குற்றம் புரிந்துள்ளார்கள்**

மக்களையும் நாட்டையும் பாதுகாக்கச் சென்ற காவலர்களே குற்றம் புரிந்துள்ளார்கள். இந்த வழக்கில் எதிரிகளாக நிறுத்தப்பட்டிருப்பவர்கள் இராணுவச் சிப்பாய்களாவர். இவர்கள் இந்தச் சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியில், கிளிநொச்சி விசுவமடு பிரதேசத்தில் நாட்டின் பாதுகாப்பையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பாதுகாப்பு நடவடிக்கைக்காக, இராணுவ உத்தியோகத்தர்களாகக் கடமைக்காக அரசால் அனுப்பப்பட்டிருந்தார்கள். அவ்வாறாக தேசிய பாதுகாப்புக் கடமைக்காக அனுப்பப்பட்டிருந்தபோதே, இவர்கள் தங்களுடைய இராணுவ முகாமில் இருந்து வெளியேறிச் சென்று, கூட்டுப் பாலியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச் செயலைப் புரிந்திருக்கின்றார்கள். இந்தக் குற்றச் செயல் சம்பவம் நடைபெற்றதையடுத்து, சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த இராணுவ பொலிசார் இவர்கள் நான்கு பேரையும் மறுநாள் அதிகாலையிலேயே கைது செய்திருந்தார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் நாட்டின் கோர யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அனைத்தையும் இழந்து இராமநாதன் இடம்பெயர் அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்துவிட்டு, அரசும், இராணுவத்தினரும் வழங்கிய மீள்குடியேற்றத்துக்கான வாக்குறுதியை அடுத்து, இந்தப் பெண்கள் தமது சொந்த ஊரான விசுவமடுவுக்குத் திரும்பிச் சென்று தற்காலிகக் கொட்டில் அமைத்து, அதில் தங்கியிருந்து தங்களுடைய காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்த வேளையில் இரவு 12 மணிக்கு அவர்கள் தங்கியிருந்த வீட்டினுள்ளே புகுந்து, இந்தக் குற்றச் செயலைப் புரிந்திருக்கின்றார்கள்.

**போர் இல்லாதவேளை சூறையாடப்பட்டது மானம்**

கோரப் போரின்போது பாதுகாக்கப்பட்ட மானம், போர் இல்லாத வேளை சூறையாடப்பட்டது. இந்தச் செயலின் மூலம், போர் நடைபெற்றபோது, காப்பாற்றப்பட்டிருந்த அந்தப் பெண்களின் கற்பையும் மானத்தையும் போர் முடிவடைந்ததன் பின்னர், இந்த 4 இராணுவச் சிப்பாய்களும் சூறையாடியிருக்கின்றார்கள். கோரப் போரில் பாதுகாக்கப்பட்ட மானம் 2010 ஜூன் 6 ஆம் திகதி போர் இல்லாத சூழ்நிலையில் எதிரிகளான இராணுவச் சிப்பாய்களினால் பறிக்கப்பட்டிருப்பது பெரும் குற்றச் செயலாகும். பொது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய தமது அரச கடமையாகிய பாதுகாப்பை வழங்காமல் இரண்டு தாய்மார்கள் மீது கூட்டுப் பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை என்பது தண்டனைக்குரிய குற்றமாகும். அது மட்டுமல்லாமல், இந்த நாட்டு இராணுவத்தினரின் நற்பெயரைக் கெடுத்த செயலாகும். எனவே, இலங்கை இராணுவத்தின் கௌரவத்தைப் பாதுகாக்கவேண்டுமானால் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்கப்படவேண்டும்.

இராணுவத்தின் பாலியல் வன்புணர்வுக் குற்றம் என்பது சர்வதேச குற்றம், அத்துடன் அது ஒரு போர்க் குற்றம், மனித நேயத்துக்கு எதிரான குற்றம் என ஐ.நா. போர்க் குற்ற நீதிமன்ற சட்டங்களிலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டங்களிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது யாழ் மேல் நீதிமன்றம் பொது மக்களினால் நிறைந்து வழிந்தது. தீர்ப்பு வழங்கப்பட்டதையடுத்து, எதிரிகள் நான்கு பேரும் உடனடியாகப் பாதுகாப்பாக சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

யாழ்.மேல் நீதிமன்றக் கட்டடத்தின் முதலாம் மாடியில் அதிரடிப்படைப் பொலிசார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். நீதிபதி இளஞ்செழியனுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை,குறித்த வன்புணர்வுச் சம்பவத்தையடுத்துப் பாதிக்கப்பட்டவர்கள் அருகிலுள்ள இராணுவ முகாமுக்குச் சென்று முறையிட்டிருந்தனர். அங்கு அந்த நேரம் விசா ரணை ஒன்றுக்காகப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நின்றிருந்துள்ளார். பாதிக்கப்பட் டவர்கள் அந்த விடயத்தை அங்கு கூறியுள்ளனர். அதனடிப்படையில் அந்த பொலிஸ் உத்தியோகத்தர் சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று விசாரணை ஆரம்பித்தார்.

சம்பவ இடத்தில் மண்ணில் பதிவாகியிருந்த இராணுவச் சிப்பாயின் சப்பாத்து அடையாளத்தை அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் பருமட்டானளவில் வரைபடமாக தாள் ஒன்றில் வரைந்துள்ளார். ராணுவத்தினர் சென்றிருந்த பாதையைப் பாதிக்கப்பட்ட பெண் காட்டியிருந்த நிலையில் அதன் வழியே சென்ற பொலிஸ் உத்தி யோகத்தர் தூரத்தே ராணுவ பயிற்சி முகாம் ஒன்றில் வெளிச் சம் தெரிவதைக் கண்டு அங்கு சென்றபோது குறித்த சப்பாத்தின் அதே அடையாளம் அங்கு காணப்பட்டது. அது தொடர்பாக இராணுவப் பொலிசா ரும் விசாரணை செய்து நான்கு சிப்பாய் களையும் அன்று அதிகாலையிலேயே கைது செய்தி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 700 | 500 |
| நண்டு | 300 | 400 | 400 | 400 | 350 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 600 | 500 | 500 | 400 |
| சுறா | 600 | 500 | 600 | 650 | 600 | 450 |
| சீலா | 300 | 400 | 500 | 400 | 400 | 350 |
| விளை | 650 | 450 | 400 | 450 | 500 | 400 |
| மூரல் | 300 | 350 | 300 | 350 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 250 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 450 | 800 | – | 500 | – | – |
| ஒரா | 400 | 300 | – | 450 | – | – |
| திரளி | 250 | 200 | 150 | 300 | 100 | – |
| நகரை | 200 | 300 | – | 300 | 200 | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 120 | 100 | – |
| ஒட்டி | 250 | 150 | 200 | 350 | – | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 300 | 150 |
| பாலை | 400 | 250 | – | 500 | – | – |
| வாழை | 100 | 150 | – | 300 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | – | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | 250 | 250 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 4 | | 2 |
| | | | 7 | | | | 6 | 1 |
| | 2 | | 1 | 5 | | | | 7 |
| | | 9 | 2 | | | | | |
| 4 | | | 6 | 3 | 7 | | | 9 |
| | | | | | 9 | 7 | | |
| 7 | | | | 4 | 1 | | 8 | |
| 2 | 3 | | | | 6 | | | |
| 5 | | 4 | | | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 1 | 9 | 5 | 3 | 2 | 4 | 7 |
| 2 | 7 | 5 | 1 | 8 | 4 | 3 | 6 | 9 |
| 9 | 4 | 3 | 2 | 7 | 6 | 1 | 8 | 5 |
| 4 | 6 | 7 | 8 | 3 | 5 | 9 | 1 | 2 |
| 3 | 2 | 8 | 6 | 9 | 1 | 7 | 5 | 4 |
| 1 | 5 | 9 | 7 | 4 | 2 | 6 | 3 | 8 |
| 8 | 3 | 6 | 5 | 2 | 9 | 4 | 7 | 1 |
| 5 | 9 | 4 | 3 | 1 | 7 | 8 | 2 | 6 |
| 7 | 1 | 2 | 4 | 6 | 8 | 5 | 9 | 3 |

## நாளை

**புரட்டாதி-23**
**சனிக்கிழமை**
**10.10.2015**

திதி: திரயோதசி பி.இ.01.29 வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ.09.28 வரை
சுபநேரம்: 03.02-04.32 வரை
இராகு காலம்: 09.02-10.32 வரை

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 30–40 | 60 | 60 | 25 |
| கத்தரி | 40 | 60 | 50 | 60 | 30–40 | 80 | 80 | 30 |
| கரட் | 60 | 120 | 60–120 | 80 | 40–100 | 120 | 100 | 110 |
| மரவள்ளி | 40 | 50 | 50 | 40 | 30–40 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 70 | 60 | 70 | 60 | 70–80 | 120 | 100 | 50–60 |
| பாகல் | 200 | 100 | 140 | 80 | 100 | 130 | 110 | 100 |
| கருணைக்கிழங்கு | – | – | 80 | 80 | 60–70 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 110 | 100 | 100 | 100 | 100–120 | 100 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 110 | 120 | 60–70 | 140 | 100 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 30–40 | 80 | 50 | 40 |
| தக்காளி | 70 | 60 | 60 | 60 | 60–80 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 | 60–80 | 60 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 140 | 160 | 120 | 120–140 | 200 | 200 | 100–120 |
| புடோல் | 50 | 60 | 40 | 40 | 50–60 | 60 | 60 | 50 |
| கோவா | 70 | 80 | 70 | 70 | 60 | 80 | 100 | 40–50 |
| வெண்டி | 50 | 40 | 70 | 50 | 70 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 160 | 140 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 100 | 80 | 50–60 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 55 | 50 | 60 | 45–50 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 100 | 100 | 100–120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 140 | 160 | 240 | 240 | 200 | 400 | 160 | 140 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 120 | 80 | 120 | 120 | 80 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | 180 | – |
| முருங்கைக்காய் | 50 | 50 | 60 | 40 | 50 | 80 | 120 | 80 |

# 'சூப்'களின் மருத்துவப் பயன்கள்



நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கைக்குச் சத்தான உணவு வகைகளும், சீரான உடற்பயிற்சியும் அவசியம்.

ஆனால் இன்றைய அவசர காலகட்டத்தில் சத்தான உணவுகளை உட்கொள்கிறோமா? என்று கேட்டால் அது கேள்விக்குறி தான். துரித உணவுகளின் பக்கம் மக்கள் ஈர்க்கப்பட்டுள்ளதால், காய்கறிகள் என்றாலே சிலர் வெறுப் படைகின்றனர். அத்தகையவர்கள் மிக எளிதாக சூப் வைத்துக் குடிக்கலாம், உணவுக்கு அரை மணி நேரத்துக்கு முன்பு சூப் குடித்தால் அது நல்ல பசியைத் தூண்டிவிடும்.

அதுமட்டுமன்றி காலை, மாலை வேளைகளில் குடித்து வந்தால், ஆரோக்கியமாக இருக்கலாம். 50 முதல் 75 கிராம் முடக்கத்தான் இலைகளை எடுத்து நன்றாக நறுக்கித் தண்ணீர் விட்டு வேகவிடவும். இதில் வெங்காயம், தக்காளி, கரட், போஞ்சி, கொத்தமல்லித் தழை, கறிவேப்பிலை, பூண்டு, இஞ்சி சேர்த்து, மிளகுத்தூள், சீரகத் தூள் கலந்து கொதிக்க விட்டு மசிக்கவும்.இந்தச் சூப்பை தொடர்ந்து 48 நாள்கள் குடித்து வந்தால் நீரிழிவு நோய், வயிற்றுப் புண், மூட்டு வலி மற்றும் பக்க வாதம் போன்ற நோய்கள் குணமடையும். பல்வேறு மருத்துவக் குணங்களைக் கொண்ட வல்லாரைக் கீரையுடன் தேவையான காய்கறிகள் சேர்த்து சூப் செய்து குடிக்கலாம், இதேபோன்று பொன்னாங்கண்ணிக் கீரையையும், முருங்கைக் கீரையையும் செய்து சாப்பிடலாம். இதன் மூலம் நினைவாற்றல் அதிகரிப்பதுடன் கண் சம்பந்தமான நோய்களும் குணமாகும், எலும்புகள் வலுப்பெறும். இதேபோன்று துளசி அல்லது துளசிப் பொடியை நீர் சேர்த்து, தேவையான அளவு காய்கறிகள் சேர்த்து சூப் செய்து குடிக்கலாம். இவ்வாறு குடித்தால் ஆஸ்துமா நோய் சரியாகும், சளி– இருமல் இருக்காது.

## ஆயிரம் தடவை தோற்றாலும் இலட்சியத்தைக் கைவிடாதே

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



தோல்விகளைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். இலட்சியத்திலிருந்து 1000 தடவைகள் வழுக்கி விழுந்தாலும், இலட்சியத்துக்கு உழைப்பதில் பிழைகள் நேர்ந்தாலும் திரும்பத் திரும்ப அந்த இலட்சியத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். இலட்சியத்தை அடைய ஆயிரம் தடவை முயலுங்கள். அந்த ஆயிரம் தடவை தவறினாலும் இன்னுமொரு முறை முயலுங்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள். எல்லாவற்றிலும் பரம் பொருளைப் பார்ப்பதுதான் மனிதனின் இலட்சியமாகும். எல்லாவற்றிலும் பார்க்க முடியாவிட்டாலும் நாம் நேசிக்கும் ஒரு பொருளிலாவது பார்க்க வேண்டும். பிறகு இன்னொன்றில் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்து நேற்றைய உதயனில் விவரித்திருந்தோம். இன்று 6 ஆம் எண்ணில் பிறந்தவர்களது பலன்கள் பற்றிப் பார்ப்போம். எண் 6 (6, 15, 24) இல் பிறந்தவர்களின் வாழ்க்கை ரகசியம்**

# பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம்

மனிதர்கள் அறுசுவை உணவு என ஆறு வகையான சுவைகளை அனுபவிக்கின்றனர். சுவையையும் உணர்கிறார்கள். ஆறு வகையான சாஸ்திரங்களும் உள்ளன. முருகப் பெருமானின் ஆறுமுகங்களும் ஆறு வகையான தத்துவங்களைச் சூட்சும முறையில் உணர்த்துகின்றன. அதுபோல 6 என்ற எண்ணும் மனித வாழ்வில் சிறந்த முறையில் செல்வாக்குப் பெற்றதாகத் திகழ்கிறது. 6,15,24 ஆகிய எண்களில் பிறந்தவர்கள் 6 ஆம் எண்ணின் ஆதிக்கத்துக்குரியவர்கள். 6 ஆம் எண்ணுக்குரிய கிரகம் சுக்கிரனாவார். சுக்கிரனை வெள்ளி என்றும் அழைப்பார்கள். வாரத்தில் 6 ஆம் நாளாக வெள்ளிக்கிழமை வரும். வெள்ளிக்கிழமை வாரத்தின் சிறந்த நாளாகக் கருதப்படுகிறது.

### குண நலன்கள்

நேர்மையையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் 6 ஆம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள். பிறருக்கு உதவி செய்வதில் வல்லவர்கள். தன்னலம் கருதாமல் விட்டுக் கொடுப்பார்கள். மிகவும் பொறுமைசாலிகளாக இருந்தாலும், சில நேரங்களில் கோபம் கொள்வதும் உண்டு. தற்பெருமைக்கும், புகழ்ச்சிக்கும் ஆசைப்படாதவர்கள் என்பதால், இவர்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவதில்லை. மிகவும் பொறுமைசாலிகள். ஆதலால் அதிக சகிப்புத் தன்மையும் உண்டு. சிந்தனா சக்தியிலும், செயலாற்றுவதிலும் நிதானமாகச் செயற்பட்டாலும், தன்னம்பிக்கையும் அசட்டுத் தைரியமும் மேலோங்கி இருக்கும். எதிலும் சாதுரியமாகப் பேசி பிறரைத் தம் வசப்படுத்திக் கொள்வார்கள். ஆனால், சில நேரங்களில் மற்றவர்களின் மனதைப் புண்படுத்தக்கூடிய அளவுக்கு ஒரு சொல் என்றாலும் மறக்க முடியாத அளவுக்குப் பேசிவிடுவார்கள். கேலியும், கிண்டலும் நையாண்டித்தனமும் அதிகம் இருக்கும். குதர்க்கமாகவும், பரிகாசமாகவும் பேசி எதிரிகளை அவமானப்படுத்தி விடுவதில் சாமர்த்தியசாலிகள். பிடிவாத குணம் படைத்த இவர்கள் பிறருக்கு அடிபணிவதென்பது நடவாத காரியம். இவர்களிடம் எவ்வளவு குறைகள் இருந்தாலும் அதை மறைத்து மற்றவர்களின் குறைகளை அம்பலமாக்கி விடுவார்கள். தமக்கு நெருங்கியவர்கள் நெறி தவறும்போது இவர்களுடைய மன நிலை இவர்களது கண்களில் தெரியும். நீதியை நிலை நாட்ட வேண்டும் என்ற இலட்சியம் கொண்டவர்கள். எந்தக் காரியத்திலும் இலாப நட்டத்தை ஆராய்ந்து பார்த்தபின் தான் செயலில் இறங்குவார்கள். தமக்கு மிஞ்சியதைத்தான் பிறருக்குத் தானமாக



கொடுப்பார்கள். சமூக நலப்பணிகளிலும் ஆர்வம் இருக்கும்.

### உடல் நிலை, ஆரோக்கியம்

ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் பெரும்பாலும் குள்ளமானவர்களாக இருப்பார்கள். உடல் குண்டாக இருக்கும். கருணை நிறைந்த கண்களைக் கொண்டிருப்பார்கள். எப்பொழுதும் தம்மை அழகாக வைத்துக்கொள்வதில் ஆர்வம் உடையவர்கள். ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் சுக்கிரன் ஆதிக்கம் பெற்றவர்கள் என்பதால் குளிர்ச்சியான உடலைபெற்றிருப்பார்கள். இவர்களுக்கு காய்ச்சல், சளி போன்ற நோய்களும், இருதய சம்பந்தமான வியாதிகளும், சுவாசம் சம்பந்தமான நோய்களும் உண்டாகும். நீரிழிவு நோய் அதிகம் பேருக்கு ஏற்படும். மர்மப் பிரதேசங்களில் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு.

### குடும்ப வாழ்க்கை

ஆறாம் எண்ணில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை திருப்தியளிப்பதாகவே அமையும். பெரும்பாலானவர்கள் காதல் விடயங்களில் வெற்றி பெற்றுத் தமது மனதுக்குப் பிடித்தவரையே வாழ்க்கைத் துணையாக அடைவர். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஒற்றுமையும் நிலவும். தெய்வ காரியங்களில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பார்கள்.

### பொருளாதாரம்

ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் ஆடை, ஆபரணங்களுக்காகவும், ஆடம்பர வாழ்க்கை வாழ்வதற்காகவும் நிறையச் செலவுசெய்வார்கள். சிலர் பிறவியிலேயே செல்வந்தராக இருப்பதால் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். நடுத்தர வர்க்கம் என்றால் பொருளாதார நிலை பற்றாக்குறையாகவே இருக்கும். எப்பாடு பட்டாவது தம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவுக்கு சம்பாதிக்கக்கூடிய ஆற்றல் இருக்கும்.

### நண்பர்கள், பகைவர்கள்

ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் புதிதாகப் பழகுவதற்கு சற்று கூச்சப்படுபவர்களாக இருந்தாலும், பழகிய பின்னர் இனிமையானவர்களாக இருப்பார்கள். தமக்கு பிடிக்காதவர்களை சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதுபோல ஓட ஓட விரட்டுவார்கள்.

4,5,7,8 ஆம் எண்களில் பிறந்தவர்கள் இவர்களுடன் நட்புடன் பழக முடியும். 1,2 ஆம் எண்ணில் பிறந்தவர்களிடமிருந்து சற்று விலகி இருப்பதே நல்லது.

### சுக்கிரனுக்குரிய காலம்

ஏப்ரல் மாதம் முதல் மே வரையிலும், செப்ரெம்பர் மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலும் உள்ள காலம் சுக்கிரனுக்குரிய காலம் ஆகும்.

### தொழில்

ஆறாம் எண்ணுக்குரியவர் சுக்கிரனின் ஆதிக்கத்தை பெற்றவர்கள் என்பதால், கலைத்துறை சம்பந்தமானவற்றில் முன்னேற்றமடைவார்கள். சினிமா, சங்கீதம், இசை, நாட்டியம், நாடகம் போன்றவற்றில் பிரகாசம் உண்டாகும். அரச பணிகளில் உயர் பதவிகள் அமையும். ஓவியம் வரைதல், கவிதைகள், பாடல்கள் எழுதுதல் போன்றவற்றில் புகழும், கௌரவமும் கிடைக்கும். பெண்கள் உபயோகப்படுத்தக் கூடிய அழகு சாதனப் பொருள்கள், பெண்கள் அணியும் ஆடைகள், பெண்களுக்கான அலங்காரப் பொருள்கள் போன்றவற்றிலும் நல்ல இலாபம் அமையும். வாசனைத் திரவியங்களை வியாபாரம் செய்வதால் நல்ல இலாபம் கிடைக்கும்.

### சுக்கிரனின் திசை

மேற்குத் திசையும், தென் மேற்கு திசையும், சுக்கிரனுக்குரிய திசைகள் ஆகும். படுக்கை அறைகள், அழகிய வீடுகள், பயிரிடும் நிலங்கள் யாவும் சுக்கிரனுக்குரியவை. ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் இந்தத் திசை நோக்கிப் பயணம் செய்தபின்னர் புதிய சுபகாரிய முயற்சிகளை மேற்கொள்வது உத்தமம்.

### அதிர்ஷ்டக்கல்

ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் சுக்கிரனின் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் என்பதால் வைரக்கல்லை அணிவது மிகவும் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். வைரத்தை வாங்க முடியாதவர்கள் ஜிர்கான கற்களை அணியலாம். வைரத்தைப் போலவே இதுவும் குணநலன்களைக் கொண்டதாகும்.

### பரிகாரம்

ஆறாம் எண்ணில் பிறந்தவர்கள் லட்சுமி தேவியை வழிபாடு செய்வது, லட்சுமி பூஜை செய்வது உத்தமம். வெள்ளிக்கிழமை தோறும் அம்மன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வது நல்லது.

அதிர்ஷ்டம் தருபவை
அதிர்ஷ்டத் திகதிகள் 6,15,24,9,18,27
அதிர்ஷ்ட நிறம் வெளிர்நீலம்
அதிர்ஷ்டத் திசை– தெற்கு
அதிர்ஷ்டக் கிழமை–வெள்ளி
அதிர்ஷ்டக் கல்– வைரம்


# ஆணாதிக்கமும் பெண் அடிமைத்தனமும்

ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணின் திருமணமே அவளது உயிர் வாழும் தகுதியை அங்கீகரிக்கின்றது. கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்' – என்ற பழமொழி பெண்ணின் அடிமைத்தனத்தைப் பண்பாடாக்குகின்றது. கணவன் தான் பெண்ணுக்கு எல்லாம் என்ற விளக்கத்தால், ஆணின் அதிகாரம் கட்டுப்பாடற்ற வகையில் அங்கீகரிக்கப்படுகின்றது. கணவன் எவ்வளவுதான் கீழ்த்தரமானவனாக இருந்தாலும், பெண் அவனுக்கு அடங்கி, அவனது அடிமையாகச் சேவகம் செய்ய வேண்டும் என்பதையே இந்தப் பழமொழி சமூக நடைமுறையாக்குகின்றது.

'சேறுகண்ட இடத்தில் மிதிச்சு, தண்ணி கண்ட இடத்தில் கழுவிப் போட்டுப் போறவன் தான் ஆம்பிளை' – என்று சமூகம் விளக்கி நியாயப்படுத்தும்போது, ஆணின் பலதார மணம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஆண்களுக்குப் பல பெண்களை அனுபவிக்கும் உரிமையை வழங்கிய ஆணாதிக்க அமைப்பு, பெண்ணுக்கு ஒருதார மணத்தை ஏற்படுத்தியபோது தனக்கு அதை விதி விலக்காக்கியது. ஆண் விபச்சாரியிடம் செல்லலாம் என்றும், ஆணுக்குக் கற்பு அவசியமற்றதாகவும் கருதியதன் வெளிப்பாடே இந்தப் பழமொழியாகும்.

பேயானாலும் தாய், நீரானாலும் மோர்'

பேய்ப்பிள்ளையானாலும் தாய் தள்ளி விடுவாளா? என்ற தொடர்கள் தாய்க்கும், குழந்தைக்கும் இடையில் உள்ள பந்தத் தைக் காட்டுகின்றது. தாய்மையின் உன்னதமான உணர்வுகளும், கூட்டுச் சமூகக் கண்ணோட்டமும் சமுதாய ரீதியாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஆணின் வாரிசுரிமையைப் பெற்றுப்போடக் கோரும் சமுதாயத்தில், தாய்மையின் பண்புகளைச் சிறுமைப்படுத்தி வெறும் இயந்திரமான இயக்கத்தைக் குழந்தைப் பேற்றில் ஆணாதிக்கம் எதிர்பார்க்கின்றது. ஆனால், அந்தக் குழந்தையைக் கருவில் சுமப்பதில் இருந்து தாய்மை அடையும் உணர்வுகள் சார்ந்து, குழந்தை மீதான இயற்கையான கூட்டுத்தன்மையினால், பெண் உயர்ந்த மனிதத் தன்மையைக் கொண்டு வாழ்கின்றபோது,



இந்தப் பழமொழிகள் ஆணாதிக்கச் சமூகக் கண்ணோட்டத்தை மீறி பெண்ணின் உயர்வைப் போற்றுகின்றன.

பெண் என்றால் பேயும் இரங்கும்' என்பது பெண் பற்றிய ஆணாதிக்க அமைப்பின் தாழ்வுக் கண்ணோட்டமாகும். பெண்ணை ஆணாதிக்கம் அடிமையாக்கி, அவள் ஆணின் தயவில் வாழ்கின்றபோது ஏற்படும் அவமானகரமான துன்பங்களையும், துயரத்தையும் பிரதிபலித்தே இந்தப்பழமொழிகள் உருவாகின்றன. ஆணாதிக்க அமைப்பில் பெண் அடிமையாக உழல்வதைக் கண்டு அனுதாபப்பட்டுக் கதைக்கின்றபோது, ஆணாதிக்க அமைப்பில் சீர்திருத்தத்தை அமைதியாக, மென்மையாகக் கையாளுகின்ற ஆணாதிக்க வடிவத்தைக் கோரும் கண்ணோட்டத்தில் இந்தப் பழமொழி பெண்ணின் அடிமைத்தனத்தை, பெண்ணின் இரண்டாவது நிலையை உறுதி செய்து பாதுகாக்கின்றது.

(தொடரும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை கதையாம்



கதை கதையாம் காரணமாம்
காரணத்தில் ஒரு தோரணமாம்
தோரணத்தில் ஒரு துக்கடாவாம்
துக்கடாவில் கொஞ்சம் வைக்கோலாம்
வைக்கோல எடுத்து மாட்டுக்குப் போட்டா
மாடு பால் கொடுத்ததாம்
பாலைக் கொண்டுபோய் கடையில ஊத்தினால்
கடைக்காரன் தேங்காய் கொடுப்பானாம்
தேங்காய் உடைக்க கல்லுக்குப் போனா
கல் எல்லாம் பாம்பாம்
பாம்பை அடிக்கத் தடியத் தேடினா
தடி எல்லாம் சேறாம்
சேறு கழுவ ஆத்துக்குப் போனா
ஆறெல்லாம் மீனாம்
மீனப் பிடிக்க வலைக்குப் போனா
வலை எல்லாம் ஓட்டையாம்
ஓட்டைய அடைக்க ஊசிக்குப் போனா
ஊசிக்காரன் ஊருக்குப் போயிட்டானாம்



# நரியும் போர் முரசும்



ஒரு நாள் நரி ஒன்று மிகுந்த பசியுடன் அலைந்து கொண்டிருந்தது. அது அரை மயக் கத்துடன் தள்ளாடி கொண்டு நடந்தது. நரி போர்க்களத்துப் பக்கமாகச் சென்றபோது திடீரென பயங்கரச் சத்தம் ஒன்று கேட்டது. நரிக்கு உயிரே போய் விட்டதுபோல் இருந்தது. ஏதோ பயங்கர விலங்கு ஒன்று எமது காட்டுக்குள் வந்து விட்டது என்று எண்ணிய நரிக்கு அடி வயிறு கலங்கியது. பசி நேரத்தில் என்னால் ஓடக் கூட முடியாதே. சரி எப்படியும் இந்த விலங்குக்கு இன்று இரையாகப் போகிறோம் என்று எண்ணிக் கலங்கியது நரி. சற்று நேரம் அப்படியே நின்று கொண்டிருந்தும் ஏதும் நடக்காமல் போகவே கொஞ்சம் தெம்பு வந்தது. அப்போது அருகில் இருந்த ஒரு பாறையின் மேல் ஏறி சுற்றுமுற்றும் பார்த்தது. அப்போது தூரத்தில் ஒரு பெரிய பாறை போன்ற ஓர் உருவம் தென்பட்டது. மீண்டும் ஒருமுறை திடீரென சத்தம் உண்டானது. நரிக்குக் கலக்கம் அதிகமானது. சற்று உற்றுப் பார்த்தபோது தான் தெரிந்தது அது ஒரு போர் முரசு என்று. அதன் அருகில் மெல்ல மெல்லச் சென்று சுற்றிச் சுற்றிப் பார்த்தது. அது பார்ப்பதற்கு, பயன்படுத்திப் பல நாள்கள் ஆனது போல் இருந்தது. உள்ளே ஏதோ சிறிய மிருகம் ஒன்று இருந்து கொண்டுதான் சத்தம் எழுப்புகிறது என்று எண்ணியது நரி. பசியில் இருந்த நரி பேரானந்தம் கொண்டது. தனது கூரிய பற்கள் மற்றும் நகங்களைக் கொண்டு அந்த முரசைக் கிழித்து உள்ளே இருக்கும் மிருகத்தைத் உண்ண எண்ணிய நரி அவ் வாறே செய்தது.

அப்போது நரிக்குத் தாடை மற்றும் முன் கால்களில் பலமான காயங் கள் ஏற்பட்டு குருதி வந்தது. உள்ளே இருக் கும் மிருகத்தை உண்ணத் தயாராக இருந்த நரிக்குப் பெருத்த ஏமாற்றமே மிஞ்சியது. ஏனென்றால் அங்கே ஒன்றுமே இல்லை. பசியோடு இருந்த நரிக்கு குருதிக் காயங்கள் மேலும் சோர்வை ஏற்படுத்த மயக்க முற்றது. உண்மையில் அருகில் இருந்த புதர்ச் செடிகள் முரசின் மீது காற்றில் உரசி உரசியே அந்தச் சத்தம் உண்டானது.

**நீதி– எந்த நிலையிலும் எந்த ஒரு காரியத்தையும் ஆராயாமல் செய்வது நன்மையைத் தராது.**

**சிறுவர் மற்றும் இளவல் பக்கத்துக்கு வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

# அறிவை வளர்க்கச் சில வழிகள்!



இந்த உலகத்தில் இவருக்குத்தான் அறிவு அதிகமாக உள்ளது என்று ஒருவரைச் சுட்டிக் காட்டிக் குறிப்பிட முடியாது. ஏனெனில் ஒவ்வொருவரும் ஒவ் வொரு வகையில் அறிவாளியாக, புத்திசாலியாக இருப்பர்.

அறிவு என்பது சிந்திக்கும் திறனையே குறிக்கிறது. எந்தச் சமயத்தில் எப்படிச் சிந்தித்தால் எப்படி வெற்றி கிட்டும் என்பதைச் சரியாக எவர் சிந்தித்து அறிவைப் பயன்படுத்துகிறார்களோ அவர்களே புத்திசாலி மற்றும் மிகுந்த அறிவுள்ளவர்கள்.

உதாரணமாக:– ஒருவர் படிப்பில் கெட்டிக்காரராக, புத்திசாலியாக இருக்கலாம். ஆனால் அவர் விளையாட்டில் அவ்வாறாக இருக்க மாட்டார். இவ்வாறு அறிவில் பல வகைகள் உள்ளன. அத்தகைய அறிவை அனைவரும் பெற வேண்டு மென்றால், அறிவை வளர்க்க ஒரு சில வழிகள் இருக்கின்றன.

**அறிவை வளர்க்கச் சில ஆலோசனைகள்:**

1. நல்ல தூக்கம் மற்றும் போதுமான ஓய்வு அவசியம். இவற்றில் தூக்கம் மற்றும் ஓய்வு ஆகிய இரண்டும் ஒன்று அல்ல. ஒரு நாளைக்கு எட்டு மணிநேரம் தூங்குகிறோம். ஆனால் அப்போது உடலானது ஓய்வு பெறுகிறது. ஆனால் அவ்வாறு தூங்கி எழுந்து புத்துணர்ச்சி அடையாமல் இருந்தால், எந்த வேலையி லும் கவனம் செலுத்த முடியாது. அப் போது அறிவானது குறைவாகத்தான் இருக்கும். ஆகவே நல்ல தூக்கத்தின் மூலம் அறிவு பெருகும்.

2. நிறையப் பேர் வார இறுதியில் தூங்கிய பின்னர் நீண்ட நேரம் கழித்து எழுந்திருப்பர். ஆனால் எழுந்ததும் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று நினைப்பர். ஆனால் அப்படி எழுந்து உடற்பயிற்சி செய்ய நினைக்கும்இடம் எங்கு இருக்கிறது என்று தெரியாமல் தேடி, அதையே கண்டுபிடிக்கப் போய் ஒரு நாளில் அரை நாள் போய்விடும். இந்த நேரத்தில் அவர்களது மூளை, அந்த ஒரு இடத்தில் மட்டும்தான் இருக்கிறதே தவிர, வேறு எதையும் யோசிக்கவில்லை.

மேலும் சோம்பேறித்தனம்தான் அறிவை மழுங்க வைத்து நேரத்தை விரய மாக்குகிறது. எப்படியெனில் நீண்ட நேரம் தூங்குவதால் சோம்பேறித்தனம் தான் அதிகரிக்கும்.

3. சிலர் தொலைக்காட்சியில் தேவையில்லாத நிகழ்ச்சிகளைப் பார்த்து அறிவை மழுங்க வைக்கின்றனர். மேலும் ஒருசில நிகழ்ச்சிகளுக்கு அடிமையே ஆகிவிடுகின்றனர்.


மூளை ஒரு கத்தி போன்றது. அதைப் பயன்படுத்தாவிட்டால் அது தனது கூர்மையை இழந்து விடும். ஆகவே அறிவுக்கு வேலை கொடுக்கும் நிகழ்ச்சிகளை வேண்டு மென்றால் பார்க்கலாமே தவிர, அறிவை மழுங்கச் செய்யும் நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டாம்.

4. இன்றைய காலத்தில் நிறையப் பேர், நிறை குறைய வேண்டும் என்பதற்காக சில வேளைகளில் சாப்பிடாமலே இருக்கின்றனர். நன்கு உண்டால்தான் மூளை கத்தி போன்று நன்கு வேலை செய்யும்.

மேலும் தானியங்கள், முட்டை மற்றும் கடல் உணவுகள் போன்றவை மூளையை வளர்க்கும் உணவுகள் ஆகும். மேலும் இவை அனைத்தும் உடலுக்கு ஏற்ற, உடல் நிறையை அதிகரிக்காத உணவுகளும் கூட.

5. நன்கு விளையாட வேண்டும். மூளையை நன்கு சுறுசுறுப்பாக, கூர்மையாக வைத்துக் கொள்ள யோசிக்கும் வகையில் இருக்கும் விளையாட்டுக்களை விளையாட வேண்டும். விளையாடுவதன் மூலமும் அறிவை வளர்க்கலாம்.

இவற்றையெல்லாம் பின்பற்றுங்கள் மூளையானது சுறுசுறுப்போடு இருப்பதோடு, அறிவும் கூர்மையடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறவிடப்பட்ட கைத்தொலைபேசி

நீராவியடி கடையிற்சுவாமி கோயிலுக்கும் யாழ். இந்து ஆரம்பபாடசாலைக்கும் இடையே கைத்தொலைபேசியொன்று தவறவிடப்பட்டுள்ளது. அதனைக் கண்டெடுத்தவர்கள் அதன் சிம்காட், மெமரிகாட் ஆகியவற்றை மட்டுமாவது ஸ்ரீ கடையிற்சுவாமி கோயில் உண்டியலில் இட்டு உதவுமாறு கோருகிறோம்.

**0770280017** (65441)(10)


## ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிடர்

**ஸ்ரீ ராம சாஸ்திரிகள்**

ஜாதகம்,கைரேகை,நாம நட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டுப் பிரச்சினை,குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண எம்மை ஒருமுறை சந்தித்துப் பயன் பெறுங்கள்.

காலை- 8.00 மணி -இரவு- 7 .00 மணி வரை

**T. P: 077 233 3075**

இடம்- நல்லூர் கோயில் வடக்கு வீதி.


பயங்கரவாதச் தன்மை, நியாயத்தன்மை பற்றி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாற்றத்துக்கான ஆரம்பம் வந்துள்ளது. ஒரே இரவில் இந்த மாற்றங்களை ஏற்படுத்தமுடியாது. நீண்டகாலம் எடுக்கும். இந்தக் காலங்களில் சர்வதேசத்திலிருந்து தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கவலைக்குரிய விடயமொன்றைக் குறிப்பிடுகின்றேன். 15 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்த வசந்தி ரகுபதி சர்மா அண்மையில் விடுதலை செய்யப்பட்டார். இவர் மூன்று பிள்ளைகளின் தாயாவார். இந்த 15 ஆண்டுகளும் அவரின் பிள்ளைகள் வேறு நபர்களின் உதவியுடனேயே வாழ்ந்து வந்துள்ளனர். வசந்தி ரகுபதி சர்மா சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 15 ஆண்டுகளாக அவரின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்புக்கூறுவது யார்?

கடந்த 14ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டுச் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் உள்வாங்கப்படும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியிருந்தார். ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் நீக்கப்படவில்லை.

ஆறு மாதங்களுக்கு மட்டும் கொண்டுவரப்பட்ட இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பல ஆண்டுகளாக இருக்கிறது.

மதிப்புக்குரிய தம்பதிகள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். பொலிஸாருக்குத் தகவல் வழங்காத காரணத்தால்தான் இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனக் கூறப்பட்டது. இந்த விடயத்தில் தாம் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதால் அந்தத் தம்பதிகள் அந்தக் குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டப்பணம் செலுத்தினர். இவ்வாறான நிலையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு முன்னர் அந்தச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என நான் கேட்கின்றேன்.

இறுதிபோரின்போது சரணடைந்த 12,000 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டபோது ஏன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட 54 கைதிகளை விடுவிக்க முடியவில்லை?

இந்த விடயத்தில் அரசியல் ரீதியாகத் தீர்மானம் எடுக்கவேண்டும். அரசியல் தீர்மானம் எடுத்து இந்தக் கைதிகளை விடுவிக்கவேண்டும். இது அரசின் கடமை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அரசு கூறியதைப்போல தாம் வித்தியாசமானவர்கள் என்பதைக் காட்டவேண்டும். அவை வெறும் வசனங்களில் மட்டும் இல்லாமல் செயல்வடிவமாக்கப்படவேண்டும். இவற்றை உண்மையாக ! மனப்பூர்வமாக நிறைவேற்றுங்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை, சந்தோசத்தை வழங்குவதாக இந்த நடவடிக்கை அமையவேண்டும்–என்றார். (த–சி)

## தேவை

கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஒரு சிற்றுண்டிச் சாலைக்கு சிற்றுண்டி தயாரிப்பாளர் தேவை.

**தொடர்பு - 077 907 6843**

JSAC

# JAFFNA SOCIAL ACTION CENTER

## VACANCY FOR THE POST OF PROGRAMME MANAGER (Executive Level)

Jaffna Social Action Center (JSAC) is a Sri Lankan non-governmental organization providing services throughout the Northern Province. Applications are invited for the post of ***Programme Manager*** from the suitable candidates with the following qualifications.

**Requirements**

- The person should have a degree or diploma in Project Management related.
- Excellent interpersonal & liaison skills with excellent written and spoken English
- At least 5 years experience in senior position level, preferably with NGO's.
- Good analytical skills & expert knowledge of IT field.
- Able to work in a multicultural setting & able to deal with multiple donor implementing systems
- Willing and able to travel to all parts of the country (essential)

**Job Duties of Programme Manager**

- Project proposal, budget development, project implementation & monitoring activities.
- Achieves organizational objectives by contributing information and recommendations to strategic plans and reviews; preparing and completing action plans; implementing production, productivity, quality, identifying trends; determining system improvements; implementing change.
- Meets financial objectives by forecasting requirements; preparing an annual budget; analyzing variances.
- Updates job knowledge by participating in educational opportunities; reading professional publications; maintaining personal networks; participating in professional organizations.
- Enhances department and organization reputation by accepting ownership for accomplishing new and different requests; exploring opportunities to add value to job accomplishments.

**Applicants:**

Interested candidates are invited to submit their CV with a covering letter and two non-related referees to reach us no later than the 17th of October 2015, to the following address: **Co-ordinator, Jaffna Social Action Center, 18/1, Kailasapillaiyarkovil Road, Nallur, Jaffna.**

Only the short listed candidates will be contacted. Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, JSAC also strongly encourages applications from women.

# சாவகச்சேரி நகராட்சிமன்றம் கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 23.10.2015 ஆம் திகதி பி.ப 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே தினம் பி.ப 2.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு இக்ராட் C9 அல்லது அதற்கு மேல் உள்ள ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோர விரும்பினால் அதற்கான கட்டணத்தை செலுத்தி கேள்விப் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT+NBT) |
|---|---|---|---|
| 01 | நகராட்சி மன்ற மாநாட்டு மண்டபம் புனரமைப்பு | 8,500.00 | 2000+VAT 11%+NBT 2% |
| 02 | சின்ன மண்டுவில் வீதி கட்டம் II | 2,360.00 | 2000+VAT 11%+NBT 2% |
| 03 | முதலியாவெளி வீதி திருத்தம் - மண்டுவில் | 10,000.00 | 2000+VAT 11%+NBT 2% |

கேள்விப் பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் 21.10.2015 ஆம் திகதி பி.ப 2.30 மணிவரை மேற் குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப் பிரதி **செயலாளர், நகராட்சி மன்றம் சாவகச்சேரி** என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்பட வேண்டும். இணைப்பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 23.10.2015 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**நகராட்சிமன்ற அலுவலகம்**
**சாவகச்சேரி**
**09.10.2015** (C/18731)(10.15)

**கா.சண்முகதாசன்**
**செயலாளர்,**
**நகராட்சிமன்றம், சாவகச்சேரி.**

# ஆலய பிரதிஸ்டை ஆராதனை

## றெயின்போ தேவாலயம்

**இடம் :** சிங்கம் லேன், உடுவில். (உடுவில் மகளீர் கல்லூரி எதிரில்)

**காலம் :** நாளை (10.10.2015) சனிக்கிழமை மாலை 4.00 மணி

**அனைவரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் அழைக்கின்றோம்**

கிறிஸ்த்துவின் பணியில் போதகர் தேவா மற்றும் ஊழியர்கள், விசுவாசிகள்.

(65440)(10)


## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

DMI COMPUTER EDUCATION

ஆங்கிலத்தில் சரளமாக பேச எழுத வாசிக்க ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

புதிய பிரிவுகள் 10/10/2015 முதல் ஆரம்பம். **Spoken English**



| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Sat, Sun 8.30 a.m.<br>Sat, Sun. 2.00 a.m. | Sat, Sun 3.30 p.m.<br>Tue, Thu 3.30 p.m. | Tue, Thu 9.30 a.m. | Mon, Fri 2.30 a.m. | Sat, Sun 10.30 a.m. |

**IELTS**

- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

**IELTS Life Skills (A1,B1)**
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு

DMI , BRITISH COUNCIL இன IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

# DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (ஈ) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.111,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655 |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வதேசம்

தில் இலங்கைக்கான நோர்வே தூதுவராக கடமையாற்றிய டோர் ஹாட்ரெமிடம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட முடியும். 2007ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரையில் ஹாட்ரெம் இலங்கைக்கான நோர்வே தூதுவராகக் கடமையாற்றியிருந்தார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி ஹாட்ரெம், பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள எமது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு வந்தார். புலிகள் சரணடைய விரும்புவதாக கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தொடர்புகொண்டு சரணடைய விரும்புவதாகக் கூறினார் என ஹாட்ரெம் என்னிடம் தெரிவித்தார்.

புலித்தேவனும்சிலஉறுப்பினர்களும் அவர்களது குடும்பங்களும் சரணடைய விரும்புவதாக புலித்தேவன் கூறினார் என்ற தகவலை ஹாட்ரெம் என்னிடம் பரிமாறிக்கொண்டார். புலித்தேவனுடன், ஹாட்ரெம் தொலைபேசி ஊடாகத் தொடர்புகளைப் பேணி வந்தார்.

எவ்வாறெனினும், சரணடைவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க முடியவில்லை. யார் சரணடைய விரும்புகின்றார்கள் என்பது பற்றிய ஆள் அடையாள விவரங்களைப் புலித்தேவனைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள ஹாட்ரெமினால் முடியாமல் போய் விட்டது.

ஆள் அடையாளத்தை உறுதி செய்து சரணடையச் செய்யவேண்டும் என்பது எம்முடைய தீர்மானம். புலித்தேவனைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என ஹாட்ரெம் குறுஞ்செய்தியொன்றை எமக்கு அனுப்பி வைத்திருந்தார். இதனால் சரணடையும் முயற்சி தோல்வியடைந்தது.

சில மணித்தியாலங்களின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இறுதி முயற்சியை மேற்கொண்டனர். உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைவதாகக் கூறி எம் மீது இறுதித் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான உறுப்பினர்கள் சரணடைய முயற்சித்த விவகாரம் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அப்போதைய இலங்கைக் கிளைத் தலைவர் போல் கெஸ்டெல்லாவிடமும் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சரணடைவதற்காக, முன்னரங்கப் பகுதிகளின் பாதுகாப்புக்கட்டமைப்புக்களைத் தளர்த்து வோம் என தமிழீழ விடுதலைப் புலிகள் கருதினார்கள்.

அமெரிக்காவின் இலங்கைத் தூதரகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கேபிள் தகவல்களின் அடிப்படையில் விக்கிலீக்ஸில் இந்த விட யம் பற்றிய தகவல்களை வெளி யிட்டிருந்தது. புலிகள் சரணடைவது தொடர்பில் இலங்கையுடன் தொடர்புகளைப் பேணிய வெளிநாட்டுத் தரப்புக்கள் பற்றிய அனைத்து விவரங்களை விக்கிலீக்ஸ் வெளியிட் டிருந்தது.

இலங்கை போர் தொடர்பிலான பல்வேறு தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது. விக்கிலீக்ஸ் தகவல்களை விசாரணை செய்யும் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமா என்பது கேள்விக்குறியே.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி, ஹாட்ரெம், பசில் ராஜபக்சவுக்கு குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதில் வன்னி கிழக்குக் களமுனையில் பொதுமக்கள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்காது தடுத்து வைத்திருப்பதாகவும் ஹாட்ரெம், பசிலுக்கு அறிவித்திருந்தார். புலிகள், சிக்கியுள்ள பொதுமக்களைத் தற்போதைக்கு விடுவிப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை எனவும் அது வருத்தமளிப்ப தாகவும் ஹாட்ரெம் கையொப் பமிட்டு பசிலுக்கு அனுப்பிய குறிப்பில் தெரிவிக்கப் பட்டி ருந்தது.

பொதுமக்களைப் புலிகள் பணயமாக வைத்திருந்த போது, போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அரசுடன் தொடர்புகளைப் பேணிய சர்வதேச சமூகத்தின் எவரும், பொதுமக்களை விடுவிப்பதற்காகக் குரல் கொடுக்கவில்லை. பொதுமக்களை விடுதலை செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எந்தவொரு சர்வதேச தரப்பும் கோரவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில், போர்க் காலத்தில் இலங்கையில் கடமையாற்றிய ஐ.நா. அமைப்பு அதிகாரிகள் சாட்சியமளிக்க முடியும். பொதுமக்களை விடுதலை செய்ய முயற்சித்த தமிழ் பேசும் ஐ. நா. உத்தியோகத்தர்களைபுலிகள் சிறைபிடித்தனர்.

இறுதிக் கட்டப் போரின்போது ஐ.நா. பணியாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை போர் வலயத்திலிருந்து மீட்கும் ஐ. நா. அமைப்பின் முயற்சியைப் புலிகள் முறியடித்திருந்தனர்.

இலங்கை அரசுக்கு எதிராகக் குற்றம் சுமத்துபவர்களை அழைத்து விசாரணை நடத்தப்பட வேண்டும். ஆள் அடையாளத்தை மூடி மறைத்து விசாரணை நடத்தப்படக்கூடாது.

தற்போது நாம் ஆட்சி அதிகாரத்தில் இல்லை என்பதனால், அச்சுறுத்தல் என்ற காரணியை முன்வைத்து தப்பித்துக்கொள்ளாது, குற்றம் சுமத்துபவர்கள் யார் என்பதனைத் தெரியப்படுத்த வேண்டும். புலம்பெயர் தமிழர்கள் குற்றச்சாட்டுக்களை நேரடியாகச் சுமத்தி அவற்றை முடிந்தால் நிரூபித்து காட்டட்டும்.

அரசுக்குச் சார்பான எந்தவொரு விடயங்களையும் ஐ. நா. விசாரணை அறிக்கை கவனத்திற் கொள்ளவில்லை. சரணடைந்த விடுதலைப் புலிகளைக் கொலை செய்யவில்லை எனப் போர் காலத்தில் கடமையாற்றிய அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி லெப்டினன்ட் கேணல் லோரன்ஸ் ஸ்மித் வெளியிட்ட அறிக்கை கண்டுகொள்ளப்படவில்லை. திட்டமிட்ட வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைய முயற்சிக்கவில்லை என லோரன்ஸ் கூறியிருந்தார். 2011ஆம் ஆண்டு ஜுன் மாதம் இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. ஐ. நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கையோ அல்லது தீர்மானமோ லோரன்ஸின் கருத்துக்கள் பற்றி கவனம் செலுத்த தயாரில்லை.

சமாதான முயற்சிகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி, இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தார். இறுதிப் போரில்உயிரிழந்தவர்கள் பற்றிய புள்ளி விவரங்கள் தொடர்பில் ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு விதமான எண்ணிக்கை விவரங்களை வெளியிட்டிருந்தனர்.

பிரிட்டன் நாடாளுமன்றில் பொதுமக்களும், போராளிகளுமாக ஒரு லட்சம் பேர் உயிரிழந்தாகவும், சனல் 4 மற்றும் தருஸ்மன் அறிக்கையில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், சர்வதேச மன்னிப்புச் சபை 10 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், ஐ. நா அமைப்பினால் அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய ஆவணமொன்றில் உயிரிழந்தவர் எண்ணிக்கை 7ஆயிரத்து 700 எனவும் குறிப்பிட்டிருந்தது. இவ்வாறு மாறுப்பட்ட உயிர் இழப்பு விவரங்களே வெளியிடப்பட்டன.

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் விசாரணை அறிக்கை மற்றும் தீர்மானம் தொடர்பிலான நம்பகத் தன்மை தமக்குக் கிடையாது- என்றார்.

(த-வ)




## வடக்குக்கு

மறைமுக நிகழ்ச்சி நிரல் இருக்கின்றது என்பதில் ஐயப்பாடு உள்ளது. தமிழ் மக்களை இன்னும் மலினப்படுத்தவும், மக்களை இல்லாமல் செய்யவும் இந்தக் கைங்கரியங்கள் நடக்கின்றதா என்ற சந்தேகம் எழுகிறது.

சந்திரிகாவுக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவர் இந்தப் பதவியை வைத்துக்கொண்டு இந்தப் பக்கத்துக்கு வரக் கூடாது. தெரியும் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று. ரத்வத்தையைப் பாதுகாப்பு அமைச்சராக வைத்து என்னெல்லாம் செய்தீர்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். இப்பொழுது நல்லிணக்கம் சம்பந்தமாகக் கதைக்க எந்த அருகதையும் அவருக்கு இல்லை. அவரை குறித்த பதவியிலிருந்து மாற்றும் பிரேரணை கொண்டு வரவேண்டும்.

எங்களுக்காகச் செயற்படகூடிய, இணைந்துசெயற்படக்கூடிய ஒருவரை நியமிக்க வேண்டும் - என்றார்.(த-5)

## வெளிநாட்டவர்கள்

அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பரம்பரையாகவுள்ள காணிப் பிரச்சினை பற்றி வெளிநாட்டவர்கள் கவலைப்பட வேண்டாம். சரியான முதலீடுகள் வர புதிய அரசு தேவையான சலுகைகள் வழங்கும்.நீங்கள் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய முடியும் என நிதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(த-வ)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர் திரு. W.T.நந்திவர்மன்
அவர்களின்அன்புத் தாயார்

**திருமதி.ஸ்ரெல்லா றெபேக்கா விஜயரட்ணம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார், கல்லூரி, யாழ்ப்பாணம்.

## துயர் பகிர்கின்றோம்



எமது அலுவலக உத்தியோகத்தராகிய

**குழந்தைவேலு மோகனதாசன்**

அவர்களின் மறைவையிட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம், நெடுந்தீவு.

பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.

## மரண அறிவித்தல்



**திருமதி சரஸ்வதி (லீலா) சிவசுப்பிரமணியம்**

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், இருபாலையை வசிப்பிடமாகவும், தற்போது கோண்டாவிலில் வசித்து வந்தவருமாகிய திருமதி சரஸ்வதி சிவசுப்பிரமணியம் நேற்று (08.10.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சீதாலக்ஸ்மி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும், செங்கமலம், காலஞ்சென்ற தங்கேஸ்வரி மற்றும் நடராசா, கனகலிங்கம், இராசமணி ஆகியோரின் சகோதரி யும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், இரத்தினம் மற்றும் ஜெயலட்சுமி, இராஜேஸ்வரி, தியாகராசா ஆகியோரின் மைத்துனியும், நாகேஸ்வரி (சுமதி), நிர்மலா (பேபி - நோர்வே), லோகேஸ்வரன் (ஈசன்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற நளினி மற்றும் தர்சிகா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார் (தில்லையம்பலம் அன் சன்ஸ் உரிமையாளர், நவாலி), சுதன் (நோர்வே), திருமகள் (ஆசிரியை யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), உஷாதர்மினி (சுவிஸ்), பிரதீஸ் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும், பிரியங்கா (லண்டன்), துசியங்கா (Temporory Tutor in Geography, University of Jaffna), அனுலா, திலக்ஷன் (பழையமாணவன் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, 2013), அபிநயா, யதுர்சனா, பிரசாயி, அனுசாயி, லக்ஷனா, நிலக்ஷனா, சரணியா, டேனிலா, சிந்துயன், சானுயன், சரணியன், சயுதன், பிரணிதா, கிரித்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2015) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் மகளின் இல்லத்தில் (கோண்டாவிலில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில்
கிழக்கு, கோண்டாவில்.

தகவல் : பிள்ளைகள், மருமக்கள்.
சிவகுமார் சுமதி - 0777242381, ஈசன் - திருமகள் - 0775493426

## சின்னத்தம்பி செல்லத்துரை



உடுவில் மேற்கு உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்லத்துரை நேற்று (08.10.2015) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லமுத்து தம்பதி யரின் மகனும், காலஞ்சென்றவர்க ளான வைத்திலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்ற கனகம்மாவின் அன்புக் கண வரும், வசந்தநாயகி, ஜெயந்தினி (போதனா வைத்தியசாலை யாழ்ப் பாணம்.) ஜெயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாஸ்கரன், சுரேஸ் (இயன் மருத்துவர், யாழ் போதனா வைத்தியசாலை), சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனும், டினோசாந் நிருஜா, கிசாந், கோபிசா, அபர்ணன் துசானி, சயந்தன், விதுசனா, அபிசாளினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2015) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் மேற்கு, உடுவில்.
T.P: 077 6473 791 - ஜெயக்குமார்
077 6733 145 - பாஸ்கரன்
077 610 9868 - சுரேஸ்

(65439) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகப் பயிற்சிப் பட்டறை

நல்லூர் கலாசாரப் பேரவையின் நாடகப் பயிற்சிப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமை முதல் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று தினங்களுக்கு வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி தெரிவித்தார். (ற-7)

## தடுப்பில்

கையில் பாரதூரமான குற்றங்களைப் புரிந்துவிட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்று வாழும் குற்றவாளிகளைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற குற்றவியல் சட்டத்தின் கீழான கட்டளையை அங்கீகரிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

சீனா, பொதுநலவாய நாடு அல்ல. எனவே, அந்த நாட்டுடனான பரஸ்பர நடவடிக்கைகளுக்காகவே இந்த ஏற்பாடு கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால், இதனூடாக எத்தகைய குற்றங்கள் தொடர்பில் சீனாவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

அதேவேளை, பொதுநலவாய நாடுகளுடனும் இந்த மாதிரியான நடவடிக்கைகளுக்குரிய ஏற்பாடுகளும் முழுமையாகவில்லை. முன்னைய அரசின் காலத்தில் பெரும் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் நாட்டைவிட்டுத் தப்பியோடினார்கள். இவ்வாறு தப்பிச்சென்ற குற்றவாளிகளுள் சிலர் மேற்குலக நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களை கைதுசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவா என்று தெரியவில்லை.

எமது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தைப் போகவேண்டாம் எனச் சொன்னேன். கிறிஸ்மஸ் தினம் என்பதால் அவர் போனார். கிறிஸ்மஸ் தினத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைத் துப்பாக்கியால் சுட்டவரின் பெயரை நாம் கடந்த அரசின் உயர்மட்டத்துக்கு வழங்கினோம். ஆனால், குற்றவாளியை கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவர் நாட்டைவிட்டுத் தப்பிச்சென்று வெளிநாட்டில் வாழ்ந்து வருகிறார். இவ்வாறு பல குற்றவாளிகள் நாட்டைவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இவர்களைக் கைதுசெய்து நாட்டுக்குக் கொண்டுவர அரசு எடுக்கவுள்ள நடவடிக்கைகள் யாவை?

போர் முடிவடைந்து ஏழு வருடங்களாகப் போகின்றன. ஆனால், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் பலர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. இன்னும் சிறைகளில் வாடுகின்றனர். ஐ.நா. தீர்மானத்திலும், சர்வதேச சமூகத்தின் அறிக்கைகளிலும் இவை பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

எனவே, இளைஞர்கள் தடுப்புக்காவலில வைக்கப்பட்டுள்ளதை சட்ட ரீதியாக மட்டும் பாராது நடைமுறை சாத்தியமான ரீதியிலும் பார்த்து நீதி அமைச்சருக்குக் கோரிக்கை விடுக்கிறேன். குறைந்த எண்ணிக்கையிலேயே இருக்கும் அந்த இளைஞர்களை விடுதலை செய்து சமூகத்துடன் இணைக்க வேண்டும் -என்றார். (கு-சி)


தென்மராட்சியில் முதன்மை மாணவனைப்

பாராட்டி வாழ்த்துகின்றோம்



ரவிச்சந்திரன் திலக்சன் - 188 புள்ளிகள்

மாவட்டநிலை-05

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்ற மாணவர்களில் ர. திலக்சன்-188 புள்ளிகளைப்பெற்று மாவட்ட நிலையில் 5 ஆம் நிலையைப் பெற்றுள்ளார். இவரையும் சித்தியடைந்த ஏனைய 40 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

அன்பொளி கல்வி நிலையம்

சாவகச்சேரி

அன்பொளி கல்வியகம்

பாராட்டி வாழ்த்துகின்றோம்

2015 தரம் 5 இல் எமது கல்வியகத்தில் கல்விகற்ற மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மை பெற்ற மாணவர்களையும் அவர்களோடு சித்தியெய்திய 400 இற்கும் மேற்பட்ட ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ப.வசிகரன் -192 (மா.நிலை 01)



சி. நுளசிகன் -191 (மா.நிலை 02)



ர.திலக்சன் -188 (மா.நிலை 05)



மு.சஞ்சயன் -186 (மா.நிலை 09)



ஸ்ரீ.கஜலக்ஷன் -186 (மா.நிலை 09)

Best Wishes

ஆசிரியர் **வே. அன்பழகன்** அவர்களின்

2016 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புகளும், ஆரம்பமாகின்றன.

| | |
|---|---|
| ஞாயிற்றுக்கிழமை: | சனிக்கிழமை: |
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| **அன்பொளி கல்வியகம்** | **அன்பொளி கல்வி நிலையம்** |
| யாழ். இந்துக்கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். | சாவகச்சேரி. |

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டுகிறோம்.

இயக்குநர்கள்.

(C/18729(10.15)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இணுவில் மத்திய கல்லூரி மாணவி

செல்வி.பொன்ராசா அபிநயா

2015ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமைக்காக இவரை வழிப்படுத்திய கல்லூரி அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களை பாராட்டுவதோடும் இவர் மேலும் பல பெருமைகளைத் தேடி சாதனை படைக்க இறைவனை வேண்டி இவரை வாழ்த்துகின்றோம்.

உடுவில் கிழக்கு, இணுவில்.

வாழ்த்துவோர்: அம்மா, அப்பா, அண்ணன்மார், மாமன், அத்தைமார், மற்றும் உறவினர் எல்லோரும்


## அறிவித்தல்

**தேர்தல்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 60 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு தாபிக்கப்படவிருக்கும் சர்வ சன வாக்குரிமை மற்றும் சனநாயகம் தொடர்பான அரும்பொருட்காட்சிச்சாலை**

தேர்தல்கள் திணைக்களத்தின் 60 வருடப் பூர்த்தியை முன்னிட்டு இடம்பெறவிருக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில், 1911 டிசெம்பர்-12 மற்றும் 13ஆம் திகதிகளில் நடைபெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலிலிருந்து 2015.08.17 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் வரையான தேர்தல்களுடன் தொடர்புடைய பொருட்கள், காகிதாவணங்கள், புகைப்படங்கள், சட்டமுறையான அறிவித்தல்கள், பிரசார போஸ்ரர்கள் ஆகியவற்றை ஒன்றுசேர்த்து அரும்பொருட் காட்சிச்சாலையொன்றை தாபிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல்களுடன் தொடர்புடைய தேர்தல் நடவடிக்கை உபகரணங்கள் அல்லது அவற்றின் மாதிரிகள், புகைப்படங்கள், காகிதாவணங்கள் ஆகியவற்றின் மூலப்பிரதிகள் அல்லது இணைப்பிரதிகள் அல்லது நிழற்பிரதிகள் ஆகியன தன்னிடமிருக்கும் நிறுவனங்களிடமும் பிரஜைகளிடமும் அவற்றைத் தேர்தல்கள் திணைக்களத்திற்கு வழங்கியுதவுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலும் தேர்தல்களின்போது பெற்றுக்கொண்ட அனுபவங்கள் அல்லது தேர்தல்கள் திணைக்களத்தில் கடமையாற்றிய அலுவலர்களின் விசேட அனுபவங்களைத் தயவுகூர்ந்து எமக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன், 1985 ஆம் ஆண்டுக்கு முன்னர் தேர்தல்கள் திணைக்களத்திலும் 1955 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களத்தில் அல்லது உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திணைக்களத்தில் கடமையாற்றியவர்கள் தொடர்பான தகவல்களையும் அறிவிக்குமாறு அவ்வாறு கடமையில் ஈடுபட்டிருந்த அனைவரிடமும் அவ்வாறான தகவல்களை அறிந்திருக்கும் வேறு ஆட்களிடமும் மேலும் தயவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

முகவரி: தேர்தல்கள் ஆணையாளர்.
தேர்தல்கள் செயலகம்.
இராஜகிரிய.

மின்னஞ்சல் முகவரி-comelesl@sltnet.lk

தொலைபேசி இலக்கம்-011-2868441.42.43.44

தொலைநகல் இலக்கம்-011-2868445. 011-2868368

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்.
தேர்தல்கள் செயலகம்.
இராஜகிரிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏமாற்றியது

யான பல்துறை தேவைகள் சார்பான பல் நிறுவன அறிக்கையை 2013 ஆம் ஆண்டு கோரினேன். அதே காலகட்டத்தில் எமக்குச் சர்வதேச பல் நிறுவனங்களுடனான அனுபவத்தைப் பெற்றவரும் முகாமைத்துவம் பற்றிய அறிவு, அனுபவம் தகைமையும் உடைய ஒருவரை எமது ஆலோசகராகப் பெறவேண்டும், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யமுடியுமா என்று வதிவிடப் பிரதிநிதியிடம் கேட்டிருந்தேன். இரண்டுக்கும் சாதகமான பதிலைத் தந்தார் வதிவிடப் பிரதிநிதி.

நான் தேர்ந்தெடுத்த நபரின் பெயரையும் வதிவிடப் பிரதிநிதிக்குக் கூறியிருந்தேன். இதன் பிறகு அப்போதைய ஜனாதிபதியை 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி சந்தித்தேன். அப்போது ஆலோசகரின் விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஜனாதிபதி, ஆஸ்திரேலியாவில் வசிக்கும் குறித்த ஆலோசகரை நியமிப்பதில் பிரச்சினை ஏதும் இல்லை என்றும், அவரை இரட்டைப் பிரஜா உரிமையைப் பெறச் சொல்லுங்கள் என்றும், மற்றவற்றைத் திறைசேரிச் செயலாளருடன் முடிவு செய்து கொள்ளுங்கள் என்றும் கூறினார்.

**முரணாகச் செயற்பட்ட வதிவிடப் பிரதிநிதி**

ஆலோசகரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் பார்ப்பதாகக் கூறிய வதிவிடப் பிரதிநிதி, பல்துறை தேவைகள் சார்பான பல் நிறுவன அறிக்கை பெறுவது சம்பந்தமாக எமக்குச் சார்பற்ற விதத்தில் நடந்து கொண்டார். அப்போதைய ஜனாதிபதி செயலணியினதும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினதும் எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மனித நலன் சார்பான ஆய்வொன்றினையே தொடர்ந்து நடத்த அவர் நடவடிக்கைகள் எடுத்தார்.

ஜனாதிபதி செயலணியானது இராணுவ உயர் அதிகாரிகளை, போரின் முடிவின்போது பெரிய அளவில் உள்ளடக்கி நியமிக்கப்பட்ட ஒரு செயலணி. அது முழுக்க முழுக்க இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கப்பட்ட ஒரு செயலணி. பொருளாதார அமைச்சினதும் அந்த செயலணியினதும் நெறிப்படுத்தலின் கீழேயே அவர் நடவடிக்கைகளை எடுத்தார்.

**மத்தியுடன் இணைந்து செயற்பட்டது ஐ.நா.**

இலங்கையின் ஐ.நா. சபை கிளை மட்டுமே மனித நலன் சார்பான ஆய்வை நடத்தியது. 2003 ஆம் ஆண்டில் நடந்ததுபோல் உலக வங்கியோ – ஆசிய அபிவிருத்தி வங்கியோ இந்தச் செயற்பாட்டில் பங்குபற்றவில்லை. இது பற்றி எம்முடன் கலந்தாலோசிக்கவுமில்லை. தொடர்ந்தும் மத்திய அரசுடன் சேர்ந்தே வடக்கு மாகாணத்தில் என்ன செய்யவேண்டும் என்ற முடிவுகளை ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி எடுத்தார். இதன்போது போருக்குப் பின்னரான எமது மக்களின் புனருத்தாரணம், அபிவிருத்தி பற்றி அவர் ஆராயவில்லை.

அதனால்தான் நாங்கள் 2003 ஆம் ஆண்டில் செய்தது போல் பல்துறை தேவைகள் சார்பான பல் நிறுவன ஆய்வுக் கோரிக்கையை முன்வைத்திருந்தோம். அதை அவர் பொருட்படுத்தவில்லை. எனினும் இது பற்றி ஐ.நா. சபையினால் இங்கு அனுப்பப்பட்ட மடம் ஏஜனெஸ் தலைமை வகிக்கப்பட்ட குழுவுக்குச் சென்ற வருடம் பெப்ரவரி மாதத்தில் எமது கரிசனைகளை வெளியிட்டோம். ஆற்றுப்படுத்தும் குழுவினுள் எம்மையும் சேர்த்து ஏற்றுக்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தோம். அது நடைபெறவில்லை.

**பல்துறை ஆய்வை விரும்பவில்லை**

முழுமையான ஆய்வானது வடக்கு மாகாணத்தில் ஆங்காங்கே இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட பல தவறான செயல்களை வெளிப்படுத்தக்கூடும் என்பதே அரசின் மறுப்புக்குக் காரணம் என்று நினைக்க இடமிருக்கின்றது. இவைபற்றி பிறிதொரு மூலத்தின் வாயிலாக அறிந்து கொண்ட நான் எமக்குத் தெரியாமல் எம்முடைய கோரிக்கையை அசட்டை செய்து, மத்திய அரசுடன் சேர்ந்து உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டு எங்களைப் பற்றிய ஆய்வு நடத்துவது தவறு என்று கூறினேன்.

மத்தியுடன் தான் தாங்கள் தொடர்பு வைத்திருக்கலாம் மாகாணத்துடன் அல்ல என்றும் வேண்டுமெனில் மத்தியுடன் தொடர்பு கொள்ளுமாறும் எனக்குக் கடிதம் அனுப்பினார். இவ்வளவு காலமும் இருந்துவிட்டு இப்போது இதுபற்றி ஏன் கூறுகின்றீர்கள் என்று அவரிடம் கேட்டேன். அதன் பின் நாங்கள் ஜனாதிபதிக்கு எமது கோரிக்கையைச் சென்ற வருடம் மத்தியில் அனுப்பினோம். அவர் அதற்குப் பதில் அனுப்பவில்லை. ஆகமொத்தம் வடக்கு மாகாணம் சம்பந்தமாக பல்துறைத் தேவைகள் சார்பான பல்நிறுவன ஆய்வில் ஈடுபட அரசும் விரும்பவில்லை வதிவிடப் பிரதிநிதியும் விரும்பவில்லை.

**தேக்கமடைந்தது**

அதன் பின்னர் இந்த விடயம் சம்பந்தமாக ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலர் என்னைக் கடந்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் எனது காரியாலயத்தில் இங்கு வந்து சந்தித்து ஆலோசகரின் நியமனம் ஐ.நா. சபையினால் வருங்காலத்தில் நடைமுறைப்படுத்த இருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைந்து தான் நடைமுறைப்படுத்தப்படும் என்று முதல்முறையாகக் கூறினார்.

அவ்வேளையில் நான் ஆலோசகரின் நியமனம் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுடன் இணைக்கப்படாமல் ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்டது போல் தனிப்பட்ட ஒரு செயற்பாடாக முதலமைச்சரின் அலுவலகத்திற்குரிய ஒரு தேவையாக ஏற்று நடைமுறைப்படுத்தப்படுவது தான் பொருத்தம் என்று கூறினேன். அவரோ வடக்கு மாகாணத்துக்கு வகுக்கப்படும் செயற்பாடுகளின் ஒரு அங்கமாகவே ஆலோசகரின் நியமனத்தை மாற்ற எத்தனித்தார். ஆனால் அந்தச் செயற்பாடுகளுக்கும் ஆலோசகர் நியமனத்திற்கும் சம்பந்தமில்லை என்று நான் கூறினேன். உண்மையும் அது தான்.

**தீர்மானம் பின்னுக்கு போனது; வந்தது நிதி**

அதன் பிறகு பல மாதங்கள் காக்க வைத்துவிட்டு ஐ.நா. சபை இந்த வருடம் மார்ச் மாதத்தில் வரவேண்டிய ஜெனிவாத் தீர்மானத்தைச் செப்ரெம்பருக்கு பிற்போட்ட பின்னர்' சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நிதி' பற்றி எமக்கு ஏப்ரல் மாதத்தில் அறிவித்தார். அப்போது குறித்த நிதி பற்றி எமக்குக் கருத்து வேறுபாடுகள் இருப்பதை வதிவிடப் பிரதிநிதிக்கு அறிவித்தேன்.

அதன் பின்னர் நான் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் அனுசரணையுடன் வதிவிடப் பிரதிநிதியின் மேலிடத்தை நியூயோர்க்கில் ஜூலை மாதத்தில் சந்தித்தேன். அங்கு அவரின் அந்த நேரடி சிரேஷ்ட அலுவலர், கருத்துக் குறிப்பின் ஒரு பிரதியைத் தந்து அதனை எப்படியாவது ஏற்க வேண்டும் என்று கோரினார். 'இன்றே நீங்கள் அதனை ஏற்க வேண்டும். இல்லை என்றால் உங்களுக்குப் பணம் கிடைக்காது' என்று கூறினார். நான் இது பற்றி எமது அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தே முடிவு எடுக்க முடியும் என்றபோது 'நீங்கள் அவர்களுடன் பேசினால் அது அரசியலாகப் போய்விடும். நீங்களே முடிவெடுங்கள்' என்று பல அலுவலர்கள் முன்னிலையில் என்னைப் பலவந்தப்படுத்தப்பார்த்தார் – நிர்ப்பந்தத்துக்கு உட்படுத்தினார். நான் அதற்கு இடமளிக்கவில்லை.

**உள்ளகப் பொறிமுறை உள்ளடக்கம்**

அந்தக் கருத்துக் குறிப்பில், 4 விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் குறிக்கோள் சமாதானத்தை ஏற்படுத்தல். அதற்காக மனித உரிமைகளை மேம்படுத்தல் – நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் – பொறுப்புக் கூறல் – நடைமுறைப் பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்றவற்றை நடைமுறைப்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

அதற்காக, மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக உள்ளகப் பொறிமுறையை உருவாக்குதல் (சர்வதேசப் பொறிமுறையை ஐக்கிய நாடுகள் ஏற்றிருந்தால் இந்த விடயம் பலன் அற்றுப் போயிருக்கும்), நல்லிணக்கத்தை உருவாக்கல், மீள் குடியேற்றம் பற்றிய நடவடிக்கைகள், வடக்கு மாகாண சபைக்குத் தேவையான சிலவற்றை அடையாளம் கண்டு அவற்றுக்காகப் பணத்தை ஒதுக்கி வைத்தல்.

முதலாவது ஏற்பாடு சம்பந்தமாக 750 ஆயிரம் டொலர்கள், இரண்டாவது சம்பந்தமாக 550 ஆயிரம் டொலர்கள், மூன்றாவது சம்பந்தமாக ஆயிரத்து 200 ஆயிரம் டொலர்கள், நான்காவது சம்பந்தமாக 500 ஆயிரம் டொலர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

**சந்தேகம் ஏற்படுகின்றது**

ஜெனிவா தீர்மானத்தைத் தள்ளி வைத்த பின்னரே இந்த நிதி பற்றிப் பேசப்படுகின்றது. இது முழுமையாக மத்திய அரசுக்குச் சார்பாகவே அமைந்துள்ளது. நாங்கள் சர்வதேச பொறிமுறைகளைக் கோரியிருக்கும் வேளையில் உள்ளகப் பொறிமுறை ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் எடுப்பது எமக்குச் சந்தேகத்தைத் தருகிறது. ஏற்கனவே உள்ளகப் பொறிமுறை ஒன்றுக்கு அத்திபாரம் இட்டாகியதோ என்று எண்ண வேண்டியிருக்கின்றது. இதனால்தான் நான் கடைசி நேரத்திலும் உள்ளகப் பொறிமுறை எமக்கு ஏற்படுத்தப் போகும் பாதிப்புப் பற்றிக் குறிப்பிட்டு ஜெனிவாவில் பங்குபற்றிய அனைத்துப் பிரதிநிதிகளுக்கும் கடந்த மாதம் 30 ஆம் திகதி அன்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன்.

நல்லிணக்கத்துக்கான பணம் மத்திய அரசுக்கே கொடுக்கப்படுகின்றது. எமக்கல்ல. எம்முடன் எதுவும் கலந்தாலோசிக்கப்படவும் இல்லை. மத்தி கூறும் நல்லிணக்கத்துக்குள் எங்களைப் பணிய வைக்கப் பார்க்கின்றது ஐ.நா. சபை. மேலும் மீள்குடியேற்றத்துக்குப் பணம் ஒதுக்கப்படுகின்றது. ஆனால் அது பற்றிய எந்தவிதமான கலந்துரையாடல்களும் இதுவரை எம்முடன் நடைபெறவில்லை. அதுபற்றிய எமது தேவைகளும் கரிசனைகளும் கண்டறியப்படவுமில்லை.

**ஐ.நா. மத்தியின் நன்மைக்காக செயற்பட்டது**

ஒரு விதப் பின் நினைவாகவே எமக்கும் சொற்பபணம் குறித்தொதுக்கப்பட்டுள்ளது. எங்களை மற்றைய மூன்றுக்கும் ஒத்துப்போக வைக்கவே இந்தப் பணத்தை முன்வைத்துள்ளீர்கள். ஆனால் எல்லாமே மத்தியுடனான ஒழுங்குகளே. நாங்கள் எம்மை உட்படுத்திய ஒரு வேலைத் திட்டத்துக்கு அன்றி, ஐ.நா. சபை தன்னிச்சையாக மத்திய அரசின் நன்மைக்காகச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது என்று கூறினேன்.

அத்துடன் உண்மை விளம்பல், நீதி, நட்டஈடு செய்தல், திரும்பநிகழாது தடுக்கும் உத்தரவாதங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான ஐ.நா. விசேட பிரதிநிதி பப்லோ, ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி இங்கு வந்து சென்றபோது குறிப்பிட்ட பல விடயங்கள் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியால் கருத்துக் கெடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினேன்.

இலங்கையில் விசாரணை ஆணைக் குழுக்கள் தேவைக்கதிகமாக நியமிக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நம்பகத்தன்மை இழப்பு, நல்லிணக்கத்துக்குக் குறுக்கு வழிகள் கிடையாது, மனித உரிமைகள் பற்றி அரசின் வலுவான கொள்கைப் பிரகடனம் தேவை, போரின் பின்னரான நிவாரணங்கள் முழுமையானதாக அமைய வேண்டும், கலந்து பேசல், பங்குபற்றுதல் அவசியம், காணாமற் போனோர்; தொல்லை தரல், வன்முறை, தடுத்து வைத்தல், காணி மற்றும் உளவியல் சார்ந்த சமூக உதவிகள் பற்றி உடனே நடவடிக்கை எடுத்தல் அவசியம் என்பதை பப்லோ குறிப்பிட்டிருந்தார்.

**பின்னடித்தார் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி**

அவற்றுள் முக்கியமாக கலந்துபேசல், பங்குபற்றுதல் ஆகியன எத்துணை அவசியம் என்பதை பப்லோ குறிப்பிட்டும் எம்முடன் கலந்து பேச அப்போது பின்நின்றார் வதிவிடப் பிரதிநிதி. பின்னர் இலங்கையிலும் ஜெனிவாவிலும் நடந்த நடவடிக்கைகள் யாவும் முன்னரே ஒரு தலைப்பட்சமாக விவாதித்து இலங்கை அரசுடன் கருத்தொருமித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதை எமது பிரதிநிதிகள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஜெனிவாவில் எப்பேர்ப்பட்ட பொறிமுறை என்று தீர்மானிக்க முன்னர் உள்ளகப் பொறிமுறை ஒன்றுக்குப் பணத்தைக் குறித்தொதுக்க வேண்டிய அவசியம் என்ன? அத்துடன் நல்லிணக்கத்தை எவ்வாறு மத்திய அரசு எங்களுடன் பேசாது ஏற்படுத்தப் போகின்றது? பணத்தைக் குறித்தொதுக்க முன் எமது நடவடிக்கைகள் வெளிப்படையாக இருக்கவேண்டும். உண்மைகளை அரசு அறிந்து கொள்ளாமல் நல்லிணக்கத்தை எவ்வாறு ஏற்படுத்தப் போகின்றது? இராணுவத்தினரை வெளியேற்றாது, மீள்குடியேற்றம் பற்றிக் குறிப்பிடுவது பணத்தை மத்தி எடுத்துக் கொண்டு தன்னிச்சையாகச் சில காணிகளை விடுவிப்பதாக முடியுமல்லவா?

**ஒப்புதலுக்கு மட்டும் மாகாண சபை**

நான்கு விடயங்களும் எம்முடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்க வேண்டிய விடயங்கள். எங்களைப் பலாத்காரப்படுத்தி எங்களின் ஒப்புதலை வாங்கவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பணம் எங்களுக்குத் தரப்படமாட்டாது மத்திக்கே கிடைக்கும். ஆனால் எங்கள் ஒப்புதலை மட்டும் கேட்கின்றார்கள். எனவே எனது மன வருத்தத்தைக் கடைசியாக நான் பேசிய சிரேஷ்ட ஐ.நா அலுவலருக்குத் தெரியப்படுத்திவிட்டேன். அவரும் அதனைப் புரிந்த கொண்டிருந்தார். வதிவிடப் பிரதிநிதி தனக்கு மேலிடத்தில் இருந்து நெருக்குதல் ஏற்பட்டதால், நான் கோரிய நபரைத் தான் ஏற்காததால்தான் நான் சம்மதம் தெரிவிக்கவில்லை என்றும் அந்த நபரை ஏற்றால்தான் கருத்துக் குறிப்பை ஏற்க முடியும் என்று நான் கூறியிருந்ததாகவும் திரித்துக் கூறத் தலைப்பட்டார். அதற்கு அவருக்குத் தக்க பதில் தயாரித்துள்ளேன்.

**பாதிப்பு ஏற்படுத்தும் எதற்கும் சம்மதியேன்**

அதாவது முன்னர் ஏற்றுக் கொண்ட ஒரு விடயத்தைக் காலங்கடத்திவைத்து கருத்துக் குறிப்புக்கு நான் அனுசரணை வழங்கினால்தான், குறிப்பிட்டவரை நியமிக்க முடியும் என்று கூறியவர் நீங்களே (வதிவிடப் பிரதிநிதி அன்றி நான் அல்ல என்றும், கருத்துக் குறிப்புக்கு ஒப்புதல் அளிப்பதானால் அவரை முதலில் நியமியும் என்று நான் எந்தத் தருணத்திலும் கூறவில்லை என்றும், அவ்வாறு கூறியிருந்தால் அதைக் காட்டும் என்றும் அவருக்குக் கூறிவைத்தேன்.

அத்துடன் எமக்கு ஆலோசகர் பற்றிய எதிர்பார்ப்பு எதுவும் இல்லை என்று அவருக்குக் கூறிய பின்னரும் இவ்வாறு அவர் கூறியுள்ளார். ஆலோசகர் கிடைத்திருந்தால் என்ன? கிடைக்காதிருந்தால் என்ன? எமக்குத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கருத்துக் குறிப்புக்கு நான் எப்போதும் சம்மதித்திருக்க மாட்டேன். இப்பொழுது எமது ஒப்புதல் இல்லாமலே பணத்தை மத்தி கையேற்றிருப்பதாகத் தெரிகின்றது – என்றுள்ளது. (த-5)

## காலிக்

டார்.

விசாரணைகள் முடியும் வரை, காலி துறைமுகத்தில் இந்தக் கப்பல் தரித்து நிற்கும் என்றும், முதற்கட்டமாகக் கப்பலில் உள்ள ஆயுதங்கள் தொடர்பான பதிவுகள் முறையாகப் பேணப்பட்டுள்ளதா, அவற்றுக்கான அனுமதி பெறப்பட்டுள்ளதா என்று விசாரிக்கப்படும் என்றும் கடற்படைத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

கப்பல் மாலுமிகள் சமர்ப்பித்த ஆவணங்கள் சில குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளதாகவும், கப்பல் கைப்பற்றப்பட்டபோது உக்ரேனியர் ஒருவரே அதற்குப் பொறுப்பாக இருந்ததாகவும், ஆனால் ஆவணங்களில் இலங்கையர் ஒருவரே கப்டன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடல்சார் சட்டங்களின்படி, கப்பல் பற்றிய விபரங்களை எமக்குத் தர வேண்டும் என்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை, ஆயுதக் கப்பல் ஒன்று கைப்பற்றப்பட்டதை உறுதிப்படுத்திய, துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இதுபற்றிய விசாரணைகளைக் கடற்படை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். (த-6)

## அபிவிருத்திக்

தெரிவிக்கப்பட்டது. அத்துடன், எதிர்காலத்தில் இவ்வாறான கூட்டங்களுக்கு மாகாணசபை உறுப்பினர்களை அழைக்கவேண்டும் என்று அரச அதிபர்களைக் கோரும் தீர்மானம் மாகாண சபையில் நேற்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 36 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது, வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவினால் பிரேரணை முன்மொழியப்பட்டது. அதில், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கப் பணிப்பாளர் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் கூட்டம் இடம்பெற்றதாகவும், அதன்போது 5 ஆண்டு கால அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் ஊடகச் செய்திகள் வெளியாகியுள்ளன. குறித்த கூட்டத்துக்கு மாகாண சபை உறுப்பினர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ எவரும் அழைக்கப்படவில்லை.

எனவே இது தொடர்பில் முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து, மாவட்டத்தின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலந்துரையாடலை ஏற்பாடு செய்து ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை மக்கள் பிரதிநிதிகளால் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற பிரேரணை முன்மொழியப்பட்டது.

இதனை, ஆளுங்கட்சி உறுப்பினர் க.சர்வேஸ்வரன் வழிமொழிந்தார். அத்துடன், கடந்த ஆட்சியில் மாகாண சபையை மத்தி புறக்கணித்தது போன்று தற்போதைய நல்லாட்சியிலும் மாகாண சபை ஓரங்கட்டப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினர் து.ரவிகரன், இது யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் நடைபெறவில்லை என்றும், வடக்கின் சகல மாவட்டங்களிலுமே நடைபெறுவதால் பிரேரணையில் வடக்கு மாகாணம் என்று குறிப்பிடவேண்டும் என்றும் கூறினார்.

பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அழைக்கப்படவேண்டும் என்று வடக்கின் 5 மாவட்ட அரச அதிபர்களுக்கும் முதலமைச்சர் கடிதம் அனுப்பவேண்டும் என்று குறிப்பிட்டார். அதனை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் கொண்டு வந்த பிரேரணை எதுவித எதிர்ப்பும் இன்றி சபையில் நிறைவேற்றப்பட்டது. (த-5)

## மாவட்ட

போதும் அனுமதிக்க முடியாது. இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபாலவின் கவனத்துக்குக் கொண்டு செல்லவேண்டும் என்று அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சபையில் தெரிவித்தார்.

இது தொடர்பில், சபையின் கருத்துக்களையும் அவைத் தலைவர் கேட்டார். இதன்போது, சபையில் ஆளும் மற்றும் எதிர்தரப்பு உறுப்பினர்களும் இதற்கு ஆதரவான நிலைப்பாட்டைத் தெரிவித்தனர். இதனையடுத்து அவைத் தலைவர், இந்த விடயத்தை ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு அனுப்பி வைப்பதாகத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி உறுப்பினர்களுக்கு பொலிஸ்மா அதிபர் நட்டஈடு வழங்க வேண்டுமென உத்தரவு

கொழும்பு, ஒக். 9
ஜே.வி.பி கட்சியின் உறுப்பினர்கள் இருவருக்கு நட்டஈடு வழங்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி தெமட்டகொட பகுதியில் வைத்து இரண்டு ஜே.வி.பி உறுப்பினர்களைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். பொரளை பகுதியைச் சேர்ந்த ஜோசப் சில்வா மற்றும் சந்திரசேன ஹெட்டியாரச்சி ஆகிய இரண்டு உறுப்பினர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஊடகங்கள் மீதான அடக்குமுறைகளை உடனடியாக நிறுத்தவேண்டுமெனக் கோரும் வகையிலான சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தபோது, சட்டவிரோதமாக அவற்றை வைத்திருந்தார்கள் என்ற அடிப்படையில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டார்கள்.

பொலிஸாரின் இந்தக் கைது சட்டவிரோதமானது எனவும் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் கைது செய்யப்பட்டவர்கள் உயர் நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவைப் பரிசீலனை செய்த நீதிமன்றம், இருவரினதும் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

எனவே இருவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கப்படவேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. நீதியரசர்களான பிரியசாத் டெப், சிசிர ஆப்ரூ மற்றும் அனில் குணரட்ன ஆகியோர் இந்த மனுவைப் பரிசீலனை செய்திருந்தனர். அரசின் சார்பில் பொலிஸ்மா அதிபர் நட்டஈட்டை வழங்கவேண்டுமென நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர். (த-வ)



அம்பாறை மாவட்ட அரச பாடசாலைகளில் சேவையாற்றும் சிங்கள சமூகத் தொண்டராசியர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்டைச் சந்தித்து தமது குறைகளை விளக்கியுள்ளனர். இந்தச் சந்திப்பு கிழக்கு மாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (த-10)

# யாழில் இன்னும் 4,737 மக்கள் நலன்புரி முகாமில்

## மீள்குடியேற்ற அமைச்சர் தகவல்



கொழும்பு, ஒக். 9
யாழ். மாவட்டத்தில் 7 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 32 நலன்புரி நிலையங்களில் 1,318 குடும்பங்களைச் சேர்ந்த 4,737 பேர் இருக்கின்றனர் எனத் தெரிவித்த புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், மேற்படி நலன்புரி நிலையங்களில் வசிப்போரின் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவால் எழுப்பப்பட்ட கேள்விக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பதிலளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் சுவாமிநாதன் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்திலுள்ள நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு நலன்புரி நிலையத்தில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 3 நலன்புரி நிலையங்களில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 102 பேரும், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 9 நலன்புரி நிலையங்களில் 383 குடும்பங்களைச் சேர்ந்த 1,369 பேரும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 6 நலன்புரி நிலையங்களில் 435 குடும்பங்களைச் சேர்ந்த 1,504 பேரும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 5 நலன்புரி நிலையங்களில் 221 குடும்பங்களைச் சேர்ந்த 895 பேரும், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு நலன்புரி நிலையத்தில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 54 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 7 நலன்புரி நிலையங்களில் 229 குடும்பங்களைச் சேர்ந்த 791 பேரும் என மொத்தமாக 7 பிரதேச செயலாளர் பிரிவில் 1,318 குடும்பங்களைச் சேர்ந்த 4,737 பேர் வசிக்கின்றனர்.

இந்த நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களின் நலன் கருதி குடிதண்ணீர், மலசலகூட வசதிகள், மின்சாரம் மற்றும் கழிவகற்றல் நடவடிக்கைகளுக்காக 37 இலட்சத்து 44 ஆயிரத்து 900 ரூபா நிதி ஒதுக்கப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன—என்றார். (த-சி)

# ஜனக பண்டார விளக்கமறியலில்

கொழும்பு, ஒக்.9
கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

1999ஆம் ஆண்டு தம்புள்ளப் பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதோடு, மற்றொருவர் காயமடைந்த சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் ஜனக பண்டார கைது செய்யப்பட்டிருந்தார்.

கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரைக் கைது செய்ததோடு, தொடர்ந்தும் அதே வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் அவரைச் சிகிச்சை பெற அனுமதித்தனர்.

இந்தநிலையில் கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பலபிடிய நேற்றுச் சந்தேக நபரை விசாரிக்க குறித்த வைத்தியசாலைக்குச் சென்றார். இதனையடுத்து அவரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (த-வ)

# மதப் பாரம்பரியத்தை காக்க அமெ. உதவும்

கொழும்பு, ஒக்,9
இலங்கையின் கலாசார மற்றும் மதப் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு அங்கமாக, புராதன பௌத்த ரஜகல மடாலயத்தை மீளமைத்தல் மற்றும் அனுராதபுரம் தொல்பொருள் அருங்காட்சியகத்தின் புராதன தொல்பொருள்களின் பாதுகாப்பை மேம்படுத்தல் போன்றவற்றுக்கு இலங்கை ரூபாவில் 42.1 மில்லியனுக்கும் அதிகமான பணத்தை நன்கொடையாக வழங்குவதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மத மற்றும் கலாசார பாரம்பரிய பகுதிகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அமெரிக்கா அறிந்து வைத்துள்ளது. 2005 ஆம் ஆண்டு முதல் இதற்காக 100 மில்லியன் இலங்கை ரூபாக்களை வழங்கியுள்ளது. இலங்கையின் கலாசாரப் பாரம்பரிய தலங்களைப் பாதுகாப்பதற்கான எமது ஒத்துழைப்பானது சர்வதேச விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சுற்றுலாத் துறைக்கான ஊக்கத்தை வழங்கவும், மக்களுக்கிடையிலான புரிந்துணர்வை உருவாக்கவும் உதவும் என நம்புகின்றோம் என அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

ரஜகல மடாலயத்தின் மீளமைத்தல் பணிகளுக்காகக் கலாசார பாதுகாத்தலுக்கான தூதுவரின் ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக அமெரிக்கத் தூதரகத்திடம் இருந்து ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் 150,000 அமெரிக்க டொலர்களைப் பெறவுள்ளது. மடாலயத்தின் முழுமையான நில ஆய்வு மற்றும் பழங்கால பௌத்த துறவிகளால் பயன்படுத்தப்பட்ட மிகவும் முக்கியமான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் என்பவற்றுக்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. 2013ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 100, 000 நன்கொடையைத் தவிர, இந்தச் செயற்றிட்டத்துக்காக அமெரிக்காவால் வழங்கப்படும் இரண்டாம் கட்ட நிதியாக இது உள்ளது.

'இலங்கையின் பௌத்த துறவிகளின் வாழ்க்கை முறை குறித்து மேலும் கற்றுக் கொள்வதற்கு அமெரிக்காவுடனான எமது பங்காளித்துவம் மிகவும் முக்கியமானது' என ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வரலாற்று மற்றும் தொல்பொருளியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் பி.பீ. மண்டாவல தெரிவித்தார்.

இந்தப் புதிய நன்கொடையின் கீழ், இலங்கையின் தொல்பொருளியல் திணைக்களத்துக்கு வழங்கப்படும் 150,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நன்கொடையானது அனுராதபுரம் தொல்பொருளியல் அருங்காட்சியகத்தில் தொல்பொருள்களைச் சிறப்பாக களஞ்சியப்படுத்தவும், பாதுகாப்பதற்கும் உதவும். உள்ளூரில் உள்ளவர்களாலும், வெளிநாட்டவர்களாலும் அதிகம் பயணம் செய்யப்படும் இலங்கையின் முன்னணி அருங்காட்சியகத்துக்கு 2009 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவினால் வழங்கப்பட்ட முன்னைய நன்கொடைக்கு மேலதிக பெறுமதி சேர்ப்பதாக இந்த நன்கொடை அமைந்துள்ளது.

2005 ஆம் ஆண்டு முதல், கலா சார பாதுகாப்புக்கான தூதுவரின் ஒதுக்கப்பட்ட நிதியின் ஊடாக இலங்கையில் இதுவரை மொத்தமாக இலங்கை ரூபாயில் 100 மில்லியனுக்கும் மேல் பெறுமதியான 11 செயற்றிட்டங்களுக்கு அமெரிக்கத் தூதரகம் நன்கொடை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-10)

# சிறைச்சாலைகள் ஆணையாளர் பதவிக்கு மும்முனைப் போட்டி

கொழும்பு, ஒக். 9
சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தற்போதைய ஆணையாளர் நாயகம் ஹோஹண புஷ்பகுமார இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு தற்போதைய சிறைச்சாலைகள் ஆணையாளர்கள் மூவர் மத்தியில் கடும் போட்டி நிலவுவதாக சிறைச்சாலை அதிகாரிகளின் ஒன்றியம், சட்டம், சமாதானம் மற்றும் சிறைச்சாலைகள் புனருத்தாபன அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு கடிதமூலம் அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

தற்போதைய சிறைச்சாலை ஆணையாளர்கள் எவருக்கும் ஆணையாளர் நாயகமாகப் பதவியேற்கக்கூடிய தகுதி இல்லையெனவும் அந்தப் பதவிக்கு இலங்கை பரிபாலன சேவை அதிகாரியொருவரே நியமிக்கப்படவேண்டுமெனவும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள், ஜனாதிபதியின் செயலாளர், சிறைச்சாலைகள் திணைக்களத்தின் செயலாளர், அரச பரிபாலன திணைக்களத்தின் செயலாளர், அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (த)

# சபைக்குத் தலைமை தாங்க பத்துப் பேர் கொண்ட குழு

கொழும்பு, ஒக். 9
எட்டாவது நாடாளுமன்றத்தின் அமர்வுகளின்போது சபைக்குத் தலைமை தாங்குவதற்கு 10 பேர் கொண்ட குழுவொன்று சபாநாயகர் கரு ஜயசூரியவால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஐக்கிய தேசியக் கட்சியின் வேலுகுமார், முஜிபுர் ரஹ்மான் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறுபான்மைக் கட்சிகளின் சார்பில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றில் நேற்று முன் தினம் புதன்கிழமை இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பின்போதே சபாநாயகர் கரு ஜயசூரிய இந்தக் குழு தொடர்பான அறிவிப்பை விடுத்தார்.

இந்தக் குழுவில் பிமல் ரத்நாயக்க, எட்வட் குணசேகர, ஜே.எம்.ஆனந்த குமாரசிறி, லக்கி ஜயவர்தன, ஸ்ரீயானி விஜேவிக்கிரம, செஹான் சேமசிங்க, ஜனக வேறாக் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் இடம்பெற்றுள்ளனர். (த)

# கலப்பு நீதிமன்று அமைப்பது நீதித்துறைக்கு அவமரியாதை

## கவலைப்படுகிறார் நாமல்

கலப்பு நீதிமன்றம் அமைக்கும் நடவடிக்கையானது உள்நாட்டு நீதிமன்றக் கட்டமைப்பை அவமரியாதை செய்வதாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

முகநூலில் கேள்விகளுக்குப் பதிலளித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்றமொன்றை அமைத்து அதன் ஊடாக விசாரணை நடத்துவது உள்நாட்டு நீதிமன்றக் கட்டமைப்பை இழிவுபடுத்தும் வகையிலானது.

இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்புக்கு இவ்வாறான விசாரணைகளை நடத்தும் இயலுமை உண்டு. கலப்பு நீதிமன்றம் நாட்டின் இறைமையை மோசமாகப் பாதிக்கும்.

விசாரணைகள் பக்கச்சார்பற்றதும், வெளிப்படைத்தன்மையுடையதுமாக அமையவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடி வென்றது சேனநாயக்க சுப்பர் ஓவர் வரை நீடித்தது ஆட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 9

முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணிக்கும் மலியதேவ கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில் சுப்பர் ஓவரில் வெற்றிபெற்றது டீ.எஸ்.சேனநாயக்கா கல்லூரி அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மலியதேவா கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய சேனநாயக்க கல்லூரி அணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினார்கள் விஜயசேகராவும் குணசேகராவும். அணியின் ஓட்டங்களின் எண்ணிக்கை இரண்டாக இருந்த பொழுதுடக்கில் வெளியேறினார் குணசேகர. மூன்றாம் நிலை வீரரான நாணயக்காராவும் நிலைக்கவில்லை. தற்பொழுது சேனநாயக்க கல்லூரி 34-2. ஒரு முனையில் நம்பிக்கை தந்துகொண்டிருந்த அணித்தலைவர் விஜயசேகரவுடன் இணைந்தார் அமீன். சொல்லிக்கொள்ளும் படியான இணைப்பாட்டம். இருப்பினும் நீடிக்கவில்லை 15 ஓட்டங்களுடன் அமீன் வெளியேற மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் விஜயசேகர. மத்தி வரிசையில் டானியேல் நிலைத்து நின்று 26 ஓட்டங்களைச் சேர்த்தார் அதற்கேற்ப 35 பந்துகளையும் வீணடிக்கவே செய்தார். 61 ஓட்டங்களுடன் (37 பந்துகள்) வீழ்ந்தார் விஜயசேகர. பின்வரிசையில் வேடிக்கை காட்டினார் கௌசல்யா. முடிவில் சேனநாயக்க கல்லூரி 147-9. பந்துவீச்சில் மலியதேவ கல்லூரி சார்பாக திஸ்ஸநாயக்க 4 இலக்குகளைக் கைப்பற்றினார்.

எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மலியதேவ கல்லூரி அணிக்கு ஆரம்ப வீரர் இருவரும் சிறந்த அடித்தளம் அமைக்க வில்லை. ஆரம்ப வீரர்களான ரணதுங்க 4 ஓட்டங்களுடனும் பிறேமரட்ன 2 ஓட்டங்களுடனும் ஓட்டம் பிடித்தனர். மூன்றாம் நிலை வீரரான பெரேராவால் முடிந்தது 16 ஓட்டங்கள் மட்டுமே. நிசங்க பதின்மத்துடன் பவிலியன் திரும்பினார். சோமரத்ன 9 பந்துகளில் 22 ஓட்டங்களை விளாசி நெருக்கடியை ஏற்படுத்திவிட்டு ஆட்டமிழக்க இறுதிப் பத்துப் பந்துப்பரிமாற்றத்தில் 68 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. ஓட்டங்கள் பெறப்பட்ட வேகத்துக்கு ஏற்ப இலக்குகளும் சரிந்து கொண்டி ருந்தன. பின்வரிசை வீரர் திசநா யக்க தனது அதிரடியில் சேனநா யக்க கல்லூரியைக் க தி க ல ங் க ச் செய்துகொண்டிருந்தார். இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 10 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலையில் 9 ஓட்டங்களைப் பெற்று ஆட்டம் சமநிலையான நிலையில் அனைத்து இலக்குகளையும் இழந்தது மலிய தேவ கல்லூரி.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய மலியதேவ கல்லூரி 17 ஓட்டங்களைக் குவித்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சேனநாயக்க கல்லூரி அணி 18 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (ம)

## முரளி கிண்ணத் தொடரில் இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக்.9

நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களின் விவரம்.

***ஆண்கள் பிரிவு***

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மொனராகலை இணைந்த அணியை எதிர்த்து கொழும்பு டிஎஸ். சேனநாயக்க கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.40 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ். மாவட்ட இணைந்த அணியை எதிர்த்து மலிகதேவ கல்லூரி அணி மோதவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் இணைந்த அணியை எதிர்த்து நுவரேலியா, கேகாலை மாவட்டங்களின் இணைந்த அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து டெப்ரவேவா கல்லூரி அணி மோதவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில்சுவதேசபாடசாலைஇணைந்த அணியை எதிர்த்து கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து வத்தளை சென்.அன்ரனிஸ் கல்லூரி மோதவுள்ளது.

ஒட்டுசுட்டான் மகாவித்தியால மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தர்மராஜா கல்லூரி அணியை எதிர்த்து பி.டி.எஸ். குலரெத்தின கல்லூரி அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றிச்மன் கல்லூரி அணியை எதிர்த்து மன்னார், வவுனியா மாவட்டங்களின் இணைந்த அணி மோதவுள்ளது.

***பெண்கள் பிரிவு***

மங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டங்களில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பதுளை மகளிர் அணியை எதிர்த்து சக்தி மகளிர் 'ஏ' அணி மோதவுள்ளது. முற்பகல் 11.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலன்றுவை மகளிர் அணியை எதிர்த்து கொழும்பு மகளிர் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாத்தளை மகளிர் அணியை எதிர்த்து வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் இணைந்த மகளிர் அணி மோதவுள்ளது. (ம-23)



தேசிய மட்ட எறிபந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கத்தை வென்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வீரர்களை குறித்த கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் விழா எடுத்துக் கௌரவித்துள்ளது. (ம-23)

## இணைந்த மகளிர் கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 9

முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் பதுளை மகளிர் கல்லூரியை எதிர்த்து இணைந்த மகளிர் கல்லூரிகளின் அணி மோதிய நேற்றைய ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பதுளை மகளிர் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 72 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கஜானி 23 ஓட்டங்களைக் குவித்தார். பந்து வீச்சில் இணைந்த மகளிர் கல்லூரி அணி சார்பாக அனாலி, மாதவி இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். 73 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இணைந்த மகளிர் கல்லூரி அணி 10.5 பந்துப்பரிமாற்றங்களிலேயே இலக்கை அடைந்து 6 இலக்குகளால் வெற்றியீட்டியது. அதிகபட்சமாக அனாலி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் பதுளை மகளிர் கல்லூரி அணி சார்பில் கஜானி ஓர் இலக்கைக் கைப்பற்றினார். (ம)

## டெப்ரவேவாவிடம் வீழ்ந்தது மலையக இணைந்த அணி

யாழ்ப்பாணம், ஒக். 9

முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற மலையக இணைந்த அணிக்கும் டெப்ரவேவா கல்லூரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மலையக இணைந்த அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து டெப்ரவேவாவின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் 15.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 49 ஓட் டங்களை மட்டுமே பெற்றது. அதிக பட்சமாக தீக்சனா 17 ஓட்டங் களைப் பெற்றார். இரட்டை இலக்கத்தைத் தாண்டிய வீரர் இவர் மட் டுமே. [illegible] 4 இலக்குகளையும் சசிந்தா 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

50 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டெப்ரவேவா கல்லூரி அணி 9.1 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டுமே இழந்து இலக்கை அடைந்து 8 இலக்குகளால் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக லக்மல் 13 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் மலை யக இணைந்த அணி சார்பாக அகலன்கா, கோபினாத் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்.ஜோன்ஸ் பந்துவீச்சாளர்கள் அசத்தல்

## சுருண்டது மட்டு- திருமலை இணைந்த அணி





யாழ்ப்பாணம், ஒக். 9

முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரியும் திருகோணமலை, மட்டக்களப்புமாவட்டங்களின்இணைந்த அணியும் மோதிய ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானிக்க அந்த அணியின் முன்னிலை வீரர்கள் நால்வரும் பதின்ம ஓட்டங்களைத் தாண்டவில்லை. மத்திய வரிசை வீரர்களான அருளானந்தன், அமரசேன வசந்தன் மூவரும் மட்டுமே இரட்டை எண்களை எட்டினர். முடிவில் சென்.ஜோன்ஸ் 96 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக வசந்தன் 19 ஓட்டங்களையும் அமரசேன 18 ஓட்டங்களையும் அருளானந்தன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் இணைந்த அணி சார்பாக தேனுராதன் 3 இலக்குகளையும் மதுசன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் இணைந்த அணிக்கு எந்த வீரர்களும்நிலைத்துநிற்பதாயில்லை. பதின்மத்தை எட்ட படாதபாடு பட்டனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 19 ஆக இருந்த பொழுது மட்டுமே நான்கு இலக்குகள் சரிந்தன. 10ஆம் நிலை வீரர் சிகான் மட்டும் அதிகபட்சமாக 11 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் 79 ஓட்டங்களில் சுருண்டு 17 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் இணை ந்த அணி. பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக பிரேமானந்தம், ஜெயக்குமார், வசந்தன் மூவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-21)

## குலரத்ன கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 9

முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற பி.டி.எஸ்.குலரத்ன கல்லூரி அணிக்கும் மன்னார், வவுனியா மாவட்டங்களின் இணைந்த அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குலரத்ன கல்லூரி அணி 19 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குலரத்ன கல்லூரி அணி 16 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக ஆரம்ப வீரரும் அணித்தலைவருமான சமீர 72 ஓட்டங்களைக் (35 பந்துகளில்) குவித்தார். பந்துவீச்சில் மன்னார், வவுனியாமாவட்டங்களின்இணைந்த அணி சார்பாக ருசந்தன், டெஸ்மிகாந் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

140 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார், வவுனியா மாவட்டங்களின் இணைந்த அணி 18.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 120 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக ஆரம்ப வீரரான கணேஸ்வரன் 30 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் குலரத்ன கல்லூரி சார்பாக சரங்க, சமீர இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். (ம)

## ரிச்மன்ட் தோல்வி

Murali Cup

யாழ்ப்பாணம், ஒக். 9

நடப்பு வருடத்தின் முரளி கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் ரிச்மன்ட் கல்லூரியை 3 இலக்குகளால் வீழ்த்தியது தர்மராஜா கல்லூரி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ரிச்மன்ட் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் ஓட்டம் 32ஆக இருந்த பொழுதே அந்த அணியின் ஆரம்ப வீரர்கள் இருவரும் ஆட்டமிழந்திருந்தனர். ஏற்பட்ட சரிவில் இருந்து தனித்து நின்று அணியை மீட்டார் மூன்றாம் நிலை வீரரான மென்டிஸ். மத்திய வரிசை வீரர்களான பிம்சரா, சிறி வர்த்தன இருவரதும் சுமாரான பங்களிப்புடன் அரைச்சதம் கடந்தார் மென்டிஸ். 85 ஓட்டங்கள் மென்டிஸால் குவிக்கப்பட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ரிச்மன்ட் கல்லூரி 5 இலக்குகள் இழப்புக்கு 164 ஓட்டங்களைக் குவித்தது. பந்துவீச்சில் தர்மராஜா கல்லூரி சார்பாக சமரக்கோன் 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தர்மராஜா கல்லூரி அணிக்கு ஆரம்பம் பக்காவாக அமைந்தது. இலக்குகள் இழப்பில்லாமல் அணி 50 ஓட்டங்களை எட்டியது. அரைச்சதம் கடந்தார் திஸ்ஸநாயக்க. 6 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவற விட்டார் சக ஆரம்ப வீரரான ரட்நாயக்க. மத்திய வரிசை வீரர்களின் சுமாரான பங்களிப்புடன் ஒரு பந்து மீதமிருக்க ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தது தர்மராஜா கல்லூரி. பந்துவீச்சில் ரிச்மன்ட் கல்லூரி சார்பாக கவீன் 2 இலக்குகளை வீழ்த்தினார். (ம)

## துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றினர்

## மொனராகலையிடம் வீழ்ந்தது யாழ்.

யாழ்ப்பாணம், ஒக். 9

முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற மொனராகலை இணைந்த அணியும் யாழ். மாவட்ட இணைந்தஅணியும்மோதிய ஆட்டத்தில் மொனராகலை மாவட்ட இணைந்த அணி 24 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.



நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மொனராகலை மாவட்ட இணைந்த அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 117 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக நுவான் 28 ஓட்டங்களையும் ரணுக்க 21 ஓட்டங்களையும்பெற்றனர். பந்துவீச்சில் யாழ். மாவட்ட இணைந்த அணி சார்பாக தசோபன் அதிகபட்சமாக 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட இணைந்த அணி ஆரம்பம் மற்றும் முன்னிலை வீரர்களின் தொடர் சொதப்பலால் ஆரம்பம் முதலே பின்னடைவை எதிர் கொண்டது. இதே நிலைமை நீடிக்க முடிவில் 93 ஓட்டங்களில் சுருண்டது. யாழின் சார்பாக அதிகபட்சமாக கிருபாகரன் 25 ஓட்டங்களையும் பிரதீபன் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மொனராகலை மாவட்ட இணைந்த அணி சார்பாக பெர்னான்டோ மற்றும் பயமுல் இருவரும் தலா 3 இலக்குகளையும் சத்துரங்க 2 இலக்குகளையும் சாந்தரூபன், அசிந்த இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம)

## சீனிகம மகளிர் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 9

நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் வடக்கு, கிழக்கு இணைந்த மகளிர் அணியும் சீனிகம மகளிர் அணியும் மோதிய ஆட்டத்தில் வடக்கு, கிழக்கு இணைந்த மகளிர் அணி படுதோல்வியடைந்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வடக்கு, கிழக்கு இணைந்த மகளிர் அணி 12 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் பறி கொடுத்து 38 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. கிட்டத்தட்ட வெற்றியென்ற நிலைப்பாட்டில் பதிலுக்குதுடுப்பெடுத்தாடிய சீனிகம மகளிர் அணி மூன்றே பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகள் எதனையும் இழக்காமல் இலக்கை அடைந்து 10 இலக்குகளால் வெற்றியீட்டியது. (ம)

## கிளி., முல்லை. இணைந்த அணிக்கு வெற்றி

## வீழ்ந்தது வத்தளை சென்.அன்ரனிஸ் கல்லூரி

யாழ்ப்பாணம், ஒக். 9

முரளி கிண்ணத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற வத்தளை சென். அன்ரனிஸ் கல்லூரிக்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களின் இணைந்த அணி 5 இலக்குகளால் வெற்றிபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.அன்ரனிஸ் முதலில் துடுப்பெடுத்தாடத்தீர்மானித்து 19.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரரான மதுபட்சனா அதிகபட்சமாக 28 ஓட்டங்களைப் பெற்றார். இவரைத் தவிர இரட்டை எண்ணை எட்டியது 10ஆம் நிலை வீரரான கனிப்டீன் மட்டுமே. இவர் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களின் இணைந்த அணி சார்பாக அஞ்சயன், நிதுசன் இருவரும் தலா 3 இலக்குகளையும் பிரணவன் 2 இலக்குகளையும் பிரதீபன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

மிக இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களின் இணைந்த அணியின் தொடக்கம் சொதப்பலாக அமைந்தாலும் ரஜீவனின் சிறப்பான செயற்பாட்டால் அந்த அணி 17.5 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்து வெற்றியீட்டியது. அதிகபட்சமாக ரஜீவன் 42 ஓட்டங்களையும் விக்சன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்.அன்ரனிஸ் கல்லூரி அணி சார்பாக பெரேரா, முனிர், எஸ்.பிரசன்னா, தாரகா, டி.பிரசன்னா ஐவரும் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். (ம)

## கிண்ணங்களை அள்ளியது கரவெட்டி ஞானம்ஸ் வி.க.

யாழ்ப்பாணம், ஒக். 9

மாதனை விளையாட்டுக்கழகம் 5 பந்துப்பரிமாற்றங்கள், 10 பந்துப்பரிமாற்றங்கள் என இருபிரிவாக நடத்திய துடுப்பாட்டத் தொடரில் இரு பிரிவிலும் கிண்ணங்களைத் தனதாக்கியது கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம்.

**5 பந்துப்பரிமாற்றங்கள்**

5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் யாழ். கொட்டடி இளந்தளிர் விளையாட்டுக்கழகமும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பாடத் தீர்மானித்து 27 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

28 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய ஞானம்ஸ் அணி 3.3 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து இலக்கை அடைந்தது.

**10 பந்துப்பரிமாற்றங்கள்**

தொடர்ந்து இடம்பெற்ற 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை வீனஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வீனஸ் அணி 9.1 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது.

45 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் 6.1 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து இலக்கினை அடைந்தது. (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. , இங்கிலாந்து வரிசையில் வோர்ணின் இலங்கை அணி

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளைத் தொடர்ந்து சிறந்த இலங்கை அணியை தெரிவுசெய்துள்ளார் சேன் வோர்ண். வோர்ணின் அபிமான இலங்கை அணியில் உலகக்கிண்ண நாயகன் ரணதுங்க இடம்பெறவில்லை. ஆஸ்திரேலிய அணியின் சுழல் ஜாம்பவான் சேன் வோர்ண் தான் விளையாடிய காலத்தின் சிறந்த வீரர்களை வைத்து தனது கனவு அணிகளை அறிவித்து வருகிறார். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளை அறிவித்திருந்த வோர்ண் தற்பொழுது இலங்கை அணியையும் அறிவித்துள்ளார். இந்த அணிக்கு ஜெயவர்தன தலைமை தாங்குகிறார்.



வோர்ணின் இலங்கை அணி:– அத்தப்பத்து, சனத் ஜெயசூரிய, குருசின்கா, குமார் சங்கக்காரா, அரவிந்த டி சில்வா, ஜெயவர்த்தன (அணித்தலைவர்), டில்சான், வாஸ், மலிங்க, முரளிதரன், சொய்சா.


**Dubai நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு**

Dubai நாட்டில் உள்ள Global Shiping நிறுவனத்தில்

*Packing Helpers- 925+OT
* Customer care Executive- 1800+OT
* Forclipe Operator- 1200+OT
*Pest Control Supervisor 3500+OT
* Pest Control Technician 1200+OT
* Cleaning Supervisor 3000+OT
* Cleaners 925+OT

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். எதிர்வரும் 10ஆம், 13ஆம் திகதிகளில் டுபாய் நாட்டவர்களால் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

உடன் தொடர்பு கொள்ள Lanka voice
T.P: 077 792 9475
Capital Recruitment International (Pvt) Ltd
No: 130 3/1 3rd Floor, Grand pass Rd
Colombo- 14
E-mail : - lankavoicejobs@gmail. com
L.L. No: 2248

**Brighten Economics Hall**
304, Stanly Rd.
(Near D.M.I)

**BAI - ENGLISH**
Revision & paper
(BA, Dip in Eng sp.Trd Eng)
Sat/Sun 11-12, 12-1, 1-2, 3-4

தமிழ் :
K.தர்மராஜா MA
Pol.Sci :
C.இளங்கோ MA
ஆரம்பம் :
நாளை 10/10.2015

**ஆங்கிலம்**

இம்முறை A/L , O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், இணைய முடியும்.

பாடப்புத்தகங்கள், சான்றிதழ் மற்றும் அனுமதி என்பன முற்றிலும் இலவசம்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 10.10.2015 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வார நாள் ( திங்கள், புதன் ) பிரிவுகள் ஆரம்பம் 12. 10. 2015
1. காலை 8.00 – 10.00 2. காலை 10.00 – 12.00

*** 11.10.2015 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு மட்டுமே மேற்குறிப்பிட்டவை இலவசமாக வழங்கப்படும்!

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567


## மரண அறிவித்தல்

### திருமதி ஸ்ரெல்லா றெபேக்கா விஜயரெட்ணம் (வவா)



91, கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரெல்லா றெபேக்கா விஜயரெட்ணம் 07.10.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் - சிசிலியா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற டானியல் எட்வின் விஜயரெட்ணம் தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சாவகச்சேரி) அன்பு மனைவியும், மேரிகெலன் ஜெயசீலியின் (பேபி) அன்புச் சகோ தரியும் நந்திவர்மன் (ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்), சோழியவர்மன் (டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றோஸ்மேரியின் (ஆசிரியர் - சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர்) அன்பு மாமி யாரும், றோகித், றோகன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (09.10.2015) வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து திருப்பலிக்காக புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

91, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
0750441011, 0779493308

தகவல் :
பிள்ளைகள், மருமகன்.


**Jaffna Central College Education Care Trust**
**யாழ். மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்**

தரம் 6 முதல் A/L வரை தமது கல்வியைத் தொடரும் 20 மாணவர்களுக்கு அனுசரணை

யாழ் மத்திய கல்லூரி ஆரம்பித்து 200 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இந்தத் திட்டம் எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

* 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்
* நிலையத்தால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பறைகள் வழங்கப்படும்.
* புலமைப்பரிசில் வெகுமதிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதாந்தம் தலா 1200 ரூபா.
* விண்ணப்பதாரிகள் 170 புள்ளிகளுக்கு மேல் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி : 30.11.2015
தொடர்பு : S.Sukirathan - 021 2222184
விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
யாழ்.மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

**போட்டிப் பரீட்சைகளுக்கான கருத்தரங்குகள்**

31/10 நடைபெறவுள்ள
பதிவாளர் பரீட்சைக்கு
சனி, ஞாயிறு
2.00 மணி > 5.00 மணிவரை
21/11 நடைபெறவுள்ள
அதிபர் சேவை தரம் - 3
பரீட்சைக்கு
பிரிவு I
ஒவ்வொரு ஞாயிறும்
மு.ப. 10.00 > 4.00 மணிவரை
பிரிவு II
திங்கள், செவ்வாய்
புதன் பி.ப 05 மணி
தொடக்கம் 7.00 மணிவரை
T.P: 0766883394
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி,
கொமர்ஷல் வங்கி மேல்மாடியில்)

குறைந்தளவான கட்டணங்களுடன்
சுயதொழில் வாய்ப்புகளை கொண்ட கற்கைநெறிகள்
New Gateway Tech இடமிருந்து....



AUTODESK
AUTOCAD

கட்டட நிர்மாணத்துறை
மற்றும்
பொறியியல் துறைகளில்
மிக முக்கியமான மென்பொருள்

Autodesk



விரும்பிய நேரகுசியுடன் ஆரம்பத்திலிருந்து மென்பொருளை முழுமையாக கையாளக்கூடிய நிலை வரை பயிற்சிகள் வழங்கப்படும். AutoCAD for Beginners மற்றும் ஏற்கனவே மென்பொருள் பற்றி அறிந்தவர்கள் பயிலக்கூடிய வகையில் Advanced AutoCAD கற்கை நெறிகளும் நடைபெறுகின்றன.

NGT GATEWAY
No. 39, College Road, Neeraviyadi, Jaffna.

Adress : 39, College Road, Neeraviyadi, Jaffna.
Telephone : 021 493 6666 / 0716 362 362

(C/18735)(10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.